KALKI 22.10.2000 ரூ. 5.00

கல்கி



விழாக்காலம் கோ-ஆப்டெக்ஸ் காலம்



- தமிழக அரசு மற்றும் பொது நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு ஒரு மாத சம்பளம் வரை வட்டியில்லாத கடன் வசதி
- பட்டுப்புடவை சேமிப்புத் திட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறுவீர்
- தீபாவளி வரை அனைத்து விடுமுறை நாட்களிலும் விற்பனை உண்டு

பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை

Visit us : www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com /www.webulagam.com


வண்ணம்
வசீகரம்
தெய்வீகம்..!
வாங்கத் தவறாதீர்கள்
கல்கி தீபாவளி மலர்-2000
விலை ரூ. 60/-
இன்றே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்... அல்லது கொரியர் மூலம் பெற ரூ. 100 அனுப்புங்கள்.
மானேஜர்,
கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097
கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

“கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய். முதல்வர் கருணாநிதி அறிவிப்பு!” என்று பத்திரிகைகளில் செய்தி வெளியானது. பரவாயில்லை. விவசாயிகளின் கோரிக்கை ஒன்று நிறைவேறி விட்டது என நினைத்திருந்தேன். உள்ளே படித்துப் பார்த்தால்தான் மர்மம் மறைந்திருந்தது. அதாவது, பத்து சதவீத சர்க்கரைச் சத்துள்ள கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் என்று விளக்கம் தரப்பட்டிருந்தது. பிழி திறனில் பத்து சதவீத சர்க்கரைச் சத்துள்ள கரும்புகள் தமிழகத்தில் உற்பத்தியாவதில்லை. இந்தியாவிலேயே அந்தளவு பிழிதிறனுள்ள கரும்புகள் இரண்டே மாநிலத்தில்தான் விளைகின்றன. ஒன்று அரியானா. இன்னொன்று பஞ்சாப். இப்பொழுது தமிழ்நாட்டிற்கு வருவோம். தமிழக கரும்பு விவசாயிகள் அனைவராலும் அந்தப் பயனை அடைந்து விட முடியாது. இது எப்படி இருக்கிறது என்றால், இவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் ஒரு அறிவிப்புச் செய்கிறேன். இங்குள்ளவர்களில் அதிகமான உயரம் உள்ள மனிதர்களுக்கு ஆயிரம் ரூபாய் அளிக்கத் தயாராய் உள்ளேன். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை. அவர் ஏழே முக்கால் அடி உயரம் உள்ளவராக இருக்க வேண்டும்! உங்களில் எத்தனை பேர் என்னிடம் வந்து ஆயிரம் ரூபாய் பெற்றிட முடியும்! சொல்லுங்கள்!”

– 6.10.2000 இரவு ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற அதிமுக பொதுக்கூட்டத்தில் கா. காளிமுத்து.



சொன்னது

காளிமுத்து சொல்வது சரியா? பிரபல விவசாய நிபுணர் எஸ்.எஸ். நாகராஜனிடம் கேட்டோம்.

“தமிழகத்தில் விளையும் கரும்பு வகைகளில் பிழி திறனில் பத்து சதவீத சர்க்கரைச் சத்துள்ள ஒரே ரகம் மஞ்சுளா. ஆனால் சிகப்பழுகல் நோய் உள்ளிட்ட பல நோய்கள் இந்த ரகத்தைத் தாக்குவதால் சிறு மற்றும் குறு விவசாயிகள் இந்த ரகத்தைப் பயிர் செய்வதில்லை. மஞ்சுளா ரகத்தின் விதைக் கரணைகள் தற்போது கிடைத்தாலும், அதை நடவு செய்து, பராமரிக்க தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. மதுரை, அலங்காநல்லூரில் உள்ள விவசாயிகள், முழுக்க முழுக்கக் கரும்பை மட்டுமே பயிர் செய்து வந்தார்கள். ஆனால் கடந்த ஐந்தாண்டுகளாக, அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நெல் சாகுபடிக்கு மாறி வந்து கொண்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்று அவர்களையே கேட்டேன்.

சரிதானா?

அவர்கள் அதிர்ச்சியோடு சொல்லும் முதல் விஷயம், 'நிமட்டோடு' எனப்படும் நூற்புழு. நூற்புழுத் தாக்குதலில் இருந்து அவர்களால் மீண்டு வர முடியவில்லை. இது தவிர இடைக்கணு புழு, செவ்வழுகல் நோய் இரண்டும் கூடுதலாகச் சேர்ந்துக் கொள்கின்றன. இவற்றுக்கு, காலத்தே இவர்களால் மருந்து அடித்துக் கட்டுப்படுத்த முடியவில்லை. இரண்டாவது பெரிய காரணம் சர்க்கரை ஆலையிலிருந்து கரும்பிற்குத் தாமதமாகக் கிடைக்கும் பணம். பிள்ளைகளின் கல்விக் கட்டாயம், வீட்டு விஷேசங்கள் போன்றவற்றை, கரும்பு பணம் மூலம் சமாளித்து விடலாம் என்று திட்டம் போடுகின்றனர். ஆனால் காலதாமதமாகக் கிடைக்கும் பணத்தால், அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நெல் என்றால், பணம் குறைவாகக் கிடைத்தாலும் அறுவடை முடிந்த கையோடு கிடைத்து விடுவதால் நெல்லே பாதுகாப்பு என நினைக்கத் தொடங்கி விட்டார்கள்.

மேலும் கரும்பு வெட்ட, ஆலையிருந்து உத்தரவு காலதாமதமாக வருவதும், வெட்டுவதற்கு ஆள் கிடைக்காததும், கரும்பை மேலும் தரம் குறைத்து விடுகிறது. இதனால் மஞ்களா ரகத்தைப் பயிர் செய்தால் கூட, பத்து சதவிகித சர்க்கரை சத்து காட்ட முடியுமா என்பது சந்தேகமே. ஆனால் பிழி திறனில் பத்து சதவிகித சர்க்கரைச் சத்து உள்ள கரும்பு ரகங்களை அறிவியல் பூர்வமாக நிருபித்திருக்கிறார்கள். எனவே அரசு சொல்வதில் தவறில்லை. அதே நேரத்தில் விவசாயிகளின் பார்வையில் காளிமுத்து சொல்வதிலும் தவறில்லை என்பதுதான் எனது கருத்து. எப்படியாயினும் பாதிக்கப்படுவது விவசாயிகள்தான். அரசோ, காளிமுத்தோ, சர்க்கரை ஆலை முதலாளிகளோ அல்ல!''

— ஜெயன்

படம்: ஸ்ரீஹரி



''தீபாவளிக்கு என் கணவர் நிறைய வாங்கினாரு...''

''ஸ்வீட்டா...? காரமா...?''

''கடன்!''

— மலர் சூர்யா



''உங்க பையன் கிரிக்கெட்ல பெரிய ஆளா வருவான்னு எப்படி சொல்றீங்க...?''

''பாருங்க! இந்த பட்டாசு இப்ப வெடிக்குமா? வெடிக்காதான்னு 'பெட்' கட்டிட்டிருக்கானே!''

– ரெவி

''அந்த பிளாஸ்டிக் சர்ஜன்கிட்ட கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும்...''

"எப்படி சொல்றீங்க?"

''டாக்டர், உடம்புல சுருக்கம் விழ ஆரம்பிச்சுடுச்சுன்னு சொன்னதுக்கு அயர்ன் பாக்ஸை எடுத்துட்டார்!''

— [illegible] தேவா



'**யா**ர் கோடீஸ்வரர் ஆகப் போகிறார்?' (கோன் பனேகா கரோர்பதி?) நிகழ்ச்சியைப் பார்க்கும் கோடானு கோடி மக்களும், 'யாராவது கோடீஸ்வரர் ஆக மாட்டார்களா?' என்று காத்துக் காத்து விழிகள் பூத்துப் போன தருணத்தில், "இதோ நான் ஆகி விட்டேன்" என்று எல்லோரையும் வியக்கச் செய்தவர் ஹர்ஷவர்தன் நவாதே! (இதற்கு முன் பலமுறை எந்த பெண்மணியோ கோடீஸ்வரியாகிவிட்டதாக மும்பையில் எக்கச்சக்க வதந்திகள்.)

பதினைந்து கேள்விகளுக்கும் சரியான பதில் சொல்லி, ஒன்றுக்குப் பின்னால் ஏழு சுழிகள் போட்ட ரொக்கம் கொண்ட செக்கை அமிதாப் திருக்கரங்களிலிருந்து பெற்று, தன் சுழியை நேராக்கிக் கொண்ட இந்த மும்பை இளைஞர், முதலில், அந்த நிகழ்ச்சி ஒலிபரப்பாகும்வரை (அக்.19) வாயே திறக்கப் போவதில்லை என்று சொல்லப்பட்டு வந்தது. 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'வுக்காக சில நாட்கள் முன்பு வாயைத் திறந்தவருக்கு, திறந்த வாயை மூட, 'டைமே' கிடைக்காமல், இந்தியாவிலுள்ள டீவி சானல்காரர்களும் பத்திரிகையாளர்களும் மொய்க்கிறார்களாம்.

இவரது குடும்பத்தின் முதல் கோடீஸ்வரரே இவர் தானாம். தந்தை வினாயக் நவாதே என்னவோ டெபுடி கமிஷனர் ஆஃப் போலீசாக (மும்பை - சி.பி.ஜ) பணியாற்றி ஓய்வு பெற்றவர்; தாய் "ஹவுஸ் ஒய்ஃப்!" இந்த இருபத்தியேழு வயது இளைஞர் வசிக்கும், "இந்திரதீப் சொஸைட்டி", திடீரென்று இந்திர லோகமாகவே மாறி விட்டது. வாழ்த்தவும் வினவவும் வருவோரும் போவோருமாக ஒரே தீபாவளி களைதான்!

பள்ளிப் படிப்பை டில்லியிலுள்ள சின்மயா வித்யாலயாவில் ஆரம்பித்தவர், அதை முடித்தது மும்பை காட்பேகாபரிலுள்ள ஃபாத்திமா ஸ்கூலில். ("ஸ்கூலில் அதிகமாக பெண்களுடனெல்லாம் பேச மாட்டார்; 'கொயட்டாக' இருப்பார்; இவரது பொது அறிவு பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரியாது" என்று கூடப் படித்த தோழி சந்தியா சொல்கிறார்)

கல்லூரிப் படிப்பை முடித்த பிறகு ஐ.ஏ.எஸ் பரீட்சைக்கென்று தீவிரமாகப் படிக்க ஆரம்பித்திருக்கிறார். இதுவரை இரண்டு முறை எழுதியும் வெற்றி கிட்டவில்லை; ஆனால் அதற்காக உழைத்ததுப் படித்தது வீண் போகாமல், KBC ஷோவில், பதில் சொல்ல உதவியிருக்கிறது. "கேள்விகள் ரொம்ப சுலபம் என்றெல்லாமில்லை; நான் பட்டென்று பதில் கூறவுமில்லை; நன்றாக யோசித்துத்தான் பதில் சொன்னேன்" என்கிறார்.

இவர் கோடீஸ்வரனான அந்தக் கணத்தை மறக்கவே முடியாதென்கிறார். ஒரு நிமிஷம் இவருக்கு ஒன்றுமே புரியவில்லையாம்; சுற்றியிருந்த பார்வையாளர் கூட்டமெல்லாம் ஏகமாக ஆரவாரித்து, இவரிடம் கைகுலுக்கி, ஆட்டோகிராஃப் வாங்கியது, சொப்பனம் போலிருந்ததாம். அமிதாப்பே இவரைக் கட்டித் தழுவி வாழ்த்தியபோதுதான் ஒரு நிலைக்கு வந்தாராம்.

கோடீஸ்வரன் ஆனதைக் காட்டிலும், திடீரென்று இப்படிப் பிரபலமானதுதான், ஹர்ஷவர்தனை அதிகமாகத் தாக்கியிருக்கிறது. "செலிப்ரட்டி ஸ்டேடஸால் ஒரு பக்கம் சந்தோஷமாகத்தானிருக்கிறது; ஆனால் மறுபுறம் ஓயாத (அன்பு) தொல்லையாகவும் இருக்கிறது; என் வீட்டிலிருப்பவர்கள் மெது மெதுவாக இந்தச் சூழலுக்குப் பழகிக் கொள்கிறார்கள்" என்கிறார்.

இவருக்குப் பிடித்த பொழுதுபோக்கு...? பாடி - பில்டிங்! போலீஸ் குடும்பம் என்பதால் எல்லோருமே 'ஃபிட்னஸ் ஃப்ரீக்'ஸாம்! இப்போதும், 'கொஞ்சம் நேரம் கிடைத்தாலும், உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்து விடுவேன்' என்கிறார்.

பணம் கைக்கு வந்ததும் அதை என்ன செய்வது என்பது பெரிய பிரச்னையாயிருக்குமே? "புத்திசாலித்தனமாக இன்வெஸ்ட் செய்ய வேண்டும்... அதைப் பற்றி இன்னும் ஒன்றும் நிச்சயிக்கவில்லை; அதைப் பெரியவர்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்கிறார் பெரிய மனுஷத்தனமாய்.

புதுசாக பாந்த்ராவிலோ, வர்ஸோவாவிலோ வீடு வாங்கிக் கொண்டு குடி பெயரும் உத்தேசமெல்லாம் இல்லையாம்! "2001 வந்தால், இந்த வீட்டுக்கு வந்து 30 வருடங்கள் ஆகிவிடும். இதுவே ராசியான வீடுதான்; என்னை குரோர்பதி ஆக்கியுள்ளதே?" என்கிறார் யதார்த்தமாக.

முதல்



• அம்மா அப்பாவுடன் ஹர்ஷவர்தன்

இவருக்குத் தெய்வ நம்பிக்கை நிறைய இருக்கிறது; ஆனால் குருட்டு அதிர்ஷ்டத்தில் என்னளவும் இல்லை; "நிறைய உழைக்க வேண்டும்; 'உழைப்பு ஒன்று தான் ஊதியம் தரும்; நான் வென்றதை அதிர்ஷ்டம் என்று சொல்ல மாட்டேன்'' என்கிறார்.

இவர் நாடிப் போகாமலேயே, இவர் வீடு தேடி 'மாடலிங்' வாய்ப்புகளும், டீ.வி. ஸீரியல்களில் நடிக்க அழைப்புகளும் வருகின்றனவே? அது அதிர்ஷ்டம் இல்லையா?

"கஷ்டப்பட்டு பாடி - பில்டிங் செய்திருக்கிறேனல்லவா? அதற்கான பலன்'' என்கிறார் சிரித்துக் கொண்டே. ஆனால், இந்த மாயா ஜாலமெல்லாம கவர்ந்திழுத்தாலும், ஐ.ஏ.எஸ் பரீட்சை எழுதுவதை நிறுத்தப் போவதில்லையாம்! ஐ.பி.எஸ்ஸில் சேர வேண்டுமென்பதுதான் லட்சியமாம்!

குரோர்பதி!

'...ஓ.கே சன் டீ.வி.யில் இது போல் ஒரு க்விஸ் வரப் போகிறது; உங்களைப் போல் கோடீஸ்வரராக எங்களுக்கு ஏதாவது டிப்ஸ்...' என்றபோது, "சரித்திரம், பூகோளம் இரண்டிலும் கவனமாக இருங்கள்; தவறாமல் செய்தித் தாள்கள், பத்திரிகைகள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் படியுங்கள்; முக்கியமான நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்புகளை - காலம், நபர்கள் போன்றது... மனசிலே பதித்துக் கொள்ளுங்கள்! அவ்வளவுதான்...'' என முடிக்கிறார் அனாயாசமாக!

சரி... ஒவ்வொரு இதழும் உங்களின் மேன்மைக்காக வரும் மாகஸீன்களைப் படிக்க ஆரம்பித்து விட்டீர்களா?

— ஜெயஸ்ரீராஜ்

✉ த.மா.கா.வின் 'சிறை நிரப்பும் போராட்டம் தேவையற்றது எனக் கூறிய அதே நேரத்தில், அவர்களின் பதினைந்து அம்சக் கோரிக்கைகளில், கவனிக்க வேண்டியதைக் கட்டாயம் கவனிக்க வேண்டும் என அரசுக்கும் எடுத்துக் கூறி, தலையங்கத்தை மிக நடுநிலையாக்கி இருந்தீர்கள்!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.



✉ 'சின்ன சிங்கப்பூர்' எனச் செல்லமாக அழைக்கப்படும் கூத்தாநல்லூரின் அருமை பெருமைகள் பற்றி அறிந்து மெய் சிலிர்த்தது. நம் நாட்டின் ஒவ்வொரு ஊரும் இப்படி மாற வழியில்லையா என்ற ஆதங்கமே மேலிட்டது!

மதுரை, பி.எம். வள்ளி.

✉ சிந்து நதியில் நீராடி, விமானப்படை வீரர்களுக்கு மத்தியில் தைரிய உரையாற்றி, சண்டிகரில் சௌதாலாவைக் கண்டு, அவரிடமே அரசாங்க வீடு பற்றி கூறி அசர வைத்து, ஒரு துறவியின் நிலையை நிருபர்களுக்கு உணர்த்தி, அயோத்திப் பிரச்னையில் அடுத்து என்ன செய்ய வேண்டுமென்பதை தெளிவாகக் கூறிய ஸ்ரீஜெயேந்திரர் காலத்தோடு இணைந்து வாழ்கிறார்.

மதுரை-9, இரா. கல்யாணசுந்தரம்.

✉ அழகிரியும் அடக்கி வாசிக்க முடிவு செய்துவிட்டதால் சமாதானக் கொடியும் ஏற்றப்பட்டு விட்டது. அதன் விளைவாகவே மதுரையின் மூன்று மாவட்டச் செயலாளர்கள் முதல்வரிடம் மன்னிப்புக் கேட்டு தங்கள் மீது நடவடிக்கையைக் கைவிடச் செய்து விட்டனர்!

மதுரை, வி. பரமசிவம்.

நாயுடு விளக்குவாரா?

✉ 'முஸ்லிம்கள் நமமுடைய ரத்தத்தின் ரத்தங்கள்' என்று பண்டித தீனதயாள் உபாத்யாயா, 65-ம் ஆண்டிலேயே சொன்னதாக வெங்கையா நாயுடு தம் பேட்டியில் சொல்லியிருக்கிறார். அப்படி அவர் சொல்லியிருந்தும், 'பாபர் மசூதி இடிப்புச் சம்பவம்' நடந்ததற்குக் காரணம் என்னவென்று வெங்கையா நாயுடு விளக்குவாரா?

மதுரை, என். பாலகிருஷ்ணன்.


கானல் தெரு

✉ "கானல் தெரு" தொடர்கதை அடலஸண்ட் பருவத்திலேற்படுகின்ற காதல் என்ற மூன்றெழுத்தான கானலின் இன்பாச்சவேஷனை மிகத் தத்ரூபமாகப் படம் பிடித்தது. மார்டினின் ஓவியங்கள் மயங்க வைத்தன!

நெய்வேலி, சு. ஸ்ரீகாந்த்.

✉ விறுவிறுப்பான நல்ல தொடர். இருந்தாலும் பல இடங்களில் தூய தமிழும் நடைமுறை பேச்சுத் தமிழும் கலந்து வந்ததுதான் குறையாகப் பட்டது. மற்றபடி நினைவில் அசைபோட வைக்கும் தொடர் என்பதில் ஐயமில்லை.

சென்னை – 39, சிம்மவாஹினி.



✉ காதல் எனும் பத்ம வியூகத்தில் தவறாக மாட்டிக் கொள்ளும் தற்கால அபிமன்யூக்கள் 'கானல் தெரு'வை வாசித்திருந்தால் எச்சரிக்கை அடைந்திருப்பார்கள்.

குட்டலாடம்பட்டி, கே. மூர்த்தி.

✉ மிக இயல்பான நடையுடன், சீராகச் செல்லும் அருமையான கதை. இன்றைய நடுத்தர வயதினர் அனைவருக்கும் இந்தக் கதை ஒரு இனிய nostalgia வாக இருக்கும். ஒவ்வொருவரின் ஆழ் மனத்திலும் பதிந்திருக்கும் ஏதாவது ஒரு பகுதியையே இது தொட்டு விடுகிறது. பார்த்தியுடனும், பிரகாஷுடனும், நாமும் கூடவே சென்று சுற்றுவதாகத் தோன்றுகிறது.

கோயமுத்தூர், சி.ஆர். ஜெயலட்சுமி.

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

பவர்ஃபைனான்ஸ்

நடத்தும்

டெபாசிட் திரட்டும் முகாம்

உள்ளூர் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்

கடலூர்

ஹோட்டல் ஆர்காட் உட்லண்ட்ஸ்,
எண்.1, பாரதி சாலை, கடலூர் - 607 001.
தொலைபேசி : 330717 / 321382
நாள் : 18, 19 அக்டோபர், 2000
நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

சிதம்பரம்

ராசி திருமண மண்டபம்
19, கிழக்கு ரத வீதி, ஸ்ரீ நடராஜர் கோயில் அருகில்,
சிதம்பரம் - 608 001.
தொலைபேசி : 20016
நாள் : 20 அக்டோபர், 2000
நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

12.12%

12 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.59%
24 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 11.10%
36, 48, 60 மாதங்களுக்கு மாதத்திற்கு வட்டி 12.00%,
காலாண்டிற்கு வட்டி 12.12%

16.34%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி
ஆண்டிற்கு 12.00%)

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)
(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)
பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997683, 4995648, ஃபேக்ஸ் : 044-4982894

பவர்ஃபின்

30-9-2000 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது

Visit us at : www.tn.gov.in / www.chennaionline.com / www.aarasanthinal.com / www.southindia.com / www.webulagam.com



• அலர்மேல் வள்ளி

ஜெர்மனியில் பெர்லின் ஃபெஸ்டிவல், பிரான்ஸில் ஷலோன், ஆன்ழே, ராஷ்யூர்யான் ஃபெஸ்டிவல்ஸ், இத்தாலியில் பலோன், ஃபெரார்ா, எமிலியா ஃபெஸ்டிவல்ஸ், பிரான்ஸில் சில லெக்–டெம்ஸ் என்று வாயில் நுழையாத விழாக்களில் நிகழ்ச்சி வழங்கத் தயார் செய்வதில், படு பிஸியாக இருந்தார் அலர்மேல் வள்ளி. அவரைக் கொஞ்சம் சிரமப்படுத்தி,

"பிற நாட்டியக் கலைஞர்களை விட, உங்களுக்கு மட்டும் வெளிநாடுகள்ல பெரும் புகழும் பரவ என்ன காரணம்?'' என்று பேட்டியைத் தொடங்கினோம்.

''வெளிநாட்டுக்கு நடனம் ஆட எத்தனையோ பேர் போறாங்க. அந்தப் பல பேர்ல நானும் ஒருத்தி. அவ்வளவுதான்... பீனா பௌஷ்னு ரொம்பப் புகழ் பெற்ற ஒரு டான்ஸர் இருக்காங்க. நளின நடனத்தில் அவங்களைக் கடவுள் மாதிரி சொல்லுவாங்க. அவங்களுக்கு இந்தியன் டான்ஸ் ரொம்பப் பிடிக்கும். ஒரு தடவை அவங்களோட 'உப்பட்டால் டான்ஸ் தியேட்டர்' சில்வர் ஜூபிலி விழாவுல நான் பரத நாட்டியம் பண்ணணும்னாங்க. மாதவி முட்கல் ஒடிசி, அவரோட தம்பி மாதவ் முட்கல் பாட்டு, கேரளா தாயம்பகம் ஆரம்பத்துல, கடைசில பஞ்சவாத்தியம்னு ஒரு இந்தியன் நைட் நிகழ்ச்சி பண்ணச் சொன்னாங்க. அது ரொம்ப சக்ஸஸ்ஃபுல், சென்சேஷனல் புரோகிராம். ஆடியன்ஸ் பத்து நிமிஷத்துக்கு அப்படியே எழுந்து நின்னு, கை தட்டிட்டே இருந்தாங்க.

நேர்ல நிகழ்ச்சியைப் பார்த்துட்டு, 'இவங்க வெஸ்டர்ன் ஆடியன்ஸைத் திருப்தி பண்ணுவாங்க'ன்னு தீர்மா



வெஸ்ஸி தொடங்கப் போகும் பள்ளி!



னம் பண்ணினாத் தான் தேர்ந்தெடுப்பாங்க. சில வருஷங்களுக்கு முன்னால, என்னோட கிருஷ்ண கானசபா புரோகிராம் பார்த்துட்டு வந்து ஒரு ஜெர்மன்காரர் க்ரீன் ரூமுக்கு வந்து, 'நீங்க எங்க விழாவுல ஆட முடியுமா'ன்னு கேட்டார். டான்ஸ் முடிஞ்சதும் பல ரசிகர்கள் வந்து வாழ்த்து சொல்ற மாதிரி இவரும் ஒருத்தர்னு, பட்டும் படாமலுமா பதில் சொல்லிட்டேன் அவர்கிட்ட. அவர் அப்புறமா பிரான்ஸ்ல என் புரோகிராம் நடத்த போது வந்தார். ஜெர்மனில ஒரு பெர்ஃபார்மன்ஸ் முடிஞ்சதும் மறுபடி வந்து பார்த்தார். அந்த மாதிரி அவங்க நேர்ல பார்த்து இம்ப்ரஸ் ஆகி, அவங்க ஆடியன்ஸைத் திருப்தி பண்ணுவாங்கன்னு முடிவு எடுத்தா, அவங்க நடத்தற மேஜர் ஃபெஸ்டிவல்ஸ் எல்லாத்துலயும் ஆடச் சொல்லிக் கூப்பிடுவாங்க. ஏன் என்னைக் கூப்பிடறாங்க என்கிறதுக்கு, எனக்கு ஒரு காரணம் தோணறது. நான் அங்க ஆடறது எல்லாமே அங்க இருக்கற மெயின்ஸ்ட்ரீம் தியேட்டர்ஸ்ல. தமிழ்ச் சங்கம், இல்லேன்னா ஒரு அசோசியேஷன், மாதிரி சின்ன குரூப் அல்லது சின்ன இடங்கள இல்லே. நம்ம பாட்டுல இருக்கற மெலோடிக் எலிமெண்ட், நம்ம கவிதைகளோட அழகு, அதை ஸ்டேஜ்ல வழங்கறபவர் எல்லாம் அவங்களுக்கு அப்பீல் ஆகிறது. ஆடியன்ஸ்கிட்டே ரஸானுபவத்தை உண்டாக்கி, அந்த அனுபவத்தை அவங்க ருசிக்க வைக்கறதுதான் முக்கியம்.

''திரும்பத் திரும்ப நாயக–நாயகி பாவம் தானா? பரதநாட்டியத்துல இப்போதைய சமுதாய பிரச்னைகளை ஏன் பிரதிபலிக்கக் கூடாதுன்னு கேக்கறாங்களே?''

உண்மையா பரத நாட்டியத்தை ரசிக்கறவங்க இந்தக் கேள்வியக் கேக்கறதில்லே. குறுகிய அரசியல், சமூக எல்லைகளை எல்லாம் தாண்டியது டான்ஸ். பீனா பௌஷ்னு சொன்னேனே, அவங்க மாடர்ன் டான்ஸர். ஆனா கிளாசிகல் டான்ஸைக் குறை சொல்றதில்லே. ஏன், மாடர்ன் டான்ஸ் பண்றவங்களே அங்கே சமுதாய பிரச்னைகளை அதுல புகுத்தறதில்லையே! ஹ்யூமன் இமோஷன்ஸ், ஹ்யூமன் ரிலேஷன்ஷிப்பாததானே ஆடறாங்க? ஜெர்மனில BASF கம்பெனி சேர்மன் என்னோட புரோகிராம் வச்சார். அவரோட கம்பெனில இருக்கற அத்தனை டைரக்டர்ஸும் பார்த்து, நம்ம நாட்டோட கலாசாரம், கலை அழகு பத்தித் தெரிஞ்சுக்கணும்கறதுக்காகவே இன்னொரு புரோகிராம் ஏற்பாடு பண்ணினார்! சமூக, சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வு பொலிடிகலி கரெக்ட் இஷ்யூஸ் பரதநாட்டியத்துக்கு முக்கியமில்லே.

ஆர்ட்டிஸ்டிக் ட்ரூத் இருக்கணும். ஹ்யூமன் ட்ரூத் இருக்கணும். அதுதான் முக்கியம். நாட்டியத்தின் மூலமா சுற்றுச்சூழல் மாசு பற்றி எடுத்துச் சொல்லணும்னு கேக்கறது யார்? கார்ல வந்துட்டு பொல்யூஷன் உண்டாக்கிட்டுப் போறவங்கதான்! ஆர்ட்டிஸ்ட்டுக்கு மட்டும்தான் சமூக அக்கறை இருக்கா? மக்கள் எல்லாருக்கும்தானே இருக்கு? சரி, எல்லாரும் சொல்றாங்களேங்கறதுக்காக நானும் இந்த மாதிரி இஷ்யூஸை எல்லாம் எடுத்துப் பண்ணினா அதுல ஆர்ட்டிஸ்டிக் ட்ரூத் இருக்காது. நீதிபோதனை சொல்றாப்பல இருக்கும். பிராணிகள்ட்ட அன்பு காட்டுங்க, மரத்தை வெட்டாதீங்க, குப்பையைத் தெருவுல கொட்டாதீங்கன்னு சொல்றதுக்கெல்லாம் இந்த மீடியம் எதுக்கு?... பரத நாட்டியத்துல வர்ணத்துல வர நாயக-நாயகி பாவத்தை வார்த்தைக்கு வார்த்தை, வரிக்கு வரி எடுத்துட்டுக் கேள்வி கேக்கறதுக்குப் பதிலா, அதை ஒரு முழு எக்ஸ்பீரியன்ஸா உணர்ந்து ரசிக்கப் பார்த்தா, இந்த மாதிரி எல்லாம் கேள்வி எழாது. போலி அறிவு ஜீவித்தனம்இருக்கறவங்கதான் இந்த மாதிரி கேள்வி கேட்கறாங்க. அதனாலதான் கிருஷ்ணகான சபா, நாரதகான சபாவுல எல்லாம் டிசம்பர் சீசன்ல டான்ஸ் பார்க்க வர சாதாரண, உண்மையான, ரசிகர்கள், இந்த இன்டலக்சுவல் பிரிடன்ஷன்ஸ் இல்லாத ரசிகர்கள், வருஷா வருஷம் வந்து தொடர்ந்து பார்த்து ரசிக்கறாங்க. இப்ப காலமே ரொம்பக் கெட்டுப்போய், கலி முத்திப் போயிருக்குங்கறாங்க. குத்து, கொலை, வெட்டு, தீ வைப்புன்னு ஜனங்களோட ஆத்மாவே காயப்பட்டுக் கிடக்கு. அந்த ஆத்மாவுக்கு ஓர் ஆறுதல் தர வேண்டிய பணி ஆர்ட்டிஸ்ட்டுக்கு இருக்கு. ஸ்பெயின்ல என்னோட பர்ஃபாமென்ஸ் முடிஞ்சதும் ஒரு பெண் எங்கிட்ட வந்து, I was an unhappy woman. You have changed my lifeனு சொன்னாங்க...

சமூக அக்கறை எல்லாருக்கும் இருக்கணும். ஆர்ட்டிஸ்ட்டைக் கேக்கற அதே சமயம், நீங்க என்ன செஞ்சிருக்கீங்கன்னு உங்களையே கேட்டுக்கணும்.

பரதநாட்டியம் போர் அடிக்குதுங்கறாங்களே?

நல்ல பரதநாட்டியம் உண்மைல போர் அடிக்க முடியாது. நான் முன்னால சொன்ன மாதிரி, உண்மையான பகிர்தலா இருக்கணும், ஆத்மாவைத் தொட்டு அசைக்கணும். அப்படி இருந்தா பரத நாட்டியம் நிச்சயம் போர் அடிக்காது. அப்படி போர் அடிச்சா, அது டான்ஸரோட தப்புத்தான். பரதநாட்டியத்தோட தப்பு இல்லே!

மாடர்ன் டான்ஸ்-பரதநாட்டியம் இரண்டையும் கலந்து சில பேர் வழங்கறாங்களே...?

நம்ம நாட்டோட கலாசாரம் என்னோட நடனத்துல பிரதிபலிக்கணும்னு விரும்புறேன். நம்ம புராணம், சரித்திரம், தத்துவம் இதெல்லாம் கலந்த ஃப்யூஷன்தான் முக்கியம். அது இல்லாம, ஒட்டு வைக்கிறது எனக்குப் புடிக்காது. உங்க உள்ளுக்குள்ளேயே ஒரு வேகம் இருந்து அது இயற்கையா வெளிப்படணும்.

சங்க இலக்கியப் பாடல்களை நீங்க மட்டும்தான் ஒவ்வொரு வருஷமும் பரத நாட்டியத்துல வழங்கறீங்க. எப்படி இதுல ஆர்வம் வந்துது?

கோரியோகிராஃப் பண்ண நிறைய ஸ்கோப் இருக்கிற அருமையான பாடல்கள் அவை. அதுல வர மொழி பழைமையா இருக்கும். சந்தம் வித்தியாசமானது. ஆனாலும் அதை டான்ஸுக்குக் கொண்டு வர போது கஷ்டமாத்தான் இருக்கும். ஆனா சங்கம் பொயட்ஸ் ஆர் த கிரேட்டஸ்ட். என்ன அழகு, என்ன தொனி, என்ன சஜஷன்! அதுவும், கடைசி வரில எதிர்பாராம அவங்க வச்சிருக்கிற ட்விஸ்ட் எல்லாமே தனி. அந்தக் காலக் கவிஞர்கள்தாம் உண்மையான என்வயர்மென்டலிஸ்ட். இயற்கையோடு இணைஞ்சுபோய், பூ, பசு, மரம், செடி கொடின்னு அவங்க எவ்வளவு ஈடுபாட்டோட எழுதியிருக்காங்க.

மணல்வீடு கட்டிச் சின்ன வயசுல கூடவே விளையாடினவன், இளைஞனாக வீட்டுக்கு வந்து, குடிக்கத் தண்ணி கேக்கிற போது, இவள் செம்பில் நீர் கொடுப்பாள்.

''சரவெடி இருக்குங்களா...?''

''என்ன சார்... இன்னும் அந்த காலத்துலே இருக்கீங்க...? மெகா சீரியல் வெடி இருக்கான்னு கேளுங்க!''

- மலர் சூர்யா



அவன் கையைப் பிடிக்கிறபோது, இவள் அம்மா என்று தன்னையறியாமல் கூவிவிடுவாள். 'என்ன?'ன்னு அம்மா உள்ளேயிருந்து கேட்கிறபோது, 'ஒண்ணுமில்லே குடிக்கத் தண்ணீர் கேட்டவனுக்கு விக்கல் வந்துது. பயந்துட்டேன்' என்பாள். 'உன்னு நீர் விக்கினான்'ங்கற பாடல் இது. இது போல நூத்துக்கணக்கான பாடல்கள் இருக்கு.

திருமணத்துக்குப் பிறகு டான்ஸ் வாழ்க்கை எப்படி இருக்கு?

பெரிய மாற்றம் இல்லே! (சிரிக்கிறார்) நான் ஒவ்வொரு ஊரா, ஒவ்வொரு நாடா டான்ஸ் பண்ணப் போறேன். பாஸ்கர் (கோஷ்) தில்லி, அமெரிக்கான்னு போய்ட்டிருக்கிறார். தில்லில இருக்கிறபோது டின்னர், கெட்டுகெதர் ஏதாவது இருக்கும். சமையல்ல நான் பெரிய எக்ஸ்பர்ட் இல்லே. ஆனா நான் சமைச்சா அவர் எந்தக் குற்றமும் சொல்லாம சாப்பிட்டு, 'ஆகா, பிரமாதம்'ங்கறார்! 'லேட் ஆயிட்டுதா?'ன்னு கேட்டா, 'இல்லே'ங்கறார்!


மூணு கச்சேரிக்கு மேல சீசன்ல ஒத்துக்க மாட்டேங்கறீங்கன்னு சபா செக்ரடரீஸ் ஒரு குறையாச் சொல்றாங்களே?

வெளிநாட்டுக் கச்சேரிகள் போய்ட்டு வரபோதே நவம்பர் ஆயிடுது. அதுக்கப்புறம் புது ஐட்டம் தயார் பண்ணி, ரிகர்சல் பண்ணி புரோக்ராம் கொடுக்கறது ரொம்பக் கஷ்டம். அதுவும் இல்லாம, என்னோட ஆர்க்கெஸ்ட்ராவுல பாடகி ஒரு இடத்திலிருந்து வரணும். நட்டுவாங்கம் பண்றவர் இன்னொரு ஊர்ல இருந்து வரணும். இதெல்லாம் இணைக்கறது, பர்ஃபெக்ட்டா ஒரு புரோக்ராம் கொடுக்கிறதுங்கறது ரொம்ப சிரமமா இருக்கு. அது அவங்களுக்குத் தெரியுமோ என்னவோ!

லண்டனில் ஒரு நிகழ்ச்சிக்கு வந்திருந்த ஓவியர் எம்.எஃப். ஹுசைன், சாப்பிட உட்கார்ந்த ரெஸ்டாரண்டில், பேப்பர் கிடைக்காமல், பெரிய வெள்ளைத் துணி எடுத்து, அதில் சரஸ்வதி மாதிரி வரைந்து, விநாயகர் புல்லாங்குழல் ஊத, மயில் நடனமாட ஸ்கெட்ச் பென்னில் வரைந்த ஓவியம், 'வள்ளி' என்ற பெயரோடு வீட்டு முகப்பில் வரவேற்கிறது...

"அடுத்த வருஷம், நடனம் சொல்லிக் கொடுக்க, பள்ளிக்கூடம் ஆரம்பிக்கலாம்னு இருக்கேன். நல்ல நடனக்கலைஞர்களை உருவாக்க முடியும்னு தோணறது!" என்று நல்ல சேதியைச் சொன்னார் வள்ளி.

சந்திப்பு: **சாருகேசி**


• ஹலோ...!

● செ. ஆசைத் தம்பி, தாரமங்கலம்

? ராமதாஸ் கலைஞரையும் தி.மு.க.வையும் அடிக்கடி தாக்கிப் பேசுவதில் ஏதாவது மர்மம் இருக்குமா?

! வரும் தேர்தலில் அதிக இடங்கள் வேண்டும் என்பதைத் தான் ராமதாஸ் தனது பாணியில் இப்படிச் சொல்லி வருகிறார்.

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? சென்னையில் சாகித்ய அகடாமிக்குப் புதிய அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது பற்றி?

! புதிய பொருளாதாரக் கொள்கையை இலக்கியத் துறையிலும் புகுத்தி அரசு ஒதுங்கிக் கொண்டால் நல்லது.


• பாட்டு...


• — பொருள்

● என்.வி. ராமசுப்ரமணியன், சென்னை -88

? சந்தன வீரப்பன் முட்டாளாக்கிக் கொண்டிருப்பது கருணாநிதியையா? எஸ்.எம்.கிருஷ்ணாவையா? கோபாலையா?

! தன்னைத்தானே!

● பா.ஜெயக்குமார், வந்தவாசி

? இலங்கைப் பிரச்னைக்கு எப்போது தீர்வு ஏற்படும்?

! இலங்கையில் வாழும் அனைவருக்கும் இலங்கை ஒரே நாடு. நமது தாய்நாடு என்ற உணர்வு ஏற்படும் போது.

● மாயவரம் சூர்யா, சென்னை - 75

சந்தன வீரப்பனுக்கு செல்போன் தரலாமே?

? புதிய நீதிக் கட்சியைத் தொடர்ந்து பல ஜாதி சங்கங்கள் கட்சி உருவம் பெறுமா?

! இந்த ஜாதி கட்சி போக்கில் அடுத்த கட்டம், ஜாதிக்குள் உட் பிரிவு கட்சிகள்தாம். ஐயங்கார் கட்சி, பேட்டை முதலியார் கட்சி இத்யாதி!

● மங்கை, பாளையங்கோட்டை

? வாழப்பாடி - ராமதாஸ், காளிமுத்து - இளங்கோவன் எந்த மோதல் டாப்?

! முதல் மோதல் மைக் டைசன் ஹோலிஃபீல்ட் காதைக் கடித்த மாதிரியான பின்னது நம்மூர் சினிமா சண்டை மாதிரி.

● கு. கணேசன், பனங்கோட்டூர்

? மத்திய அரசில் எனக்கு அமைச்சர் பதவி தராததால் தொண்டர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். எனக்கும் வருத்தம்

ஏற்பட்டுள்ளது என்று திருநாவுக்கரசு பேசியிருக்கிறாரே...?

! மந்திரிப் பதவி கொடுக்காவிட்டால் ஆதரவு வாபஸ் என்றெல்லாம் திருநாவுக்கரசு மிரட்டமாட்டார். கவலையை விடுங்க.

● த. சத்தியநாராயணன், சென்னை - 23

? டான்சிதில ஊழல் வழக்கின் தீர்ப்பு எப்படி?

! வாய்மையே வெல்லும்

• சினிமா...





• ...சண்டை

● கி. ராமதாஸ், சென்னை - 23 ★

? அக்டோபர் 31 முதல் நவம்பர் 6 வரை லஞ்ச ஒழிப்பு வாரமாக அறிவித்துச் செயல்பட இருக்கும் மத்திய விஜிலன்ஸ் கமிஷன் பற்றி...?

! நவம்பர் 6க்குப் பிறகு என்ன...? லஞ்சம் ஒழிக்காத வாரங்களா? 52 வாரங்களுமே லஞ்ச ஒழிப்பு வாரங்கள் தான். அதற்காக சி.வி.சி. பலமுனைகளில் பாடுபடட்டும்.

● இரா. பார்த்திபன், சேத்துப்பட்டு

? சமீபத்தில் உங்களை அதிர்ச்சியில் ஆழ்த்திய நிகழ்ச்சி?

! ஹைதராபாத் விலங்கியல் பூங்காவில் ஒரு பெண் புலிக்கு இழைக்கப்பட்ட கொடூரம். கூண்டில் அடைக்கப்பட்ட மிருகங்களுக்குக் கூட இரண்டு கால் மிருகங்களிடமிருந்து பாதுகாப்பு கிடையாது.

• சர்வதேச...





• ... மோதல்

• அதிர்ச்சியும் ஆதங்கமும்...





• தூசி தட்டி...

● ஆர். ஜெயச்சந்திரன், தேனேரிப்பட்டி

? தராசுக்கு இப்போது திருப்திதானே? மூப்பனாரை விமர்சிக்க வேண்டாம் எனக் கட்சியினரைக் கலைஞர் அறிவுறுத்தியிருக்கிறார் பார்த்தீரா...? இது கிட்டத்தட்ட நல்வரவு போர்டுதானே?

! தூசி தட்டியிருக்கிறார். இனிமேல்தான் மாட்ட வேண்டும்.

● ஸ்ரீ வித்யா காளிதாஸ், சிதம்பரம் - 2

? பத்மஸ்ரீ விருதுகள் அறுபதிலிருந்து நூறாக அதிகரிக்கப்பட்டுள்ளது பற்றி...?

! எண்ணிக்கை ஏற ஏற மதிப்பு குறையும்

● ஆர். ராமசுப்ரமணியன், வடவள்ளி

? ஜெயலலிதா, மம்தா பானர்ஜி போன்றவர்கள் பாரதி காலத்தில் இருந்திருந்தால், ஒட்டு மொத்தமாகப் பெண் விடுதலை பற்றி பாடியிருப்பாரா?

! பாரதி காலத்தில் இத்தகைய பெண்கள் இல்லை என்று யார் சொன்னார்கள்? ஜெ, மம்தா போன்றோர் பெண் விடுதலையின் பிரதிநிதிகள் அல்ல ஐயா!

● ச. நாகரத்தினம், திருப்பூர் ❑

? சந்தன வீரப்பனுக்கு செல்ஃபோன் ஒன்று கொடுத்துவிட்டால் தமிழக - கர்நாடக அரசுகளுடன் நேரடியாகப் பேசிக் கொள்வாரே?

! ஒய் நாட்? குட் ஐடியா! ஆனால் அமுல்படுத்தமாட்டார்கள். ஏனென்றால், இன்றைய தோல்வி தூதர்களின் தோல்வியாகிவிடும். ஆனால் உங்கள் ஐடியா அமுலானால் முதல்வர்களின் தோல்வியாக மாறிவிடும்! இன்றைய வெற்றியில் முதல்வர்களுக்கும் பங்கு உண்டு!

❑ ரூ.50 பரிசு பெறுபவர் :
ச. நாகரத்தினம்
8, 115ஈ,ஆலங்காடு, அம்மன் நகர்,
பூலுவப்பட்டி அஞ்சல்
திருப்பூர் - 641 602

★ ரூ.25 பரிசு பெறுபவர் :
கி. ராமதஸ்
4/1, மேற்கு மாடவீதி,
அயன்புரம்,
சென்னை - 23

பல் மொழிகள்!

'பபிள்கம்' மெல்லுவதால் மிகுதியாக உமிழ் நீர் உற்பத்தியாகிறது. கூடவே பற்களுக்கும் அதைச் சார்ந்த உறுப்புகளுக்கும் சிறந்த பயிற்சியும் ஏற்படுகிறது. எனவே பபிள்கம் மெல்லும் பழக்கத்தால் பற்களுக்குக் கெடுதல் இல்லை. ஆனால் தொடர்ந்து பபிள்கம்மை மென்று கொண்டிருப்பது நல்லதல்ல.

● பற்கள் வெண்மையாக இருந்தால்தான் ஆரோக்கியத்தின் அடையாளம் என்று நினைத்தால் தவறு. ஆரோக்கியமான பற்கள் தந்தங்களைப் போல்பழுப்பு நிறமுடையவை. பற்கள் உருவாகும்போது வைட்டமின் 'ஏ' குறைபாடிருந்தால் சுண்ணாம்பைப் போல் வெண்மையாகவும் பலமில்லாமலும் இருக்கும்.

● பொதுவாக பற்களின் மேல் பகுதியான எனாமல் பாதிக்கப்பட்டு பற்குழிகள் ஏற்பட்ட பின்புதான் அவற்றை அடைக்கிறோம். சில சமயங்களில் ஆழமான பற்குழிகளை அடைக்கும்போது அவை ஆழத்தில் உள்ள இசுக்களான தந்தினியில் நரம்புகள் நிறைந்திருப்பதால் பற்குழிகளை அடைத்த பின்பும் பற்களில் கூச்சம் தொடர்ந்து இருக்கக் காரணமாகிறது.

● வாயைச் சுத்தப்படுத்துவதற்குத் தண்ணீர் தான் சிறந்த 'மவுத் வாஷ்'. சிலர் ரசாயன 'மவுத் வாஷை'ப் பயன்படுத்தி வாய் நாற்றத்தைத் தவிர்க்க முயல்வார்கள். அது பயன்படாது. வாய் நாற்றத்துக்கு என்ன காரணம் என்று அறிந்து அந் நோயைக் குணப்படுத்த வேண்டும்.

● வாயில் புண் உண்டாவதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. கூர்மையான பற்கள், மன உளைச்சல், ஊட்டச்சத்தின்மை, வைட்டமின் குறைபாடு, தொற்றுநோய் என இவைகளில் ஒன்றோ அல்லது பலவற்றின் சேர்க்கையோ காரணமாக இருக்கலாம்.

● ஆரோக்கியமான ஈறுகளில் பிரஷ் செய்தால் ரத்தம் கசியாது. வீக்கம் இருந்தாலோ நோய் ஏற்பட்டிருந்தாலோ ஈறுகளில் ரத்தம் கசியும். இதை நோயின் அறிகுறியாகக் கருதிச் சரியான சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். பிரஷ் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது இதற்கு நிவாரணம் அல்ல.

● குளிர் பானங்களை (Aerated beverages) தொடர்ந்து குடித்து வந்தால் பற்கள் பாதிப்படையும். பழச்சாறு அல்லது இளநீர் பருகலாம். ஆனால் தூய நீரைவிடச் சிறந்தபானம் வேறு ஒன்றுமில்லை.

- நன்றி: தினமணி மருத்துவ மலர் 2000
ஆசிரியர் : இராம. திரு. சம்பந்தம்.
எக்ஸ்பிரஸ் நிறுவன வெளியீடு.
விலை : ரூ.20/-





எல்லாவித சர்க்கரை வியாதிகளுக்கும் தெய்வீக மூலிகை மருத்துவம்!



பல வருட ஆராய்ச்சியின் மூலம், வேதங்களும், ஞானிகளும் போற்றியதும், கடவுளுக்கு சமமாகவும், நம் நாட்டின் பல பொக்கிஷங்களில் ஒன்றாகவும் கருதக் கூடிய பல தெய்வீக மூலிகைகளைக் கொண்டு பக்க விளைவுகள் இல்லாத வகையில், தாமே தயார் செய்த தெய்வீக மூலிகை மருந்துகள் மூலம் அடிக்கடி இரவில் சிறுநீர் கழித்தல், தேவையில்லாத போதும் அதிக அளவில் தண்ணீர் தாகம், சிறுவேலைகள் செய்தாலும் களைப்பு, பலஹீனம், சரியான உணவு உட் கொண்டும் எடை குறைவு, உடல் மெலிவு, அதிகமான பசி, அதிக அளவு தண்ணீர் குடித்தும் நாவறட்சி, தோல் வறட்சி, பரிசோதனையின் போது இரத்தத்திலும், சிறுநீரிலும் சர்க்கரையில் அளவு அதிகம் இருத்தல், உடலில் காயம் ஏற்பட்டால் விரைவில் ஆறாமை, ஆண்மைக் குறைவு கால் பாதம் எரிச்சல், குத்தல், மருத்துப்போகுதல், வீக்கம், மயக்கம், BP, கண்பார்வை குறைவு, மூட்டுவலி, போன்ற குறைகளை உடைய நாட்பட்ட சர்க்கரை நோயாளிகளுக்கும் எந்த வித மான அறிகுறிகளும் இல்லாத ஆரம்ப நிலை சர்க்கரை நோயாளிகளுக்கும், குழந்தை சர்க்கரை நோயாளிகளுக்கும் (Juvenile Diabetics) சிறந்த முறையில் ஆலோசனைகளும் & சிகிச்சைகளும் அளிக்கப்படுகின்றது.

மற்றும் சிறுநீரகக்கோளாறு, எல்லாவிதமான இதயநோய், எய்ட்ஸ், பல வகையான புற்றுநோய் ஆண்மைக்குறைவு, குழந்தையில்லாத குறை, அல்சர், மூட்டுவலி, ஆஸ்துமா, சொரியாசிஸ் எனப்படும் எல்லாரக சர்மநோய்களுக்கும் தரமான மூலிகை சிகிச்சைப் பெறலாம். அணுக வேண்டிய முகவரி



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்


தலைமை முகவரி : Dr. M.குருபரன் & Dr. M. சபாபதி, Dr. M.சிவசக்தி,S/O. Dr. C.K.மாணிக்கவாசகம்
P.B. NO. 30, 3,திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் DT 635601 ✆ : 04179-20469, 22769
சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 600 010. ✆ : 044-6424285, 6427638.

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் காலை 10.00-1.00 P.M. மாலை 5.00-7.00 P.M.

ஒவ்வொரு மாதமும் வெளியூர்களில் டாக்டரை நேரில் சந்திக்க

வேலூர் 3-ந்தேதி-12.00 P.M. TO 2 P.M. P.S.S. லாட்ஜ் 26/A, ஆரணி ரோடு பஸ் ஆஸ்பத்திரி அருகில் ✆ : 0416/21059	காஞ்சிபுரம் 3-ந்தேதி-5 P.M. TO 6 P.M. ராஜம் லாட்ஜ் பஸ் நிலையம் அருகில் காமராஜர் தெரு ✆ : 04112/22339	கடலூர் (S.A. DT.) 4-ந்தேதி-9 A.M. TO 11 A.M. ஆர்காடு கட்லண்ட்ஸ் ஹோட்டல் ✆ : 04142 / 30707, 30717	விழுப்புரம் 4-ந்தேதி-2 P.M. TO 3 P.M. ஹோட்டல் ஆனந்தா, பஸ் நிலையம் எதிரில் ✆ : 04146 / 22942, 24960	திருவண்ணாமலை 4-ந்தேதி-5 P.M. TO 6 P.M. ராஜா லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ✆ : 04175/22516
மும்பை 7 & 8-ந்தேதி-10 A.M. TO 6 P.M. The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga (CR), PH : 022/4011589	பெங்களூர் 9-ந்தேதி-11 A.M. TO 1 P.M. ஹோட்டல் பிரஸிடென்ட், கல்பனா தியேட்டர் அருகில் செப்பேகலுடா ரோடு ✆ : 080 / 2266374 / 2873003	ஒசூர் 9-ந்தேதி-4 P.M. TO 5 P.M. சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 42099, 42323	சேலம் 10-ந்தேதி-11 A.M. TO 1 P.M. ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில் ✆ : 0427/ 449333/ 449332.	ஈரோடு 10-ந்தேதி-4 P.M. TO 6 P.M. ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 / 225603/13/14
கோயம்புத்தூர் 11-ந்தேதி-9 A.M. TO 1 P.M. ஜோதி லாட்ஜ், ராக்ஸி தியேட்டர் பின்புறம் ✆ : 0422 / 302271, 302270	மதுரை 14-ந்தேதி-9 A.M. TO 11 A.M. ஹோட்டல் கிராண்ட் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு ✆ : 0452 / 743940	தஞ்சாவூர் 14-ந்தேதி-5 P.M. TO 7 P.M. அசோகா லாட்ஜ் ✆ : 04362 / 30021 / 30022	திருச்சி 15-ந்தேதி-9 A.M. TO 11 A.M. ஹோட்டல் ஆனந்த், சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில், ✆ : 0431 / 415545	நாமக்கல் 15-ந்தேதி-2 P.M. TO 4 P.M. ஹோட்டல் தேவி அன்னபூர்ணா ✆ : 04286 / 20433, 20336
நியூடெல்லி 18 & 19-ந்தேதி-10 A.M. TO 6 P.M. South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh ✆ : 011/5717126, 5723631	தர்மபுரி 22-ந்தேதி-8 A.M. TO 10 A.M. ஸ்ரீ வாசுதேவரா லாட்ஜ், 103, அதியமான் கோட்டை ரோடு ✆ : 04342 / 60226, 60472	திருப்பூர் 22-ந்தேதி-2 P.M. TO 3 P.M. ராமகிருஷ்ணா லாட்ஜ், கல்யாண் கோவில் தெரு ✆ : 0421 / 240408	உடுமலைப்பேட்டை 23-ந்தேதி-6 P.M. TO 7 P.M. ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் எதிரில் ✆ : 04252 / 24353	திண்டுக்கல் 23-ந்தேதி-9 A.M. TO 11 A.M. ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ✆ : 0451 / 423054, 427007
தூத்துக்குடி 23-ந்தேதி-5 P.M. TO 6 P.M. ஹோட்டல் ஆர்வின், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 327780	திருநெல்வேலி 24-ந்தேதி-8 A.M. TO 11 A.M. ஹோட்டல் ஸ்ரீ சீதாபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 333052.	நாகர்கோவில் 24-ந்தேதி-2 P.M. TO 3 P.M. ஹோட்டல் ஏஞ்சல், மீனாட்சிபுரம் ✆ : 04652 / 36078	விருதுநகர் 25-ந்தேதி-8 A.M. TO 10 A.M. அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 / 45537	கரூர் 25-ந்தேதி-2 P.M. TO 4 P.M. அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ✆ : 04324 / 63763, 62663

தகவல் : SUN, RAJ, VIJAY, D.D T.V. களில் எமது பேட்டியை காணத்தவறியவர்கள். டாக்டரின் மூலிகைகள் பற்றிய 26 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய "எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்" இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய "என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்" என்ற இரு புத்தகத்தையும் பதிவுத் தபாலில் பெற ரூ. 130/-மேற்கண்ட முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.





2000 அக்டோபர் 22
விக்ரம ஜப்பசி 6
மலர் : 59
இதழ் : 12

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



டான்ஸி: இறுதித் தீர்ப்பு மக்கள் கையில்!


டான்ஸி நில பேர வழக்கில் இரு வேறு குற்றச்சாட்டுகள் ஜெயலலிதா பேரில் பதிவு செய்யப்பட்டன. அரசு ஊழியராக இருந்து கொண்டு அரசு சொத்தைச் சட்டவிரோதமாக வாங்கியதாக ஒரு குற்றச்சாட்டு. அரசுக்குச் சொந்தமான நிலத்தை, குறைந்த விலைக்கு விற்று அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தியதாக இன்னொரு குற்றச்சாட்டு.

இவற்றுள் இரண்டாவது குற்றச்சாட்டுக்குப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக ஏற்று முன்னாள் முதல்வருக்கு ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனை வழங்கியிருக்கிறது தனிநீதி மன்றம்.

நில பேரத்தில் ஆதாயம் அடைந்த நிறுவனங்கள் ஜெயா பப்ளிகேஷன்ஸ் மற்றும் சசி என்டர்பிரைசஸ்.

ஆகக்கூடி, சொந்த ஆதாயம் பெறுவதற்காக, திட்டமிட்டு பொதுச் சொத்தை ஜெயலலிதா சுரண்டியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தத் தவறை மறைக்க ஜெயலலிதா நீதி மன்றத்திலேயே பொய்யும் புனைந்துரையும் பேசியதாகவும் நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இவையெல்லாம் உறுதி செய்யப்பட்ட பின்னரும் தீர்ப்பை நிலுவையில் வைத்து,



ஜெயலலிதா மேல்கோர்ட்டில் முறையீடு செய்ய அவகாசம் கொடுத்திருக்கிறார் நீதிபதி அன்பழகன்!


வெகு விரைவில் சட்டமன்றத் தேர்தல்கள் வரவிருக்கின்றன. தற்போதைய தீர்ப்பின் அடிப்படையில், அவற்றில் போட்டியிடும் வாய்ப்பு ஜெயலலிதாவுக்கு மறுக்கப்பட்டுவிடும் என்று தேர்தல் கமிஷன் வட்டாரங்கள் உறுதி செய்கின்றன.

ஜெ. ஆதரவாளர்களோ, தனிநீதிமன்றத் தீர்ப்பின் பேரில் உயர்நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்று, அவர் தேர்தலில் போட்டியிடலாம் என்று யோசனை கூறுகின்றனர். அப்படியொரு தடையைப் பெறுவதற்கு அவர் காலதாமதமின்றி முயற்சி மேற்கொள்வார் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

மேல்முறையீடு, விசாரணையில் உள்ள கட்டத்தில், ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடுவது குறித்த சர்ச்சைக்குரிய முடிவை உயர்நீதிமன்றம் எடுத்தாக வேண்டும்.

தனிநீதிமன்றத் தீர்ப்பு வெளியானதுமே அ.தி.மு.க. தொண்டர்கள் உணர்ச்சிவசப்பட்டு கொந்தளித்திருக்கிறார்கள். இவ்வாறு இருக்கையில் தனி நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடையும் தேர்தலில் போட்டியிட அனுமதியும் ஜெயலலிதா பெற்று விடுவாரேயானால், தொண்டர்கள் அதைப் பெரிய அளவில் கொண்டாடுவார்கள். அந்த இடைக்காலத் தடையும் தேர்தலில் பங்கேற்க அனுமதியும், அ.தி.மு.க. தலைவி நிரபராதி என்பதற்கு ஆதாரமாகக்கூட திரித்துக் கூறப்படும்.

தமிழ்நாட்டின் எளிய வாக்காளர்கள், விஷயத்தின் தீவிரத்தையும் சட்ட நுணுக்கங்களையும் முற்றிலுமாகப் புரிந்து கொள்ளாமல் போனால் அ.தி.மு.க. கூட்டணி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய அபாயம் நேர்ந்துவிடும். பொதுச் சொத்தை முறைகேடாகப் பயன்படுத்திய ஒருவர் மீண்டும் முதல்வராக்கப்பட்டால் அவருக்கு எதிரான வழக்குகளின் கதி என்ன ஆகும் என்பதும் தெரியும்.



தீர்ப்பு விவரங்களை மக்களுக்குத் தெளிவாகப் புரியவைக்கும் பொறுப்பு பத்திரிகைகளுக்கு இருக்கிறது. பொது வாழ்வில் ஈடுபடுவோர் சந்தேகத்துக்கப்பாற்பட்டவர்களாக, தன்னலமற்றவர்களாக இருப்பதன் அவசியத்தை விரிவாக எடுத்துச் சொல்லி, சட்ட நுணுக்கங்களைப் புரிய வைப்பது இரவோடிரவாக நடக்கக் கூடிய காரியம் அல்ல.

ஆனால், அ.தி.மு.கவை ஆதரிக்க காத்திருக்கும் கட்சிகள் அனைத்துமே இந்தத் தீர்ப்பைக் காரணம்காட்டி, அக்கட்சியுடனான அரசியல் தொடர்பை உடனே எளிதாகவும் முழுமையாகவும் துண்டித்துவிடலாம்.

அவ்வாறு செய்வதன் மூலம் அ.தி.மு.கவை ஓரங்கட்ட முடியும். முக்கிய தலைவர்களால் கைவிடப்பட்ட கட்சிக்கு ஆதரவு அளிக்க மக்கள் யோசிப்பார்கள். லஞ்ச-ஊழல் உறுதிசெய்யப்பட்டுவிட்டது என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

'96 தேர்தல்களின்போது ஊழல் குற்றம் சாட்டப்பெற்ற கட்சியான அ.தி.மு.கவுடன் கூட்டணி கூடாது என்ற நிலையை மேற்கொண்டதால்தான் காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்தது த.மா.கா. அந்தத் தேர்தலில் மக்களும் ஊழலுக்கு எதிராக உறுதியாக வாக்களித்தார்கள்.

ஆனால், இப்போது அதே ஊழல் சட்டபூர்வமாக உறுதிசெய்யப்பட்ட பிறகும் த.மா.கா. மெத்தனமாக இருக்கிறது. 'இது இறுதித் தீர்ப்பு அல்ல' என்று மூப்பனார் மழுப்புகிறார். வெள்ளை வேஷ்டி கரி மீது பட்டாலும், கரி, வெள்ளை வேஷ்டி மீது பட்டாலும் கறை படிவது வெள்ளை வேஷ்டி மீதுதான். கரியின் தன்மையில் மாறுதல் இல்லை!

த.மா.காவும் அ.தி.மு.கவின் இதர தோழமை கட்சிகளும் தி.மு.கவை ஏற்று அணிமாற வேண்டாம். ஆனால் அவர்கள் மக்களை நம்பி நேர்வழிக்கு மாற உகந்த சந்தர்ப்பம் இது. அவ்வாறு அவர்கள் தேர்ந்தெடுக்கும் மாற்றுவழிதான் தமிழ்நாட்டின் நலனுக்கான பாதையாகவும் அமையும். ●

வெறுத்ததெல்லாம் பால்?



ஒரு சாதாரண தொழிலாளியாக இருந்து கட்சியில் அடிபட்டு, பலமுறை ஜெயிலுக்கு சென்று, இன்று தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவராக உயர்ந்திருக்கிறார் பால் வளத்துறை அமைச்சர் சுந்தரம்.

"அமைச்சர் அதிர்ந்து பேசாதவர். யாரையும் புண்படுத்த விரும்பாதவர், கறுப்பு உருவம்... வெள்ளை உள்ளம். இதன் காரணமாக சில அதிகாரிகள் கொஞ்சம் சலுகைகளை அவர்களாகவே உரிமையுடன் எடுத்துக் கொண்டு 'சுதந் தரமாக' செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமைச் சர் இன்னமும் கொஞ்சம் கண்டிப்புடன் இருக்க வேண் டும்' என்று சொல்கிறார்கள் கோட்டை அதிகாரிகள். 'வெளுத்ததெல்லாம் பால் என்று அமைச்சர் நம்பிவிடக் கூடாது' என்கிறார்கள் அவர்கள்.

அமைச்சரின் தொகுதி சென்னையிலிருந்து கூப்பிடும் தொலைவிலுள்ள பொன்னேரி. அந்தத் தொகுதியில் உள்ள மீஞ்சூர்தான் அமைச்சரின் ஊர். தொகுதியில் எந்தப் பாரபட்சமும் இல்லாமல் யார் கூப்பிட்டாலும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். 1989ல் மீண்டும் பொறுப்புக்குத் தி.மு.க வந்தபோது உடனடியாக அமைச்சர் பதவி கொடுக்கப் படாவிட்டாலும், ஆட்சியைக் கலைப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் பொறுப்பு இவருக்குத் தரப்பட்டது. இந்த முறை கலைஞர் பால்வளத்துறையையும், குடிசை மாற்று வாரியத்தையும் கவனிக்கச் சொல்லி விட்டார்.

தொகுதிக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய திருப்தியில் இருக்கிறார் அமைச்சர். குறிப்பாக பழவேற்காட்டில் பதினைந்து குப்பத்து மக்கள், படகில்தான் தங்கள் குப்பங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இப்போது ஆறு கோடி செலவில் புதுப்பாலம் கட்டும் வேலை துவங்கயிருக்கிறது. அதேபோல் பழவேற்காடு பகுதியில் 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனை கட்டி, அதில் போஸ்ட்மார்ட்டம் செய்யும் வசதிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார் அமைச்சர். "அவர் தன்னுடைய பெரிய சாதனையாக நினைப்பது நாபாளையம் என்ற இடத்தில் கட்டிய மேம்பாலம்தான்' என்கிறார்கள் தொகுதி தி.மு.க

பிரமுகர்கள். அதேபோல் காரனோடையில் 25 கோடி செலவில் புதிய பாலம் அமைத்து, பழைய பாலத்தை பழுது பார்த்ததையும் பெருமையுடன் சொல்கிறார்கள் அவர்கள். அமைச்சர் தொகுதியில் சந்திக்கும் பெரிய பிரச்னை பழவேற்காடு மீனவர் பிரச்னைதான். வடசென்னை மின் நிலையம் கடலில் விடும் மாசு கலந்த நீர் காரணமாகக் கடற்கரையை ஒட்டியும் பழவேற்காடு ஏரியிலும் மீன்கள் சுத்தமாக அழிந்துவிட்டன. எனவே தங்களுக்கு வேறு வேலை கொடுக்க வேண்டும் என்று அவர்கள் போராடுகிறார்கள். அமைச்சரும், மின் நிலைய அதிகாரிகள், எண்ணூர் துறைமுக அதிகாரிகள், மாசு கட்டுப்பாட்டு அதிகாரிகள் என்று தினமும் அலைந்து பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சி செய்து வருகிறார். அதேபோல் வடசென்னை மின் நிலையத்துக்கு நிலம் கொடுத்த நபர்கள் தங்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று போராடுகிறார்கள்.

தன்னிடம் யார் என்ன கோரிக்கையுடன் வந்தாலும், உடனே அவர்களுக்கு சிபாரிசு கடிதம் கொடுத்து விடுகிறார் அமைச்சர். தொகுதியில், சாலை, பஸ் வசதிகள் என்று அசத்தியிருக்கிறார். தனக்குக் கொடுக்கப்படும் தொகுதி மேம்பாட்டு நிதியை கடற்கரையோர குப்பங்களில் பள்ளி கட்டடங்களுக்குப் பயன்படுத்தி இருக்கிறார். தொகுதியில் குடி தண்ணீர்ப் பிரச்னை இல்லை. ஆனால், அத்திப்பட்டு பகுதியில் 'வேலை வாங்கி தருகிறோம்' என்று சில தி.மு.க பிரமுகர்கள் அமைச்சர் பெயரைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்.


அமைச்சர் சந்திக்கும் மற்றொரு பெரிய சவால் உட்கட்சி அரசியல். அவரைப் பிடிக்காதக் கட்சிக்காரர்கள் கூட்டணி அமைத்துக் கொண்டு அமைச்சரைப் பற்றி பல செய்திகளைக் கிளப்பி விடுகிறார்கள். குறிப்பாக அமைச்சர் கள்ளச்சாராயத்தை ஊக்குவிப்பதாகக் குற்றம் சாட்டுகிறார்கள் அவர்கள். 'சென்ற மாதம் கூட அமைச்சர் கள்ளச் சாராயத்தை ஒழித்துக்கட்டும் விதமாக ஒரு விழிப்புணர்வு முகாம் நடத்தினார். ஆனால் அண்ணன் இப்போது துணைப் பொதுச்செயலாளராக உயர்ந்து விட்டதால் மாவட்ட கோஷ்டி அரசியலைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. எல்



லோருடனும் நன்கு பழகுவார். யார் கூப்பிட்டாலும் விழாக்களுக்கும் பொதுக்கூட்டங்களுக்கும் செல்லுவார்'' என்று சொல்கிறார் உதவியாளர் ஒருவர்.

துணைப் பொதுச்செயலாளராக இருப்பதால் இப்போது தமிழ்நாடு முழுக்க சென்று கூட்டங்கள் பேசுகிறார். ஒரு சர்ச்சையும் செய்யாத அல்லது மாட்டாத நபர் என்பதால் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த திறமையாளர்கள் பலர் இருந்தும் சுந்தரத்துக்குத் துணைப்பொதுச் செயலாளர் பொறுப்பை கலைஞர் கொடுத்திருக்கிறார் என்கிறார்கள் கழகத்துப் பிரமுகர்கள்.

பால்வளத் துறையைப் பொறுத்தமட்டில் சந்தோஷமான சூழல் நிலவுவதாகச் சொல்கிறார்கள். 1996ல் பதினோறு லட்சம் லிட்டராக இருந்த பால் உற்பத்தி இன்று பதினெட்டு லட்சம் லிட்டராக உயர்ந்திருக்கிறது. பால் உற்பத்தியாளர்களுக்குப் பாக்கித் தொகை அதிகம் வைக்காமல் அவ்வப்போது பணம் கொடுத்து விடுகிறார்கள். இதற்காக 51 கோடி ரூபாய் அரசு மானியம் கொடுத்திருக்கிறது. ''எவ்வளவுதான் தனியார்கள் ஆவினுடன் போட்டியிட்டாலும், ஆவின் செல்வாக்கைக் குறைக்க முடியாது'' என்று சொல்லும் அமைச்சர் தனியார் பால் டைரிகள் சில மூடப்பட்டதைச் சொல்கிறார்.



''தாத்தா உங்களோட கடைசி ஆசை என்ன?''
''பரம்பரை பரம்பரையா நம்ம குடும்பம் இயக்கிகிட்டு வர்ற அந்த மெகா சீரியலை நீயும் தொடர்ந்து இயக்கணும்!''

— பூனாம்பாளையம்

''ஆவின் நிறுவன விவகாரங்களை சுத்தமாக அதிகாரிகளை நம்பி விடாமல் இன்னமும் சற்று மூக்கை நுழைத்து அமைச்சர் பார்க்க வேண்டும்'' என்கிறார்கள் அதிகாரிகள். ''மக்களுக்குக் கலப்படமில்லாத பால் தட்டுப்பாடின்றி கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் முன்னுரிமை கொடுக்கிறேன்'' என்கிறார் அமைச்சர். முன்பு ஒரு முறை அமைச்சருக்கே தெரியாமல் நிர்வாக இயக்குனர் பால் விலையை உயர்த்தி விட்டார்! முதல்வர் தலையிட்டு அந்த அதிகாரியை மாற்றினார்.

அமைச்சரின் பொறுப்பில் இருக்கும் குடிசை மாற்று வாரியத்தில் சத்தம் போடாமல் ஒரு நல்ல பணி நடந்து கொண்டிருக்கிறது. 1970களில் கட்டப்பட்ட வாரிய வீடுகள் பல மிக மோசமான நிலையில், சரியாக பழுது பார்க்காமல் இருந்தன. இப்போது, அந்த குடியிருப்புகளில் பழுது பார்க்கும் பணி நடந்து வருகிறது. தமிழகத்தில் சென்னை உட்பட சில நகரங்களில் வீட்டு வாடகை கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் நூற்றுக்கணக்கான வீடுகளை அரசு தன் பொறுப்பில் வைத்து வாடகைக்கு விட்டிருக்கிறது. அந்த வீடுகளின் உரிமையாளர்கள் செல்வாக்கை உபயோகித்து அந்த வீடுகளை அரசின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்வது வழக்கம். ஆதலால் இந்த விஷயத்தைக் கவனிக்கும் அமைச்சர்கள் காசு பண்ணுவதற்கு வசதி இருக்கிறது. ஆனால் அமைச்சரோ அதிலும் எந்தக் குற்றச்சாட்டும் தம் மீது விழாதவாறு மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்கிறார். கோர்ட் உத்தரவின் பேரில் மட்டுமே உரிமையாளர்களுக்கு மீண்டும் வீடுகளை ஒப்படைக்க உத்தரவு போடுகிறார் என்கிறார்கள்.

காலை ஆறு மணிக்கு அமைச்சர் வீட்டுக்குச் சென்றால் அவர் தலைப்பாகை கட்டிக் கொண்டு தோட்ட வேலை செய்வதைப் பார்க்கலாம். அமைச்சரின் வீட்டில் மாடு இருப்பதால் ஆவின் பால் காப்பியில்லை!

''ஆவின் பால் வாங்காததற்குக் காரணம், அமைச்சர் வீட்டுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்கத்தான்'' என்கிறார்கள். ஒரு சாதாரண நிலையிலிருந்து ஆட்சியிலும் கட்சியிலும் உயர்ந்திருப்பதால் அமைச்சருக்கு ஒருவித தாழ்வு மனப்பான்மை இருக்கிறது. அதை உதறித் தள்ளிவிட்டு இன்னமும் கொஞ்சம் அதிரடியாகச் செயல்பட்டால் என்ன என்று கேட்கிறார்கள் அவர் துறையினர்.

— ப்ரியன்



தங்கமோ தங்கம் வைரமோ வைரம்

– ஒரு தகவல் களஞ்சியம்

பாரம்பர்ய, நவீன நகைகள் பற்றிய அனைத்து விவரங்களும் அடங்கிய கையேடு

+

பிரசார மேடை

– தேர்தலை எதிர்நோக்கும் தலைவர்கள் கருத்து

மூலிகை மணி
கே. வெங்கடேசன்
டாக்டர் வை. அபிராமி எழுதும்

கிச்சன் கிளினிக்

– வீட்டிலேயே செய்யக் கூடிய நாட்டு வைத்தியம்.



மீண்டும் சுமி
— அரட்டைப் பகுதி



கல்கி

அடுத்த இதழ்...
தீபாவளிச் சிறப்பிதழ்

வாசகர் போட்டி

— பரிசாக அயல்நாட்டுப் பயணம்!

இனிமேல் ஆரம்பம்

— அனுராதா ரமணன்
எழுதும்
தொடர்கதை



"அந்தம்மான்னா உசுருங்க!"

ஜெயலலிதாவுக்கு மூன்றாண்டுகள் தண்டனை விதித்து தனி நீதிமன்றத் தீர்ப்பு வெளியான தினம். மாலை நான்கு மணி அளவில் திருச்சி பெட்டவாய்த்தலை பேருந்து நிலையம் அருகில் தலைவிக்குக் கிடைத்துள்ள தண்டனையை தாங்க முடியாமல் ஐந்து லிட்டர் மண்ணெண்ணெயை உடலில் ஊற்றி, தீக்குளிப்பு செய்தார் அதிமுக தொண்டரான ராஜா என்ற ராஜேந்திரன்: 'குப்'பென்று உடல் பற்றி எரிய அருகிலிருந்தவர்கள் பாய்ந்து சென்று சாக்கு மற்றும் கிடைத்த துணிகளால் தீயை அணைத்து விட்டு, திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.



• மருத்துவமனையில் ராஜா...



• மயிலாயி அம்மாள்

உடலில் காயங்களோடு அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கும் அவருக்கு வயது முப்பத்தி மூன்று. மனைவி, இரண்டு மகன்கள் உள்ளடக்கிய குடும்பஸ்தர். கூலித் தொழிலாளி. அரசியல் கட்சிகள் வகுத்து வைத்துள்ள வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்ந்து வருபவராம். மருத்துவமனையில் ராஜாவைச் சந்தித்தோம்.

எழுபது வயதுத் தாயார் மயிலாயி அம்மாள் உள்பட அவரது உறவினர்கள் அந்த அறையில் சூழ்ந்திருந்தனர்.

செவிமடலின் பின்புறம், கழுத்துப் பகுதி, தோள் பட்டை, முதுகுப்புறம் முழுவதுமென தீயின் கொடூரம் தன் வேலையைக் காட்டியிருந்தது.

"எம்.ஜி.ஆர். இருந்தவரைக்கும் அவரோட ரசிகனா... கட்சியில ஈடுபாடாத்தான் இருந்தேன். அப்புறம் அம்மா (ஜெ) வந்தவுடனே அவங்களை தெய்வமா ஏத்துக்கிட்டேன். இப்பவும் கட்சி வேலைன்னா கண்ணை மூடிட்டுக் கிளம்பிப் போய்டுவேன். எனக்கு அந்தம்மாதாங்க (ஜெயலலிதா) உசுரு!

"அவங்க மேல கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கு. இதுக்காக நீங்க தீக்குளிச்சா உங்க மனைவி குழந்தைகளை யார் பார்ப்பாங்க? அதை நினைச்சிப் பார்த்தீங்களா?"

"அந்த நேரத்துல அதெல்லாம் நெனைச்சிட்டு இருக்க முடியாதுங்க. அந்தம்மாவுக்குத் தண்டனைன்னு கேள்விப்பட்டதும் என்னால தாங்க முடியலை. ஒரு வெறியிலதான் எனக்கு நானே நெருப்பு வெச்சுகிட்டேன்!

"என் உயிரு போனாப் போய்ட்டுப் போவுதுங்க. ரோட்ல நடந்து போறோம். கார்... பஸ்சு வந்து மோதி செத்துப் போறோம். அப்ப என்ன செய்வோம் சொல்லுங்க!"

இத்தனை அறிவுபூர்வமாய்(!) பேசும் ராஜா படித்தது ஆறாம் வகுப்பு வரை. மருத்துமவனைக்கு அன்று காலையில் வந்து தீக்குளித்த தொண்டரைப் பார்த்து விட்டுச் சென்றிருந்தார் அ.தி.மு.க. பொருளாளரான திண்டுக்கல் சீனிவாசன் எம்.பி. கட்சியிலிருந்து பத்தாயிரம் ரூபாயை உதவியாக அளித்தாராம் அவர்.

"தீக்குளிச்சி தொண்டர்கள் யாரும் உயிர்த் தியாகம் செய்யறதை அம்மா (ஜெ) விரும்பறது இல்லே. நல்லா தெரிஞ்சிக்க. இனிமே இந்த மாதிரி வேலையெல்லாம் செஞ்சுடாதய்யா!" என்று அன்புடன் கண்டித்து விட்டுப் புறப்பட்டாராம் அதிமுக பொருளாளர்.

— திருநாவுக்கரசு

KALKI SHOPPING PAGE


Brite Enterprize
IFB Dealers cum Wash Care Centre
'KASHYAP ENCLAVE',
13-G, VELACHERY MAIN ROAD,
CHENNAI - 42 FAX - 044 2346753

வாஷிங் மெஷின்களிலேயே உலகத் தரம் வாய்ந்த IFB வாஷிங் மெஷின் மொத்த விலைக்கும் சுலபமான மாதாந்திர தவணை முறையிலும் வாங்க சிறந்த இடம்.

மேலும் சுகாதாரமான முறையில் IFB வாஷிங் மெஷின் மற்றும் ட்ரையர் மூலமாக மழை காலமாக இருந்தாலும் 24 மணி நேரத்தில் சிறந்த முறையில் சேவை செய்து வரும் IFB Wash Care Centre.

குறிப்பு — கம்பெனி, ரெஸ்டாரெண்ட், ஹவுஸ்கீப்பிங் ஆர்டர்கள் வரவேற்கப்படுகிறது.

ஓம்



LUCKY GANESHA / அதிர்ஷ்ட பிள்ளையார்

எல்லா பிள்ளையாரும் அதிர்ஷ்ட பிள்ளையார்தான். 'லக்கி கணேசா' என்று அழைக்கப்படும் இந்த அதிர்ஷ்ட பிள்ளையார் கையினால் 'கார்விங் கிளாஸ்' என்ற உயர்தர கண்ணாடியினால் வடிவமைக்கப்பட்டது. இந்த பிள்ளையார் கைக்கு வந்த பதினைந்து நாட்களில் 'வாழ்கையில் நிறைந்த அதிர்ஷ்டத்தையும், குடும்பத்தில் சந்தோஷத்தையும்' கொடுக்கிறது.

இதன் சிறப்பம்சம். முதன் முதலில் நாங்கள் வடிவமைத்த பிள்ளையார் காஞ்சிமடத்தின் மஹா மஹா பெரியவாளின் பரிபூரண ஆசி பெற்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அதிர்ஷ்ட பிள்ளையாருக்காக விசேஷ பூஜை நடத்தப்படுகிறது.

எனக்கு கடந்த ஐம்பது ஆண்டுகளாக திரு. சந்தோஷ் சிவாவை நன்கு அறிவேன். கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்த அதிர்ஷ்ட பிள்ளையார் என்று அழைக்கப்படும் லக்கி கணேசாவை பலருக்கும் கொடுத்துவருகிறார். நல்லது செய்யும் அதிர்ஷ்ட பிள்ளையார் மேலும் மேலும் பிரபலம் அடைந்து வருவது கண்டு எனக்கு மனம் நிறைந்த மகிழ்ச்சியாய் உள்ளது. இந்த ஆன்மீக பணியில் ஈடுபட்டுள்ள திரு. சந்தோஷ் சிவாவிற்கு என் வாழ்த்துக்கள். — மேஜர். எம். கேலுண்ணி (Retd)
(திரைப்பட நடிகை, சமூக சேவகி ரேவதியின் தந்தை)

SANTACLAUS 88

No. 10, 1st Floor, Alsa Mall, (Opp. Atlantic Hotel) Montieth Road, Egmore, Chennai - 600 008, Tamil Nadu.
✆ : 91-44-8554247, Fax : 91-44-8554830, Email : luckyganeshaa@yahoo.com

- Our prices for LUCKY GANESHA Small (1.5") - Rs.30/-, Medium (2") - Rs.60/-, Big (3") - Rs.90/- Courier Charges + Rs.15/- for Tamil Nadu and Rs. 30/- for other states.
- For your requirements you could send the Money Order or Draft favouring "SANTACLAUS 88".
- For exclusive franchies in your locality, contact us for more details.

Please write your address correctly

குறிப்பு : எங்களுக்கு சென்னையில் வேறுகிளைகள் கிடையாது



"கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில்
விளம்பரம்
செய்ய ரூ.1250/-
மட்டுமே. செய்து
பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.
போன்: 2345622, 2345623

FOR COMFORTABLE AND
ECONOMICAL STAY AT
NEW DELHI
VISIT

HOTEL DURGA DELUX

(Govt. Approved)
5/40, W.E.A. SARSWATI-MARG
KAROL BAGH, NEW DELHI - 110005
Telephone: 011-5785648
011-5785610, 011-5766243
FAX : 011-5753040

TOUR & TRAVEL FACILITY

STD/ISD FACILITY

FOR LOCAL ENQUIRY AT **CHENNAI**
CONTACT: 044-4724327
(AFTER 6 PM ONLY)



அல்லி 2000!

அந்தக் குழந்தைக்கு நான்கு வயது. ஏகப்பட்ட விளம்பர படங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்து கொண்டிருந்தன. பற்பசை விளம்பரம் ஒன்றின் ஷூட்டிங். அந்தப் பத்து செகண்டு விளம்பரப் படத்தை இரண்டு நாட்களாக எடுத்துக் கொண்டே இருந்தார்கள். அதுவும் எப்படி? குழந்தை கையில் பிரஷ் பிடித்து பற்களைத் தேய்த்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்தக் குழந்தையும் தேய்த்தது. தேய்த்தது தன் பால் பற்களைத் தேய்த்துக் கொண்டே இருந்தது. சிறது நேரத்தில் சட்டென்று வாய்க்குள் ஏதோ இடறியது. பல் தேய்ப்பதை நிறுத்திவிட்டு, வாயைத் திறந்தால், மேல் வரிசையில் ஒரு பல் மிஸ்ஸிங்! ''என் பல்லு...'' என்று குழந்தை அழ ஆரம்பிக்க, அதைச் சமாதானப் படுத்துவதற்குள் வாழ்க்கை வெறுத்து விட்டது. பிறகு ஒரு பல் டாக்டரிடம் காண்பித்துச் செயற்கைப் பல் ஒன்றை அவசரம் அவசரமாக தயார் செய்து, அதைத் தேய்ப்பது மாதிரி படம் எடுத்தார்கள்.

அந்த ''என் பல்லு...'' குழந்தையான ரீச்சாபலாட், குமரியாகி இப்போது ஹீரோயின் ஆகியிருக்கிறார் சரணின் 'அல்லி அர்ஜுனா' படத்தில்.

படப்பிடிப்பில் தமிழ் வசனங்களை, ஆங்கிலத்தில் எழுதி வைத்துக் கொண்டு.

பாரதிராஜா + சரண் சாய்ஸ்

அல்லி அர்ஜுனா படத்துக்கு ரீச்சாவை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?

• ஷூட்டிங் ஸ்பாட்டில் மனோஜ், ரீச்சா, சரண்



என்று இயக்குனர் சரணிடம் கேட்டோம். ''ஒரு டீ.வி. விளம்பரத்தில், நான் ரீச்சாவைப் பார்த்தவுடன், அவர்தான் என் ஹீரோயின் அல்லி என்று தீர்மானித்து விட்டேன். அந்த விளம்பரத்தை எடுத்த ஏஜென்சியிலிருந்து அட்ரஸ் வாங்கிமும்பைக்குப் பறந்தேன். அந்த விலாசத்துக்குச் சென்றேன். பல அடுக்கு கொண்ட அந்த கட்டடத்தின் லிப்டில் போகிறபோதுகூட 'ஹீரோயின் கிடைத்து விட்டார்' என்று நினைத்துக் கொண்டே இருக்கிறோம். இவர் நேரில் பார்த்தால் எப்படி இருப்பாரோ? என்கிற இலேசான

பேசி, நடித்துக் கொண்டிருந்தார் ரீச்சா. ஷூட்டிங் இடைவேளை யில், ''ஹாய்'' சொல்லிவிட்டு ஆரம்பித்தார்.

''சரண் படத்தில் ஒப்பந்தம் ஆனபின், ஒரு தெலுங்குப் படம் முடிந்து, இதோ ரிலீஸ் ஆகிவிட் டது. அதிலும் அல்லி அர்ஜுனா போலவே, துடிப்பான கேரக்டர். சும்மாவாவது, இரண்டு பாட் டுக்கு டான்ஸ் ஆடிவிட்டு, பொம்மை மாதிரி வந்து போவதில் எனக்கு விருப்பம் இல்லை. ஒவ்வொரு கேரக்டரிலும் எமோஷன்... எனர்ஜி... இருக்க வேண்டும். எமோஷன் என்றால், பிழியப்பிழிய அழுவது என்று அர்த்தம் பண்ணிக் கொண்டு விடாதீர்கள்'' என்று சீரியஸாகச் சொல்கிறார் ரீச்சா.

சின்ன வயதில் மாடலிங்கில் அப்படி யொரு பிசி. எண்பது பிளஸ் விளம்பரங் களில் தோன்றியிருக்கிறார் ரீச்சா. அப்பா பலாட் பிசினஸ் மேன். அம்மா ஹவுஸ் ஒய்ப். அண்ணன்களில் ஒருவர் எம்.பி.ஏ. அண்ணி சி.ஏ. இன்னொரு அண்ணன் என்ஜினீயர். இவர்தான் மாடலிங், சினிமா என, 'என் வழி தனி வழி' என்று வந்து விட்டார்.

சிறுமியாக இருந்தபோது யாஷ் சோப்ரா படத்தில் சிறுவயது ஸ்ரீதேவியாக நடித்திருக்கிறார் ரீச்சா. ஜெய்ப்பூரில் கட்டெரிக்



சந்தேகம். காலிங் பெல்லை அழுத்திவிட்டுக் காத்திருந்தேன். கதவு திறந்தது. விளம்பரத்தில் தோன்றிய பெண் நின்று கொண்டிருந்தார். ஆனால், நான் ஹீரோயினாக அறிமுகப்படுத்த நினைத்திருந்த பெண் இல்லை அவர். அந்த விளம்பரத்தில் தோன்றிய நாலடி உயரமே கொண்ட வேறு ஒரு பெண். எனக்குப் பெரும் ஏமாற்றம். ஏதோ சொல்லி சமாளித்துவிட்டு, அடுத்து என்ன செய்வது? என்ற யோசனையுடன் சென்னை திரும்பினேன்.

''சில நாட்களில் நண்பர் நிகில் முருகன், மும்பையைச் சேர்ந்த மாடல் கோ–ஆர்டினேட்டர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட சில மாடல் அழகிகளின் போட்டோக்களைக் கொண்டு வந்தார். ஒவ்வொன்றாய்ப் பார்த்துக் கொண்டே வந்தேன். ஒரு படத்தைப் பார்த்தவுடன் என் முகம் ஆயிரம்வாட் பல்ப் ஆனது. காரணம் அந்தப் படத்தில் இருந்தவரைத் தேடிக் கொண்டுதான் நான் மும்பை போய் வெறும் கையுடன் திரும்பினேன். அந்த புகைப்படங்களுடன் பாரதிராஜாவைச் சென்று சந்தித்தேன். ஒன்றும் சொல்லாமல், அவரிடம் போட்டோக்களைக் கொடுத்தேன். அவரது சாய்ஸ் நான் முடிவு செய்து வைத்திருந்த ரீச்சாவேதான்!

இரண்டு பேருக்குமே இனிய ஆச்சரியம்!''

கும் ஒரு நடுப்பகல் வேளையில் நடந்த அந்தப் படத்தின் ஷூட்டிங் பற்றி இன்றைக்கும் அவர் நினைவில் நிற்கும் சம்பவம் இது.

அனில்கபூர் காரில் புறப்பட்டு வேகமாய் போகிறபோது காரின் பின்னாலேயே சிறிது தூரம் துரத்திக் கொண்டு போக வேண்டிய காட்சி. டேக் மேல் டேக் என்று முப்பது தடவைகளுக்குமேல் அந்தக் காட்சியை எடுத்தார்கள். ரீச்சாவுக்கோ கால் வலி தாங்கவில்லை. ஒரு கட்டத்தில், 'இனிமேல் என்னால் ஓட முடியாது' என்று அழுது கொண்டு உட்கார்ந்து விட்டார்.

''எனக்காக அனைவரும் பரிதாபப் பட்டார்கள். ஆனாலும் காட்சியை எடுத்து முடித்தாக வேண்டுமே! சட்டென்று காரிலிருந்து அனில் கபூரை இறங்கச் சொன்

''ஏண்டா! நேத்து 'நேர்முகத்' தேர்வுக்குப் போனியே! என்ன ஆச்சு?''

''நான் போறதுக்கு முந்தியே 'மறைமுகத்' தேர்வில் ஒருத்தரை செலக்ட் பண்ணிட்டாங்க!''

– சம்பத் குமாரி

னார் யாஷ் சோப்ரா. என்னை காரில் உட்கார வைத்தார். சாக்லேட் டப்பா என் கையில் திணிக்கப்பட்டது. ஜாலியாய் காரில் ஊர் சுற்றி வா. சாக்லேட் தின்றபடி என்று சொல்லி அனுப்பி வைத்தார். எனக்கு ஒரே குஷி. 'போதாது– இன்னும் ஒரு ரவுண்டு... என்று திரும்பத் திரும்ப சொல்லி, இரண்டு மணி நேரம் வரை காரிலேயே ஜெய்ப்பூர் நகர ரோடுகளில் சுற்றி வந்து கொண்டிருந்தேன்.''

'சட் பட் சுன் முன்' என்று ஒரு குழந்தைகள் திரைப்படம். இதில் பிரதான பாத்திரமான சுன்முன்னாக நடித்தது ரீச்சாதான். ஏழாம் வகுப்புவரை விளம்பரப் படங்கள், சினிமா என்று நடித்துக் கொண்டிருந்தவரை, அதன்பின், 'போதும் நடிப்பு! இனி ஒழுங்காய்ப் படி! என்று பெற்றோர் சொல்லிவிட அப்புறம் பத்தாம் வகுப்பு முடிக்கிறவரைதான் உண்டு தன் படிப்பு

உண்டு என்று இருந்து விட்டார்.

அதன்பின் விளம்பர உலகில் மறுபிரவேசம். போரா நேச்சுரல் க்ரீம், சன் சில்க் ஷாம்பூ, பாராசூட் தேங்காய் எண்ணெய், ஃபாண்டா என்று பெரிய பட்டியலே போடலாம். உபரியாய் மியூசிக் ஆல்பங்களிலும் தோன்றினார். மொத்தம் ஐந்து மியூசிக் ஆல்பங்கள் வெளியாகிவிட்டன.

'யாருடைய மனைவியானால் என்ன?' என்று ஒரு மேடை நாடகம் மும்பையில் மிகப் பிரபலம். அதில் நடித்திருக்கிறார் ரீச்சா, "அந்த நாடகம் சென்னையில் கூட மேடையேறியது. அப்போது நான் நாடகத்தில் நடிப்பதற்காக சென்னைக்கு வந்திருக்கிறேன். சினிமாவைவிட நாடகத்தில் நடிப்பதில் த்ரில் அதிகம். காரணம் லைவ் ஆடியன்ஸ். உடனடியாக விமர்சனம், பாராட்டு கிடைத்துவிடும். ஆனால் இரண்



டும் வெவ்வேறானவை. கடைசி வரிசை நாடக ரசிகராலும் வசனமும் நடிப்பும் ரசிக்கப்பட வேண்டுமில்லையா?"

பத்து வருடங்கள் கதக் கற்றுக் கொண்டிருக்கிறாராம் ரீச்சா. என்றாலும் "அதற்கும், சினிமா டான்ஸுக்கும் பெரிசாய் சம்பந்தமில்லை. ஆனாலும் டான்ஸ் மூவ்மென்ட்ஸ் சுலபமாக வர, கதக் எனக்கு உதவுகிறது" என்கிறார்.

"தமிழ் தெரியவில்லை என்பதை ஒரு குறையாகவே நினைக்கிறேன். மொழி தெரிந்தால், இன்னமும் ஈடுபாட்டுடன் கேரக்டரை, காட்சியை உணர்ந்து நடிக்கலாம்' என்று எனக்குத் தோன்றுகிறது" என்கிறார் ரீச்சா பலாட்.

அட! ஒரு ஹீரோயினுக்கு அவசியமில்லாத விஷயங்கள் பற்றியெல்லாம் பேசுகிறாரே ரீச்சா!

— மௌலி

நகர்வலம்

நிருபர் சக்கரத்தாழ்வாரை ஓரங்கட்டிவிட்டு, கடந்த வாரம் விழாக்களைத் தமது பார்வையில் விவரிக்கிறார் வாடிக்கையாக சக்கரத்துக்கு ஆட்டோ ஓட்டும் செல்வம்.

– ஆட்டோ செல்வம்

பாரதியார் செத்த பிறகு சுடுகாடு வரைக்கும்போய் மரியாதை செலுத்தின வங்க பதினாலே பேருதான்னு சினிமால பார்த்தப்ப பரிதாபமாத்தான் இருந்துச்சு. அதைக்காட்டிலும் ஐயோ பாவம் அந்த சினிமா ரிலீஸ் அன்னக்கி பதினாலே போதான் அதப் பாத்தாங்கன்றது!

எப்டியோ, பத்திரிகைங்க தூக்கி வைச்சதுல பாராட்டு விழா எடுக்கற லெவலுக்குப் படம் ஓடியிருக்குது- விழாவையும் திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்துலதான் நடத்துனாங்க- அங்க போனா பெரிய டமாஷ்! நம்ப முடியாத அளவுக்குக் கூட்டம். "சரி உங்கள்ல எத்தினி பேர 'பாரதி' படத்தைப் பாத்தீங்க?"ன்னு பேச்சாளர் ஞானி கேட்டாரே பார்க்கணும்... வந்திருந்த மூவாயிரம் பேர்ல கையைத் தூக்கினவங்க 200-250தான்! (ஜனங்க பொய் சொல்ல பயப்படறாங்கடான்னு ரொம்ப சந்தோஷமாயிருந்துச்சு!) "நீங்க மெய்யாமலும் சுஜாதாவையும் ஞான ராஜசேகரனையும் பாராட்ட நினைச்சா சினிமாவைப் போய்ப் பாருங்கன்னுட்டார் ஞானி! மினிஸ்டர் முல்லைவேந்தன் படத்துக்கு வரிவிலக்கு வாங்கித்தர்றதா பிராமிஸ் பண்ணிட்டாரு மேடையில...

"நீங்கள்ளாம் நல்ல சினிமா எடுத்து என்னை மாதிரி கனவு சினிமாக்காரங்களுக்கு வேட்டு வைச்சுடாதீங்க சார்"ன்னு சுஜாதா கிட்டே மணிரத்னம் கேட்டுக்கிட்டாராம். அதைப் போய் மேடையில சொல்லி வச்சுட்டார் சுஜாதா! ஜோக்கா சீரியஸ்ஸான்றது அவங்க இரண்டு பேருக்குத்தான் தெரியும்!



அகில இந்திய மக்கள் முன்னேற்றக் கழகம் தெரியுமா...? தெரியாக்கட்டி பரவால்லை - தொப்பி, ஜிப்பா ஓவர் கோட்னு 1960 ஹிந்தி சினிமால வர்ற பணக்கார அப்பா கணக்கா அதுக்கு ஒரு தலைவர். பாமகுரோவ் ஹோட்டல்ல வைச்சு பிரஸ் மீட் நடத்துனாரு.

ஜாதிகட்சி இல்லியாம். சைட்ல காலேஜ் ஆரம்பிச்சு, ஸ்டூடன்ஸ்ஸுக்கெல்லாம் நல்ல அரசியல்னா என்னன்னு கத்துக்குடுத்து அப்படியே அவங்களைக் கட்சி உறுப்பினராக் கிக்குவாராம் தலைவர் ராஜா. (ஏறகெனவே ஒரு டஜன் காலேஜ் நடத்திக்கிட்டிருக்காராம்!)

'வீரப்பன் காட்டுல ராணுவ பயற்சி முகாம் ஆரம்பிக்கணும்'னு ஜோக்கடிக்காம சீரியஸாச் சொன்னாரு! வீரப்பன் ஆட்கள் பயந்து ஓடிடுவாங்களாம்! சரி, காட்டு மிருகங்களுமில்லே பயந்து ஓடும்னு கேட்டாரே நம்ப நிருபா; அப்போ ராஜா முகத்தைப் பார்த்திருக்கணுமே...

இந்த மாதிரி கண்ட கண்ட மீட்டிங்குக்கெல்லாம் சவாரி கூப்டு என் நேரத்தை வீணடிக்காதேன்னு சக்கரத்துக்கிட்டே கண்டிசனாச் சொல்லிட்டேன்.

மொத்தம் எழுபத்தேழு வி.ஐ.பிங்க அத்தினி பேர் பத்தியும் 'மறக்க முடியுமா?'ன்னு ஒரு புத்தகம். தங்க காமராஜன்றவர் எழுதி, ராஜா அண்ணாமலை மன்றத்துல வெளியீட்டு விழா. "அவ்ளோ வி.ஐ.பிக்களும் வருவாங்க செல்வம் விழாவுக்கு"ன்னு சக்கரம் பாவம் ரொம்ப அப்பாவியா நம்பி இட்டுட்டுப் போனாரு... விழா தொடங்கறதுக்கு முன்ன ஹால் காலியாயிடுச்சு! அப்புறம் எல்லோரும் புத்தகத்தைப் புகழ்ந்து தள்ளினாங்க...

தெரியாமத்தான் கேக்கறேன்-நம் மனப்பத்தி ஒரு புக்ல வந்துச்சுன்னா நாமே போய் அதைப் பாராட்டி பேசறது நல்லாவாயிருக்கு...?

எல்லா பேச்சாளர்களும் பேசி முடிக்கறப்போ ஹால்ல ஏழு பேர் இருந்தாங்க! திரும்பி வீடு வர வரைக்கும் சக்கரத்துக்கு நான் விட்டடோஸை அவரால 'மறக்க முடியுமா?'

– மீண்டும் சந்திக்கும் வரை மீட்டருக்கு மேல் கேட்காத ஆட்டோ செல்வம்.



தடய அறிவியல் நிபுணர் டாக்டர் பி. சந்திர சேகரன்

அது இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடந்து கொண்டிருந்த போட்டி. இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் ஜான் லீவரின் பந்து வீச்சில் இந்திய விக்கெட்டுகள் மட, மடவென சரிந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு முறை பந்து வீசும் போதும், தனது முகத்தில் விழும் கற்றை முடியை அலட்சியமாகத் தூக்கிப் போட்டு, அதன் பின் பந்தை நன்கு வருடிக் கொடுத்து பந்து வீசினார் லீவர். அவரது பந்து வீச்சு வழக்கத்தைவிட அதிக சுழற்சியுடனும், அதிரடி திருப்பங்களுடன் வருவதாகவும் சொன்னார்கள் வேக, வேகமாக பெவிலியனுக்கு திரும்பிய இந்திய பாட்ஸ்மேன்கள். இந்திய அணி தலைவரும், மேனேஜரும் அவசர அவசரமாக ஆலோசனை செய்தார்கள். முடியைத் தூக்கிப் போட்டு, அதே கையால் பந்தை நன்கு வருடி விட்டுப் போடும் லீவரின் வீச்சு முறை அவர்களுக்கு வித்தியாசமாகத் தெரிந்தது.

''தலையில் ஏதோ ரசாயனப் பொருளை தடவியிருக்கிறார் லீவர்; ஒவ்வொரு முறை பந்து வீசும் போதும் தலையிலுள்ள அந்த ரசாயனத்தை, முடியைத் தூக்கி விடும் சாக்கில் தொட்டு, பந்தில் தடவிப் போடுகிறார். அதனால்தான் அவருக்கு வழக்கத்தை விட நன்றாகப் போட முடிகிறது'' என்று இந்திய கிரிக்கெட் சங்க அதிகாரிகளிடம் புகார் சொல்லி விசாரிக்கச் சொன்னார்கள். விவகாரம் என்னிடத்தில் வந்தது. லீவர் உபயோகித்த பந்துகளைக் கொண்டு வரச்



• ஜான் லீவர்

விக்கெட்டுகள் விழுந்த ரகசியம்!

கிரிமினல்கள் ஜாக்கிரதை — 12

சொன்னேன். சோதனைச்சாலையில் வைத்து அதன் மேற்புறத்தை ஊடுருவினேன். பலவிதமான சோதனைகளுக்குப் பிறகு, அந்தப் பந்தில் படிந்திருந்த பொருள் தலையில் போடும் வாசலைன் (Vaseline) என்பது புரிந்தது. அந்தப் பந்து வீச்சாளர் தலையில் போட்டிருந்த வாசலைன்தான் பந்திலும் பரவியிருந்தது. ஒவ்வொரு முறை பந்து வீசும்போதும் முகத்தில் விழும் முடியைத் தூக்கி விட்டுப் போட்டதால்தான் வாசலைன், கைகள் மூலம் பந்துக்கும் வந்தது. எனது முடிவை இரு அணிகளின் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அப்புறம் எந்தப் பிரச்னையுமில்லாமல், போட்டி தொடர்ந்து நடந்தது.

இந்தச் சம்பவத்தை எதற்குச் சொல்கிறேன் என்றால் தடய அறிவியலை எதற்கு வேண்டுமானாலும் பொருத்திக் கண்டுபிடிக்கலாம். தடய அறிவியலில் நிறைய உட்பிரிவுகள். தடய மனோதத்துவம், தடய தணிக்கையியல் என்றெல்லாம் இருக்கின்றன. இப்போது பரபரப்பாகப் பேசப்படும் கிரிக்கெட் சூதாட்டத்தில் உண்மையைக் கண்டுபிடிக்க, தடய அறிவியலைக் கையாள வேண்டும் என்பது என் கருத்து.

உதாரணமாக இந்த விவகாரத்தில் அடிபடும் தரகர் சஞ்சய் சாவ்லா, தென் ஆப்பிரிக்கா தொழிலதிபர் காசிமுடனும் ஹான்சி குரோனியேவிடமும், கொச்சியிலிருந்து பலமுறை தொலைபேசியில் பேசியுள்ளார். மனோஜ்பிரபாகர் சில வீடியோ காட்சிகளைப் போட்டுக் காண்பித்து, கபில்தேவை சிக்க வைத்திருக்கிறார். இந்தத் தடயங்களை, குரல் நிபுணர்களிடமும், வீடியோ தொழில் நுட்ப நிபுணர்களிடமும் கொடுத்து, தீவிரமாக சோதனை செய்யச் சொல்ல வேண்டும்.

தென் ஆப்பிரிக்காவில் கிரிக்கெட் சூதாட்டத்தை விசாரிக்க அமைக்கப்பட்ட கிங் கமிஷனும், இந்தியாவில் விசாரிக்கும் சி.பி.ஐ.யும் தடய அறிவியல் துறை நிபுணர்களைச் சற்று விரிவாகவே கலந்து ஆலோசிக்க வேண்டும். குற்றம் சாட்டப்படுபவர்களிடத்தில் அவர்கள் பொய் சொல்கிறார்களா என்பதை அறிய பாலிகிராப் எனப்படும் மிஷினைப் பயன்படுத்துகிறார்கள். இதிலிருந்து எடுக்கப்படும் வாக்குமூலத்தை நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. வாய் குளறுதல், வியர்த்துக் கொட்டுவது, விசாரிக்கும் சமயத்தில் ரத்த அழுத்தம் ஏறுவது ஆகியவற்றைக் கொண்டுதான் ஒருவர் பொய் சொல்கிறாரா என்பதைக் கண்டுபிடிக்கிறார்கள். ஆனால் பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்தவனிடம் இந்த மிஷினும் விசாரணை அதிகாரிகளும் ஒன்றும் செய்ய முடியாது. எனவே மௌன சாட்சியங்களான தடயங்களை வைத்துத்தான் குற்றவாளிகளை அடையாளம் காண வேண்டும். விஞ்ஞானம் ஒரு போதும் பொய் சொல்லாது. மனிதன் ஏமாற்ற நினைத்தால் கூட விஞ்ஞானம் காட்டிக் கொடுத்து விடும்.

தடயப் பொறியியல் போய் பல் தடயவியல் (Forensic odontology) என்பது மற்றொரு முக்கியத்துறை. ஒவ்வொரு மனிதனுக்கும் பல்லின் நீளம், அகலம், கனம், பல் இடைவெளி, வெட்டுப்பற்களின் கூர்முனை அத்தனையும் வேறுபடுகிறது. ஒரு கற்பழிப்பு வழக்கில் ஒரு பெண்ணின் உடலில் உள்ள பற்காயங்களையும், சந்தேகப்படும் ஆணின் பல்லின் வார்ப்பையும் (mould) பொருத்திப் பார்ப்பதன் மூலம் அவர் குற்றவாளிதானா என்பதைக் கண்டுபிடிக்க முடியும். ஒருவரின் உடலில் பல் காயம் படிந்தால், அது மறைய பத்து, பதினைந்து நாட்கள் ஆகும். எனவே இது போன்ற வழக்குகளில் பல் தடயம் முக்கியப் பங்கு வகிக்கிறது. தடய அறிவியலில் பல வருடங்களுக்கு முன்னர் பல் தடயங்களைப் பயன்படுத்திக் கண்டுபிடித்த

"ஆபரேஷன் தியேட்டர்ல வேலை கேக்குறியே உனக்கு முன் அனுபவம் உண்டா?"

"எங்க ஊர் ரத்னா தியேட்டர்ல அஞ்சு வருஷம் டிக்கட் கிழிச்சிக்கிட்டிருந்தேங்க."

— வத்திராயிருப்பு
தெ. சுந்தரமகாலிங்கம்



ஒரு வழக்கை மறக்க முடியாது. சாந்தி என்ற பெண்ணின் மரணம் தொடர்பான வழக்கு அது.

சாந்திக்கு வயது இருபத்திரண்டு. அழகாக இருப்பார். சில இள வட்டங்கள் இவள் பின்னாலேயே வந்து வம்புக்கிழுப்பது வழக்கமாக நடைபெறும் ஒன்று. வீட்டில் சாந்திக்குத் துணை வயதான பாட்டிதான். ''எனக்கென்று ஆதரவாகப் பேச யாருமில்லையே' என்று தனிமையில் அழுவார். பஞ்சாயத்துத் தலைவர், ஊர் பெரிய மனிதர்களிடம் புகார் சொல்லலாம் என்றால் அவர்கள் 'இரக்கம் காட்டுகிறோம்' என்ற போர்வையில் தவறாக நடக்க முயன்றார்கள். "உனக்கு யாரையாவது கல்யாணம் பண்ணி வச்சுட்டா நான் நிம்மதியாகக் கண்ணை மூடுவேன்'' என்று பாட்டி அடிக்கடி சொல்லுவாள்.

மூன்று நாட்களாக மழை அடித்துக் கொண்டிருந்தது. பாட்டிக்குக் கஞ்சி வைத்துக் கொடுக்க அடுப்பை பற்ற வைத்தாள் சாந்தி. கதவைத் தட்டுகிற சப்தம். "இந்த நேரத்தில் யார்?'' என்று யோசித்தவாறே கதவைத் திறந்தாள். அப்போது அவள் அலறியதைக் கேட்டும் எழுந்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்தாள் பாட்டி.

ஆற்றங் கரையில் கூட்டம். பெண்ணின் உப்பிய உடல் அங்கு கிடத்தப்பட்டிருந்தது. ஆம்! சாந்திதான். போலீஸ் வந்தது. சாந்தியின் சினேகிதிகள் விசாரிக்கப்பட்டனர். "பசங்க ரொம்ப கலாட்டா செய்ததால் மனம் வெறுத்து ஆற்றிலோ, குளத்திலோ விழுந்து தற்கொலை செய்து கொள்ளலாம்'' என்றுகூட சொல்லிக் கொண்டிருந்ததாக சிநேகிதிகள் சொன்னார்கள். முதல் நாள் இரவு யாரோ கதவைத் தட்டிய சம்பவத்தைப் பற்றிச் சொன்னாள் பாட்டி. இது பற்றி மேலும் துருவ முற்படாமல் 'தற்கொலை' என்று முடிக்கப் பார்த்தது போலீஸ்.

ஆனால் ஐ.பி.எஸ் முடித்துவிட்டு பொறுப்பில் இருந்த இளம் போலீஸ் அதிகாரிக்கோ சந்தேகம். சாந்தியின் பிணத்தை மாவட்டத் தலைநகரில் உள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரச் சொன்னார். நன்றாக ஆராய்ந்து பார்த்ததில் உடலில் பல இடங்களில் பற் காயங்கள். சாந்தியின் சிநேகிதிகளிடம், யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா என்று விசாரிக்கப்பட்டது.

திருத்தம்

8.10.2000 கல்கி, 'கிரிமினல்கள் ஜாக்கிரதை' அத்தியாயம் 10ல் இடம் பெற்ற 'Corpus detecti' என்ற ஆங்கிலச் சொல்லை 'Corpus delicti' என்று திருத்தி வாசிக்கவும்.

— ஆர்

அவர்கள் சண்முகம், கந்தன், கணேசன் என்று கிராமத்து இளவட்டங்களின் பெயர்களை அடுக்கினார்கள். சந்தேகப்பட்ட இளைஞர்களின் பல் வார்ப்புகள் (mould) எடுக்கப்பட்டன. கடைசியாக சண்முகத்தின் பல் அமைப்பு சாந்தியின் உடலிலிருந்து பற்காயத்தோடு ஒத்துப் போனது. போலீஸ் கொஞ்சம் அதிரடியாக விசாரித்தவுடன் உண்மை வெளிவந்து விட்டது.

பலாத்காரத்திலும் அதிர்ச்சியிலும் சாந்தி இறந்து விட்டார். ஆற்றில் வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தபடியால், அதில் தூக்கிப் போட்டு விட்டால் யாருக்கும் தெரிய வராது என்று ஆற்றில் பிணத்தை வீசி விட்டார்கள் காயவர்கள். நல்லவேளையாக அந்த இளம் போலீஸ் அதிகாரி, லோக்கல் போலீசை நம்பாமல் கொஞ்சம் துருவிப் பார்த்ததால்தான் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். அதற்கு உதவியது பற்காயம்தானே!

தடய அறிவியல் துறையில் கடந்த முப்பது வருட காலத்தில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் வழக்குகளில் நான் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவியாக இருந்திருக்கிறேன். உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளுக்குத் தொழில் முறையிலும், தனிப்பட்ட முறையிலும் பயணம் செய்திருக்கிறேன். ஐரோப்பாவில் உள்ள பல்வேறு தடய அறிவியல் சோதனைச் சாலைகளை நான் பார்த்திருக்கிறேன். அங்குள்ள நிபுணர்களிடம் பயிற்சியும் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அந்த வகையில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த தடய அறிவியல் வல்லுனர் டாக்டர் பட்சாக்கிடம் பெற்ற பயிற்சியை நான் மறக்கவே முடியாது. ஒரு குற்றம் நடந்த சூழலை அப்படியே தத்ரூபமாக வடிவமைத்துச் செயல்படுவதில் நிபுணர் அவர். பிற்காலத்தில் நான் உலகப் புகழ் பெறுவதற்குக் காரணமாக இருந்த வழக்கில், எனக்குப் பெரிதும் உதவியது அவர் கொடுத்த பயிற்சியே. அந்த வழக்கு...!

(தொடரும்)

கிருஷ்ணா

பிரம்ம ரிஷி



“இன்னும் இரண்டு வாரத்துக்குள் மிகப் பெரிய இழப்பு ஒன்று உங்கள் வாழ்க்கையில் ஏற்படப் போகிறது.

ஆனால் நீங்கள் அதிர்ஷ்டசாலி. பிரம்ம ரிஷியின் அருள்பெற்று விட்டதால் வரப் போகும் ஆபத்து நீங்க வழி இருக்கிறது.

இக்கடிதம் கண்டவுடன், உதவி கேட்டு வரும் ஐந்து நபர்களுக்கு முகம் கோணாமல் நீங்கள் உதவினால், ஆபத்து நீங்கி விடும்.

ஓம் சாந்தி பிராப்திரஸ்து.

இவண்
ரிஷிபுத்ரன்

மேலே உள்ளதுதான் கடிதத்தின் சாராம்சம்!

''லவ் லெட்டர் கிடைச்ச வயசுப் பொண்ணு மாதிரி ஏன் இப்படி பேந்தப் பேந்த விழிச்சுக்கிட்டு இருக்கிங்க?''

அருகில் வந்து உரசினாள் மனைவி. கடிதத்தை நீட்டினேன். படித்தாள்.

''ப்பூ! இவ்வளவுதானே'' என்று அலட்சியமாய்க் கடிதத்தை டீப்பாய் மேல் விட்டெறிந்தாள்.

''அப்ப இந்தக் கடிதத்தை உதாசீனப் படுத்திடலாமா?'' என்றேன்.

''நாங்களெல்லாம் அடுப்பங்கரை அசடுகள். எனக்கென்ன தெரியும்?'' என்றாள்.

நேற்றைய சண்டையில் நான் உதிர்த்த முத்துக்கள் பூமராங்காய் என்னிடம் திரும்பி வர, திகைத்தேன்.

அப்போது 'சாமி' என்று வந்து நின்றாள் வேலைக்காரி. கொல்லையில் பாத்திரம் தேய்த்து விட்டு வந்த ஈரம் உடையிலும், கைகாலிலும் தெரிந்தது.

எப்போதும் கட்டபொம்மு போல விறைப்பாக இருப்பவள் முகம், குழைந்து காணப்பட்டது. ''நூறு ரூபாய் வேணும்'' என்று முன் பல் தெரிய சிரித்தாள். நான் சமையலறையை நோக்கினேன்.

''அம்மாதான் உங்ககிட்டே கேட்கச் சொன்னாங்க'' என்றாள்.



"மாதக் கடைசி! அதெல்லாம்..."

நான் வார்த்தையை முடிப்பதற்குள் கடிதம் எனக்குள் வில்லன் சிரிப்பு சிரித்தது.

"உதவி கேட்டு வரும் ஐந்து நபர்!" இதோ முதல் நபர்! பெரிய இழப்பு இரு வாரங்களுக்குள்!

பயம் பிராந்தி குடித்து மனசுக்குள் ஆட்டம் போட, நூறு ரூபாயை எடுத்து நீட்டினேன்.

இன்னும் நாலு நபர்கள் யாரோ? என்ன உதவி கேட்கப் போகிறார்களோ?

"ஏங்க, அந்த அஞ்சு நபரில் மனைவியும் அடக்கமா? ரொம்ப நாளா கல் வைச்ச நெக்லஸ் கேட்டுக்கிட்டு இருக்கேனே?" என்றாள் காப்பியை நீட்டியபடி.

அவளைச் சந்தேகமாய்ப் பார்த்தேன். இவள் தான் அந்தக் கடிதம் எழுதிய ரிஷிபுத்ரனோ? இவள் தூண்டி விட்டுத்தான் வேலைக்காரி பணம் கேட்டாளோ? சேச்சே, இருக்காது! அத்தனை சாமர்த்தியசாலியாய் இவள் இருந்திருந்தால் நான் ஏன் இப்படி இருக்கிறேன்!

நான்கு நாட்கள் ஓடி விட்டன. ஒரு வழியாய் ஐந்து நபர்களும் வந்தார்கள், வென்றார்கள், சென்றார்கள்.

ஆனால் எனக்குள்தான் நமைச்சல். இதில் ஏதோ சூது இருக்கிறது என்று கற்பூரம் ஏற்றி அணைத்தது புத்தி! கண்டுபிடித்தே ஆக வேண்டும்! ஐந்து உதவிகளும் செய்து விட்டதால் பயமற்ற தெளிவான மனத்துடன் யோசித்தேன். அந்தக் கடிதத்தை எடுத்துப்

படித்தேன், மீண்டும்.

தட்டச்சு செய்யப்பட்ட வாசகங்கள். பழுப்பு ஏறிய வெள்ளைக் காகிதம். கடிதம் வந்த உறையை ஆராய்ந்தேன். தபால் அலுவலக முத்திரை தெளிவாயில்லை. என்னிடம் உதவி கேட்டு வந்த ஐந்து நபர்களைப் பற்றி மனசுக்குள் அசைபோட்டேன்.

வேலைக்காரி முதல் நபர்.

டைப்படித்து மிரட்டக்கூடியவள் அல்ல. 'வேலையை விட்டு நின்னுக்கவா?' என்றாலே போதும். அதுவே பெரிய மிரட்டல்தான். ஆக, வேலைக்காரி இதில் இல்லை.

இரண்டாவது உதவி, இரத்ததானம்! மனைவிக்கு சிசேரியன் என்று டாக்டர் திடீரென சொல்லி விட்டதால் அலுவலக சகா மனோகர் ஓடி வந்தான். எனக்கும்



''இந்தா பாரு கபாலி... நீ சிட்டி பூரா திருடுறவனா இருக்கலாம்; அதுக்காக உன்னோட ஜீப்ல 'மாநகர மாமூல்'னு எழுதி வச்சருக்கறது ரொம்ப தப்பு!''

– அம்பை தேவா

அவன் மனைவிக்கும் ரத்தம் ஒரே பிரிவு! எனவே, மனோகர் கேட்ட உதவியில் மிரட்டலோ, திட்டமோ இருக்க வாய்ப்பில்லை.

மூன்றாவது உதவி கேட்டது பக்கத்து வீட்டு பரமசிவம். அவரது துபாய் மாப்பிள்ளை ஊர் சுற்ற ஒரே ஒரு நாள் என் ஸ்கூட்டரை இரவல் கேட்டார். மாதக் கடைசிகளில் கைமாற்று கொடுத்து என்னை இரட்சிக்கும் பரமன் அவர். அவர் எனது ஸ்கூட்டரை ஓசி கேட்டால், நான் மறுக்கவே முடியாது. இதற்குப் போய் எனக்கு வேலை மெனக்கெட்டு கடிதம் எழுதி, பயமுறுத்தும் அவசியமில்லை.

நான்காவது அனாதைக் குழந்தைகள் காப்பகத்திலிருந்து– ஒரு நாள் செலவாக ஐந்நூறு ரூபாய் ஆகிறதாம். அதை நான் ஏற்றுக் கொண்டால் புண்ணியம் என்றார். எங்கள் திருமண நாளன்று ஏழைக்குழந்தைகளுக்குச் சோறு போட்ட புண்ணியம் என்றார். செண்டிமெண்டல் டச். ஐந்நூறு ரூபாயா என்று யோசனையாயிருந்தது. மனைவியும், அந்தக் கடிதமும் ஊக்குவிக்க ஒப்புக் கொண்டேன். இதில் ஏதும் சூது இருக்குமா? வாய்ப்பில்லை என்று தோன்றியது.

ஐந்தாவது உதவி மச்சினனுக்கு.

''அத்திம்பேர், பிசினஸில் திடீர் முடை. உங்க உதவி தேவை. அக்காவோட சங்கிலியையும், வளையலையும் கொடுத்தால் நல்லது'' என்றான்.

நகைகளை அடகு வைத்துப் பணம் புரட்டுவான். புரட்டுகளில் கில்லாடி. அவன் இந்த மாதிரி கடிதம் எழுதுவதில் கில்லாடிதான்! ஜகஜ்ஜால எம்டன்தான். ஆனால், இது போல பலமுறை நகைகளை வாங்கிச் சென்று, அடுத்த மாதமே திருப்பிக் கொடுத்திருக்கிறானே! அங்குதான் இடித்தது!

மச்சினனின் பைக் சத்தம் கேட்டதுமே என் மனைவி நகைகளுடன் தயாராய் நிற்பாள்.

''எங்க அப்பா போட்டது. அவசரத்துக்கு என் தம்பி கேட்கறான். இதிலே நீங்க யாரு தடுக்க'' என்று நிச்சயம் கேட்கக்கூடியவள், அதனாலேயே, நான் வாய் திறப்பதில்லை இதில்.

ஆக, செய்த ஐந்து உதவிகளுமே உட்பொருள் கொண்டவையல்ல. அப்படியானால், அந்த பிரம்மரிஷியும், ரிஷி புத்ரனும் நிஜமா? பகுத்தறிவு முணுமுணுக்க, அடக்க வழி தெரியாது விழித்தேன்.

எங்கள் திருமண நாள் அடுத்த பத்து நாளிலேயே வர, அனாதை இல்லத்திற்கு விருந்தினராக அழைக்கப்பட்டோம்.

அந்தக் குழந்தைகளைக் கண்டு நெஞ்சு உருகியது. ஐந்நூறு என்ன, ஆயிரம் கூடக் கொடுக்கலாம் என்று மனசு இளகியது.

சிறிய கட்டடம்தான். மொத்தம் முப்பது குழந்தைகள். அவர்கள் உணவு, உடை, இருப்பிடம் எல்லாச் செலவும் அதை நடத்தும் அன்பருடையது.

''உங்களை மாதிரி நல்ல உள்ளம் கொண்டவங்க உதவறதுனாலேதான் சார் இதை நடத்த முடியுது'' என்றார் பணிவாய்.

அந்த இல்லத்தின் செயல்பாடுகள் பற்றிய ஃபைலைக் காண்பித்தார். அதை சுவாரஸ்யமாய்ப் புரட்டும் போதுதான், என் மூளையில் ஒரு மின்னல். பழுப்பேறிய வெள்ளைக் காகிதங்கள், தட்டச்சு வார்த்தைகள்

ஃபைலுக்குள்ளே. அதே, அதே!

அவரை நிமிர்ந்து பார்த்தேன்.

"ரிஷிபுத்ரர் யாரு இங்கே?" என்றேன்.

"ரிஷிபுத்ரரா? யாருமில்லையே அப்படி? ஏன்?"

சலனமேயில்லாமல் கேட்ட அவர் ஒன்று அப்பாவியாயிருக்க வேண்டும் அல்லது பெரிய நடிகனாயிருக்க வேண்டும். முகத்தில் கொஞ்சம் கூட மாறுதல் இல்லையே! அப்பாவிதானோ?

கேள்வியை மாற்றிக் கேட்டேன்.

"இதோ, டைப்படிச்சிருக்கே, இதெல்லாம் நீங்க பண்றதா இல்லை, வேலைக்கு ஆள் யாரும் இருக்காங்களா?"

"அதெல்லாம் இல்லை சார். உங்களை மாதிரி நல்லவர் ஒருவர் வாரம் ஒருமுறை வந்து டைப் செய்து கொடுப்பாரு. பேப்பரெல்லாம் கூட அவர் செலவுதான். பலரும் சேர்ந்து இழுத்தால்தானே தேர் நகரும்?" என்றார்.

"அந்த நல்லவர் யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?" என்றேன் ஆவலாய்.

பெயர் சொன்னார். வீட்டு விலாசம் கூடச் சொன்னார்.

அடப்பாவி கணேசா! என் அலுவலகத்தில் என்னோடு வேலை செய்பவன்.

"இதுலே இன்னொரு வேடிக்கை கூட இருக்கு சார்" என்றார்.

"என்ன?"

"எனக்குத் தபால் கார்டு வரும் அப்பப்ப. இதில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் போய் உதவி கேட்டால் கிடைக்க வாய்ப்புள்ளதுன்னு எழுதியிருக்கும் தபால் அட்டையிலே. ஆச்சர்யம் பாருங்க. அது மாதிரியே உதவி கிடைச்சிட்டு வருது சார்" என்றார்.

"என் வீட்டுக்கும் அப்படித்தான் வந்திங்களா?"

தலையசைத்தார். விடைபெற்று நேரே கணேசன் வீட்டுக்கு வந்தேன்.

"**வா**ப்பா! என்ன திடீர் விசிட்?" என்று வரவேற்றவனை, "வணக்கம் ரிஷிபுத்ரா" என்றேன்.

ஒரு நொடி முகம் இருண்டு போனது அவனுக்கு. ஆனால் மீண்டும் இயல்புக்குத் திரும்பினான்.

"எப்படிக் கண்டுபிடிச்சே?" என்றான் வியப்புடன்.

"அது அப்புறம்! எதுக்கு இந்தப் புரட்டு வேலை?" என்றேன் கோபமாய்.

"பொறுமை, பொறுமை" என்று கையமர்த்தினான்.

பதில் பேசாது அவனை முறைத்தேன்.

"காரணம் தானே, சொல்றேன். எனக்கு சமூகச் சேவைகளில் நாட்டமுண்டுன்னு உனக்குத் தெரியும். இந்த அனாதை இல்லத்தை நடத்த அவர் மிகவும் கஷ்டப்படறாருன்னு தெரிஞ்சது. உதவின்னு போய்க் கேட்கும் போது, காசு இருந்தும் மனசு வராம தயங்கினாங்க பல பேரு! யோசிச்சேன்! ஒரு நல்ல காரியத்துக்குப் பொய் சொன்னால் தப்பில்லேன்னு தோணுச்சு. அதான் ரிஷியும், ரிஷிபுத்ரனும் கடிதம் மூலம் வந்தாங்க. தனக்கு ஆபத்துன்னதும், மறுக்காமல் உடனே உதவற மனுஷ சைகாலஜியை பயன்படுத்திக்கிட்டேன். செயல்னு பார்த்தால் தப்புத்தான். ஆனால் பலன்னு பார்த்தால் நிறைய கிடைச்சிருக்கு" என்றான்.

நானும் யோசித்துப் பார்த்தேன். அவன் கூற்று உண்மைதான். ஐந்நூறு ரூபாய் எனக்கொன்றும் பெரிய தொகையில்லை. ஆனால் சாதாரணமாய்க் கேட்டிருந்தால் கொடுக்க மனசு வந்திருக்காது. ஆனால், இப்போது என் உதவியினால் ஏற்பட்ட அந்தக் குழந்தைகளின் மலர்ச்சியைக் கண்டு எனக்கே பெருமையாக இருக்கிறதே!

"தப்பாய் எடுத்துக்காதேப்பா" என்றான் கணேஷ்.

"தப்புதான்" என்றேன் தீர்மானமாய்.

"இப்படிப் பழுப்புக் காகிதம் மூலம் கடிதம் எழுதினது தவறுதான். இனிமேல் நல்ல தாளைத்தான் உபயோகிக்கணும், சரியா?" என்றேன் புன்னகையுடன். ●



"தலைவரோட பணத்தாசைக்கு ஒரு எல்லையே இல்லாம போச்சு..."

"எப்படி சொல்றே...?"

"பனமரத் தோப்பு விலைக்கு வருதுன்னு சொன்னதுக்கு, மாசத்துக்கு எத்தனை பெட்டி காய்க்கும்னு கேக்கறார்!"

– எஸ். தமிழ்மணி

பொன்னியின் செல்வன்

முப்பத்து ஐந்தாம் அத்தியாயம்

குரங்குப் பிடி!

வந்தியத்தேவன் கவனமாகக் காது கொடுத்துக் கேட்டான். ஒரு நிமிட நேரம் காலடிச் சத்தம் கேட்பது போலிருந்தது. சட்டென்று அது நின்றது. மறுபடியும் கேட்டது. இப்போது அந்தச் சத்தம் பின்னோக்கிச் செல்வது போல் வரவரக் குறைந்தது.

''ஐயா! மேலே போகத்தான் வேண்டுமா? திரும்பி விடுவது நல்லதல்லவா?'' என்றாள் மணிமேகலை.

''இளவரசி! முன் வைத்த காலைப் பின் வைப்பது எனக்கு வழக்கமில்லை!'' என்றான் வல்லவரையன்.

''பிடித்தால், குரங்குப் பிடி தான் என்று சொல்லுங்கள்!''

''முன்னொரு தடவை தங்கள் தோழி சந்திரமதி என்னைக் 'குரங்கு மூஞ்சி' என்று வர்ணித்தாள் அல்லவா? முகத்திற்கேற்பத்தான் பிடியும் இருக்கும்?''

இவ்விதம் சொல்லிக்கொண்டே வந்தியத்தேவன், இதுகாறும் மணிமேகலையின் பின்னால் வந்து கொண்டிருந்தவன், அவளைத் தாண்டிக் கொண்டு முன்னால் போக முயற்சித்தான். அதை மணிமேகலை தடுக்கப் பார்த்தாள்.

இருவரும் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டார்கள்.

மணிமேகலையின் கையிலிருந்த விளக்கு தடால் என்று விழுந்தது. இரண்டு மூன்று படிகள் தடதடவென்று

அமரர் கல்கி

உருண்டு சென்று அணைந்து விட்டது.

பின்னர் அந்த மேடு பள்ளமான நடைபாதையில் காரிருள் சூழ்ந்தது.

"இளவரசி! இது என்ன இப்படிச் செய்தீர்கள்?" என்றான் வல்லவரையன்.

"தாங்கள் ஏன் என்னைத் தாண்டிக் கொண்டு முன்னால் போகப் பார்த்தீர்கள்?" என்றாள் மணிமேகலை.

"அபாயம் நேரும்போது முன்னால் பெண்களை விட்டுக் கொண்டு போகும் வழக்கம் எனக்கு இல்லை!" என்றான் வந்தியத்தேவன்.

"தங்களுக்கு எது எது வழக்கம், எது எது வழக்கமில்லை என்று ஒருமிக்க எனக்குத் தெரிவித்துவிட்டால் நலமாயிருக்கும். அதற்குத் தகுந்தபடி நானும் நடந்து கொள்வேன்."

"ஆகட்டும், அம்மணி! அவகாசம் கிடைக்கும்போது சொல்கிறேன்."

"இப்போது அவகாசம் இல்லாமல் என்ன? வாருங்கள், திரும்பி நந்தவனத்துக்குப் போகலாம். அங்கே அவகாசமாக உட்கார்ந்து கொண்டு சொல்லுங்கள்."

"இருட்டில் வருவதற்குத் தங்களுக்குப் பயமாயிருந்தால் திரும்பிச் செல்லுங்கள்...!"

"தங்களைப் போன்ற வீரர் அருகில் இருக்கும்போது எனக்கு என்ன பயம்?"

"பின்னே வாருங்கள், போகலாம்! வழியில் நிற்பதில் என்ன பயன்?"

இவ்வாறு சொல்லிக் கொண்டே முன்னால் போகப் பார்த்த வந்தியத்தேவன் கால் தடுக்கி



விழப் பார்த்தான்.

மணிமேகலை அவன் விழுந்து விடாமல் தாங்கிப் பிடித்துக்கொண்டாள்.

"ஐயா! இந்த வழியில் மேடு பள்ளங்கள் அதிகம். படிகள் எங்கே, சமபாதை எங்கே என்று இருட்டில் கண்டுபிடிக்க முடியாது. நான் இந்த வழியில் எத்தனையோ தடவை போயிருக்கிறேன். படிகள், திருப்பங்கள் உள்ள இடமெல்லாம் நன்றாய்த் தெரியும். ஆகையால், தாங்கள் எவ்வளவு சூராதி சூரராக இருந்தபோதிலும், என் கையைப் பிடித்துக்கொண்டு பின்னால் வருவது நல்லது. இல்லாவிட்டால் வேட்டை மண்டபம் போய்ச் சேர மாட்டீர்கள். வழியில் கால் ஒடிந்து விழுந்து கிடப்பீர்கள்!" என்றாள் மணிமேகலை.

"இளவரசி! தங்கள் கட்டளைப் படியே நடந்து கொள்கிறேன், வந்தனம்!" என்றான் வந்தியத்தேவன்.

இருட்டில் மணிமேகலை வல்லவரையனுடைய கரத்தைப் பற்றிக்கொண்டாள். வந்தியத்தேவனுடைய கரம் ஜில்லிட்டிருந்ததைத் தெரிந்துகொண்டாள். "இவர் பகைவர்களுக்கு அஞ்சாதவர்; சதிகாரர்களுக்கும் பயப்படாதவர்; இந்தப் பேதைப் பெண்ணின் கையைப் பிடிப்பதற்கு இவ்விதம் ஏன் பயப்படுகிறார்?" என்று அவள் உள்ளம் எண்ணமிட்டது.

சிறிது தூரம் இருவரும் மௌனமாகச் சென்றார்கள். வந்தியத்தேவன் அடிக்கடி தடுமாறி விழப் பார்த்தான். ஒவ்வொரு தடவையும் அவன் விழுந்து



விடாமலிருக்கும் பொருட்டு மணிமேகலை அவனுடைய கையை இறுக்கிப் பிடித்துக் கொள்ள வேண்டி நேர்ந்தது.

"நரகத்துக்குப் போகும் வழி இப்படித்தான் இருள் அடர்ந்திருக்கும்!" என்று சொன்னான் வந்தியத்தேவன்.

"ஓகோ! தாங்கள் நரகத்துக்குப் போய்விட்டு வந்திருக்கிறீர்களா?" என்று மணிமேகலை கேட்டாள்.

"நான் நரகத்துக்கும் போனதில்லை; சொர்க்கத்துக்கும் போனதில்லை. பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்!"

"அவர்களுக்கு அவர்களுடைய பெரியோர்கள் சொல்லியிருப்பார்கள்!"

சில காலத்துக்கு முன்பு வரையில் நாலு பேருக்கு முன்னால் வருவதற்குக்கூட கூச்சப்பட்டுக் கொண்டிருந்த இந்தப் பெண், இவ்வளவு வாசாலகமுள்ளவள் ஆனது எப்படி என்று வந்தியத்தேவன் சிந்தித்துப் பார்த்தான்.

"நரகத்துக்குப் போகும் வழிதான் இருட்டாயிருக்கும்; சொர்க்கத்துக்குப் போகும் வழி எப்படி இருக்குமாம்?" என்றாள் மணிமேகலை.

"ஒரே ஜோதி மயமாயிருக்குமாம்; கோடி சூரியப் பிரகாசமாயிருக்குமாம்!"

"அப்படியானால் நரகத்துக்குப் போகும் வழிதான் எனக்குப் பிடிக்கும்! ஒரு சூரியனே கண்ணைக் கூசப் பண்ணுகிறது! கோடி சூரியனுடைய வெளிச்சம் கண்ணைக் குருடாக்கி விடுமே!" என்றாள் மணிமேகலை.

"நரகத்துக்குப் போகும் வழியாகப் போனால் முடிவில் நரகத்துக்குத்தானே போய்ச் சேரும்படியிருக்கும்?" என்றான் வல்லவரையன்.

"தங்களைப் போன்ற வீர புருஷரைத் தொடர்ந்து போனால், நரகப் பாதை வழியாகச் சொர்க்கத்துக்குப் போனாலும் போகலாம்!" என்றாள் மணிமேகலை.

"தங்களைப் போன்ற இளவரசியின் கையைப் பிடித்துக்கொண்டு போனால், நரகமே சொர்க்கம் ஆகிவிடும்!" என்றான் வந்தியத்தேவன்.

உடனே உதட்டைக் கடித்துக் கொண்டு "இப்படிச் சொல்லி விட்டோமே? இந்தப் பெண் ஏதாவது தவறாக எண்ணிக் கொள்ளப் போகிறாளோ?" என்று கவலை கொண்டான்.

"தங்களுடைய கரம் ஜில்லிட்டிருப்பதைப் பார்த்தால், தாங்கள் சொர்க்கத்துக்குப் போகிறவராக எண்ண இடமில்லை. கொலைக் களத்துக்குப் போகிறவரைப் போல் தங்கள் உடம்பு நடுங்குகிறது!" என்றாள் மணிமேகலை.

"இளவரசி! இந்தப் பிராயணத்தின் முடிவில் எனக்குக் கொலைக் களந்தான் காத்திருக்கிறதோ, என்னமோ?"

"தாங்கள்தானே முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்று பிடிவாதம் பிடிக்கிறீர்கள்? வேட்டை மண்டபத்தில் எத்தனை கொலைகாரர்கள் இருக்கிறார்களோ, என்னமோ?"

"அவர்கள் எத்தனை பேர் வேண்டுமானாலும் இருக்கட்டும்; அவர்களுக்கு நான் பயப்படவில்லை. தாங்களும் நானும் இப்படிக் கைகோத்துக் கொண்டு இருட்டில் போவதைக் கந்தமாறன் பார்த்துவிட்டால்... அதைப் பற்றித்தான் யோசனை செய்கிறேன்."

"ஐயா! நான் உயிரோடிருக்கும் வரையில் என் தமையனால் தங்களுக்கு ஒரு கெடுதியும் நேராது. நான் காணும் கனவில் பாதி இப்போது உண்மையாக நடந்திருக்கிறது; இன்னும் பாதியும் ஒருவேளை உண்மையானாலும் ஆகலாம். யார் கண்டது?" என்றாள் மணிமேகலை.

இந்தச் சமயத்தில் ஏதோ ஒரு கதவு பூட்டப்படும் சத்தத்தைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டுப் போய் நின்றார்கள்.

"வேட்டை மண்டபத்துக்குச் சமீபத்தில் வந்து விட்டோம்!" என்று மணிமேகலை மெல்லிய குரலில் கூறினாள்.

இதற்குள் சற்றுத் தூரத்தில் சிறிது வெளிச்சம் தெரிந்தது. வரவர அவ் வெளிச்சம் அதிகமானதுடன் அவர்களை நெருங்கி வந்ததாகத் தோன்றியது. மணிமேகலை வந்தியத்தேவனுடைய கரத்தை விட்டு விட்டுச் சற்று விலகி நின்றாள்.

அடுத்த நிமிஷத்தில், ஒரு கையில் தூக்கிப் பிடித்த விளக்குடனும் இன்னொரு கையில் முறுக்கித் திருகிய வேலைப்பாடு அமைந்த கூரிய கத்தியுடனும் இடும்பன்காரி அவர்களுக்கு எதிரே தோன்றினான்.

இவர்களைப் பார்த்ததும் அவன் அதிசயத்தினால் திகைத்துப் போனவனைப் போல் நின்றான். ஆனால் அவன் அவ்வாறு வேஷம் போடுகிறான் என்பது இருவருக்கும் தெரிந்து போயிற்று.

"அம்மா! ஐயா! இது என்ன? இந்த இருட்டில் இவ்விதம் தனியாகக் கிளம்பினீர்கள்? அடிமையிடம் சொன்னால் விளக்குப் பிடித்துக்கொண்டு வரமாட்டேனா? எங்கே புறப்பட்டீர்கள்?'' என்று கேட்டான்.

இடும்பன்காரி! மலையமான் படை எடுத்து வருவதாகச் செய்தி வந்திருக்கிறது அல்லவா? ஆகையால் மதில் வாசல்கள் சுரங்க வாசல்கள் எல்லாம் பத்திரமாய்ப் பூட்டியிருக்கிறதா என்று பார்ப்பதற்காக வல்லத்து இளவரசரையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டேன்!'' என்றாள் மணிமேகலை.

''அதிசயமாயிருக்கிறது, தாயே! நானும் அதைத்தான் பார்த்துவிட்டு வருகிறேன்!'' என்றான் இடும்பன்காரி.

''அப்படித்தான் நினைத்தேன். நாங்கள் வரும்போது கொண்டு வந்த விளக்கு வழியில் விழுந்து அணைந்து விட்டது. இங்கே கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தது. நீயாய்த்தான் இருக்க வேண்டும் என்று எண்ணி மேலே வந்தோம்.''

''சின்ன எஜமான் பார்க்கச் சொன்னார்கள்; அதனால் போய்ப் பார்த்து விட்டு வந்தேன். சுரங்கப் பாதையெல்லாம் சரிவர அடைத்துத் தாளிட்டிருக்கிறது. திரும்பிப் போகலாமா, தாயே!''

''உன் கையில் உள்ள விளக்கைக் கொடுத்து விட்டு நீ போ! இந்த இளவரசருக்கு வேட்டை மண்டபத்திலிருந்து ஒரு வேலாயுதம் பொறுக்கி எடுத்துக் கொள்ள வேண்டுமாம். இவருடைய வேல் கொள்ளிடத்தில் போய் விட்டதாம். ஒருவேளை யுத்தம் வந்தாலும் வரலாம் அல்லவா...?''

''ஆம், அம்மணி! யுத்தம் வந்தாலும் வரலாம். ஆகையால் வேற்று மனிதர்களை வேட்டை மண்டபத்துக்குள் அழைத்துப் போகாமலிருப்பதே நல்லது. தங்களுக்குத் தெரியாததற்கு நான் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.''

''அது உண்மைதான், காரி! ஆனால் இவர் வேற்று மனிதர் அல்ல, சின்ன எஜமானுக்கு உயிருக்கு உயிரான சிநேகிதர் ஆயிற்றே! இன்னும் ஏதேனும் புதிய உறவு ஏற்பட்டாலும் ஏற்படும். நீ விளக்கைக் கொடுத்து விட்டு போ!'' என்றாள் மணிமேகலை.

இடும்பன்காரி வேண்டா வெறுப்பாக விளக்கை இளவரசியிடம் கொடுத்து விட்டுப் போனான்.

வந்தியத்தேவனும் மணிமேகலையும் மேலே நடந்து வேட்டை மண்டபத்தை அணுகிச் சென்றார்கள்.

"இது என்ன? அரண்மனைக்குள்ளே ஆந்தை எப்படி வந்தது?'' என்று மணிமேகலை வியப்புடன் கூறினாள்.

''ஒருவேளை வேட்டை மண்டபத்துக்குள் இருக்கும் செத்த ஆந்தைக்கு உயிர் வந்துவிட்டதோ, என்னமோ? முன்னொரு சமயம் இளவரசியைப் பார்த்ததும் செத்த குரங்கு உயிர் பெறவில்லையா?'' என்றான் வந்தியத்தேவன்.

வேட்டை மண்டபத்தின் கதவு வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருந்தது.

மணிமேகலை தான் கொண்டு வந்திருந்த சாவியைப் போட்டுப் பூட்டைத் திறந்தாள். பிறகு, கதவையும் இலேசாகத் திறந்தாள்.

இருவரும் உள்ளே பிரவேசித்தார்கள்.

முதலில் சிறிது நேரம் அவர்களைச் சுற்றிலும் செத்த யானைகள், கரடிகள், புலிகள், மான்கள், முதலைகள், பருந்துகள், ஆந்தைகள், - இவற்றின் பயங்கரமான உடல்கள்தான் தெரிந்தன.

விளக்கைத் தூக்கிப் பிடித்து நன்றாக உற்றுப் பார்த்தபோது, அந்தப் பிராணிகளுக்குப் பின்னால் பாதி மறைந்தும் பாதி மறையாமலும் சில மனித உருவங்கள் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

அப்போது அவர்கள் திறந்து கொண்டு வந்த வேட்டை மண்டபத்தின் கதவு படாரென்று சாத்தப்பட்டு விட்டது.

யார் அவ்வளவு பலமாகக் கதவைச் சாத்துகிறார்கள் என்று தெரிந்து கொள்ள வந்தியத்தேவன் திரும்பிப் பார்த்தான்.

அதே கணத்தில் அவன் பின்னாலிருந்து பலமாகப் பிடித்துத் தள்ளப்பட்டான். முன்னொரு சமயம் அவன் எந்த வாலில்லாக் குரங்கின் பின்னால் ஒளிந்துகொண்டிருந்தானோ, அந்தக் குரங்கின் முன்புறத்தில் போய் மோதிக்கொண்டான்.

இரண்டு கரங்கள் அவனைப் பலமாகப் பற்றிக்கொண்டன. "குரங்குப் பிடி" எவ்வளவு வலிவுள்ளது என்பதை அப்போதுதான் அவன் நன்றாக, அனுபவ பூர்வமாகத் தெரிந்துகொண்டான்.

அவனுடைய அரையிலிருந்த கத்தியை எடுக்கச் செய்த முயற்சி சிறிதும் பலிக்கவில்லை. அப்பால் இப்பால் அவனால் திரும்பவே முடியவில்லை.

குரங்கின் கைகள், - அல்லது குரங்கின் கைகளோடு சேர்ந்து வந்த இரண்டு மனிதக் கைகள், - அவனை அவ்வளவு பலமாகப் பிடித்துக் கொண்டன.

இன்னும் இரண்டு கைகள் அவனுடைய அரையிலேயிருந்த கத்தியை அவிழ்த்து எடுத்துக்கொண்டன.

"ஐயோ!" என்று பயங்கரமாக அலறிக்கொண்டு அவனருகில் ஓடி வந்த மணிமேகலையின் மார்பை நோக்கி அந்தக் கத்தி நீட்டப்பட்டது.

"சத்தம் போட வேண்டாம். சிறிது நேரம் சும்மா இருந்தால், - நாங்கள் சொல்கிறபடி கேட்டால், - உங்கள் இருவருடைய உயிருக்கும் அபாயம் இல்லை. சத்தம் போட்டீர்களானால் இருவரும் உயிர் இழக்க நேரிடும். முதலில், இந்த அதிகப்பிரசங்கி இளைஞன் இறந்து விழுவான்!" என்றது ஒரு குரல்.

அது ரவிதாஸனுடைய குரல் என்று வந்தியத்தேவன் தெரிந்துகொண்டான்.

"இளவரசி! சற்றுச் சும்மா இருங்கள்! இவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள், என்னதான் சொல்லுகிறார்கள் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்!" என்று சொன்னான் வந்தியத்தேவன்.

முப்பத்து ஆறாம் அத்தியாயம்

பாண்டிமா தேவி!

வந்தியத்தேவனை வாலில்லாக் குரங்கோடு சேர்த்துக் கட்டியவர்கள், அவனுக்கு அருகில் சுவரில் மாட்டியிருந்த கலைமானின் கொம்புகளோடு மணிமேகலையைச் சேர்த்துக் கட்டினார்கள்.

"மந்திரவாதி! நான்தான் உங்கள் எதிரி! கடம்பூர் இளவரசியை ஏன் கட்டுகிறீர்கள்? விட்டு விடுங்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

ரவிதாஸன் அவனைப் பார்த்து, "பொறு, தம்பி, பொறு! பலதடவை நீ எங்கள் காரியத்தில் குறுக்கிட்டிருக்கிறாய்! ஒவ்வொரு தடவையும் உன்னை நாங்கள் உயிரோடு விட்டு வந்தோம். ஆனாலும் நீ

எங்களைப் பின் தொடர்ந்து வருவதை நிறுத்தவில்லை!'' என்றான்.

வந்தியத்தேவன் சிரித்தான்.

''என்னப்பா, சிரிக்கிறாய்? வாலில்லாக் குரங்கின் ஆலிங்கனம் அவ்வளவு குதூகலமாயிருக்கிறதா!'' என்று கேட்டான் ரவிதாஸன்.

''இல்லை! நீ சொன்னதை எண்ணிப் பார்த்துத்தான் சிரித்தேன்!'' என்றான் வல்லவரையன்.

''நான் சொன்னவற்றில் எதைக் குறித்து இப்படிச் சிரிக்கிறாய்?''

''உங்களை நான் தொடர்ந்து வருவதாகச் சொன்னாயே? நீங்கள் என்னை விடாமல் தொடர்ந்து வருவதாகவும் சொல்லலாம் அல்லவா? என் காரியத்தில் நீங்கள் குறுக்கிடுவதாகவும் சொல்லலாம் அல்லவா? இப்போது பார்! நான் கடம்பூர்



இராஜகுமாரியை அழைத்துக்கொண்டு ஒரு முக்கியமான காரிய நிமித்தமாகப் புறப்பட்டேன். நீ குறுக்கிட்டு என்னை இந்தக் குரங்கோடு சேர்த்துக் கட்டிப் போட்டிருக்கிறாய்!''

பிறகு எங்களைக் காணவே மாட்டாய்!''

"அப்படியானால், நான் உயிரோடிருக்கப் பிரயத்தனப்பட வேண்டியதுதான்! மந்திரவாதி! நான் உயிரோடு தப்புவதற்கு நீயே ஒரு தந்திரம் சொல்லிக்கொடு!''




"ஓகோ! அப்படியா சமாசாரம்? உன் காரியத்தில் நாங்கள் குறுக்கிடுவதாகவே வைத்துக் கொள். ஆனால் அவ்விதம் நேர்வது இதுதான் கடைசி முறை. இன்று நீ உயிரோடு பிழைத்து விட்டாயானால்,

என்றான் வந்தியத்தேவன்.

"பேஷாகச் சொல்லித் தருகிறேன். இந்த மண்டபத்திலும் இதற்கு அடுத்த அறையிலும் என்ன நடந்தாலும் நீ அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இரு! பதற்றமாக

ஒன்றும் செய்யாதே! உன் உயிருக்கு ஆபத்து நேராது."

"ஏன் என் பேரில் உங்களுக்கு அவ்வளவு அபிமானம்? ஏன் என்னைக் கொல்லாமல் விடுகிறீர்கள்?"



"அப்படிக் கேள்! அது பெரிய முட்டாள்தனந்தான்! ஆனால் எங்கள் தேவியின் கட்டளை!"

"யார் உங்கள் தேவி?"

"இன்னுமா உனக்குத் தெரியவில்லை? பாண்டி மாதேவிதான்! பெரிய பழுவேட்டரையரின் வீட்டில் வந்திருக்கும் வீர பாண்டிய சக்கரவர்த்தியின் வீரபத்தினி நந்தினி தேவிதான்!"

"நல்ல வீரபத்தினி...!"

"சீ! துஷ்டச் சிறுவனே! எங்கள் தேவியைப் பற்றி ஏதேனும் சொன்னால் உயிரை இழப்பாய்! ஜாக்கிரதை!"

"நீங்கள் அல்லவா பழுவூர் ராணியின் மீது அவதூறு சொல்கிறீர்கள்? இன்னொரு

புருஷன் வீட்டில் வந்திருப்பவளை வீர பாண்டியனுடைய தேவி என்று சொல்கிறீர்களே?''

''அதனால் என்ன? இராமனுடைய பத்தினி சீதை, இராவணனுடைய வீட்டில் சில காலம் இருக்கவில்லையா?''

''இராமர் போய்ச் சீதாதேவியை அழைத்துக்கொண்டு வந்து விட்டாரே?''

''நாங்களும் எங்கள் பாண்டிமா தேவியை அழைத்துக்கொண்டு போகத் தான் வந்திருக்கிறோம். அவர் பழுவூர் அரண்மனையில் தாமாகவே எந்தக் காரியத்துக்காகச் சிறைப்பட்டிருந்தாரோ, அது இன்றைக்கு முடியப் போகிறது...''

''ஆகா! அது என்ன காரியம்?''

''சற்று நேரம் பொறுமையாயிரு! நீயே தெரிந்து கொள்வாய்! உன் துஷ்டத்தனத் தைக் காட்டினாயானால், நீ மட்டுமல்ல,- இந்தப் பெண்ணும் துர்க்கதிக்கு உள்ளாக நேரிட்டு விடும்!''

இவ்விதம் கூறிவிட்டு ரவிதாஸன் எதிர்ப்பக்கத்துச் சுவரண்டை போவதற்கு யத்தனித்தான்.

''மந்திரவாதி! இன்னும் ஒரே ஒரு விஷயம் சொல்லி விட்டுப் போ!'' என்றான் வந்தியத்தேவன்.

ரவிதாஸன் திரும்பிப் பார்த்து, ''தம்பி! என்னை 'மந்திரவாதி' என்று இனி அழை யாதே...!'' என்றான்.

''பின்னே, தங்களை என்னவென்று அழைக்க வேண்டும்?''

''ஐயா! தாங்கள் எந்த மகா ராஜ்யத்தின் முதன்மந்திரியோ?''

''தெரியவில்லையா, உனக்கு? பாண்டிய மகாசாம்ராஜ்யத்தின் முதன்மந்திரி! பள்ளிப்படைக்கு அருகில் நடந்த பட்டா பிஷேக வைபவத்தை நீ பார்த்துக் கொண் டிருந்தாயே?''

''பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் அது ஏதோ என் மனப்பிரமை என்று நினைத்தேன்...''

''அதனாலேதான் அதைப் பற்றி யாரிடமும் நீ சொல்லவில்லையாக்கும்!''

''இரண்டொருவரிடம் சொன்னேன். அவர்கள் என்னைப் பைத்தியக்காரன் என்றார்கள், நான் ஏதோ துர் சொப்பனம் கண்டிருக்க வேண்டும் என்றும் சொன் னார்கள்...''

''ஆகா! அவர்கள் அப்படியே நினைத் துக் கொண்டிருக்கட்டும். நீ வெளியில் சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள் என்று நம்பித்தான் உன்னை நாங்களும் உயிரோடு விட்டோம்...!''

''மந்திரவாதி! நீங்கள் என்னை உயி ரோடு விட்டதற்கு அது ஒன்று மட் டும்தான் காரணமா?''

''வேறு என்ன?''

''உங்கள் ராணி எனக்காகச் சிபாரிசு செய்யவில்லையா?''

''அதனால் என்ன?''

''இப்போதும் அவருடைய சிபாரிசு எனக்குக் கிடைக்கும்.''

''கிடைக்கும் வரையில் பொறுத்திரு!''

''மந்திரவாதி! உங்கள் ராணி என்னை அவசரமாக அழைத்து வரும்படி இந்தக் கடம்பூர் இளவரசியை அனுப்பி வைத் தார். அதனாலேதான் நாங்கள் இருவரும் ஒன்றாக வந்தோம்...''

''அப்பனே! இராணியின் அறைக்கு வருவதற்கு வேறு வழி இருக்கிறதே? இந்த வழியில் வருவானேன்?''

''அதைப் பற்றி உன்னிடம் நான் சொல்ல வேண்டியதில்லை. ராணி கேட் டால் சொல்லிக் கொள்கிறேன்...''

''ராணி வந்து கேட்கும் வரையில் பொறுத்துக் கொண்டிரு!''

''மந்திரவாதி! என்னையும் சம்புவரை யர் குமாரியையும் உடனே கட்டவிழ்த்து விடச் சொல்! இல்லாவிட்டால்...?''

''என்ன செய்வாய்?''

''இந்த மண்டபம் அதிரும்படி கூச்சல் போடுவேன்!''

''நீ அப்படிக் கூச்சல் போட்ட உடனே உன் மேல் மூன்று வேல்கள் ஒரே சமயத் தில் பாயும், ஜாக்கிரதை!''

வந்தியத்தேவன் ஒருமுறை சுற்று முற்றும் கூர்ந்து பார்த்தான்.

ஆம்; மூன்று சதிகாரர்கள் கையில் வேலுடன் தயாராகக் காத்திருந் தார்கள். ''தம்பி நீ ரொம்பக் கெட்டிக் காரப் பிள்ளை. உன்னை எங்களுடன் சேர்த்துக் கொள்ளலாம் என்ற ஆசைகூட

எனக்கு ஒரு சமயம் இருந்தது. ஆனால் அந்தப் பழையாறை மோகினியின் பாசவலையில் நீ விழுந்து விட்டாய். அது போனால் போகட்டும். இப்போது புத்திசாலித்தனமாகப் பிழை! சத்தம் மட்டும் போட்டால் நீ சாவது நிச்சயம்!"

இவ்வாறு ரவிதாஸன் எச்சரித்துவிட்டு எதிர்ப்பக்கத்துச் சுவரில் பொருந்தியிருந்த யானை முகத்தை நோக்கிப் போனான். சிறிது நேரம் சுவரண்டை காது கொடுத்துக் கேட்டான். பின்னர், அந்த யானையின் நீண்ட தந்தங்களைப் பிடித்துத் திருகினான்.

அங்கே ஒரு சிறிய துவாரம் ஏற்பட்டது. உள் அறையில் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருந்த தீபங்களின் ஒளி வட்ட வடிவமான பூரண சந்திரனுடைய வெள்ளிக் கிரணங்களைப் போல் வேட்டை மண்டபத்துக்குள்ளும் வந்து சிறிது பிரகாசப் படுத்தியது.

வந்தியத்தேவன் பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தான். இளவரசி மணிமேகலை தன் இடுப்பில் செருகியிருந்த சிறு கத்தியை எடுத்து அவனைக் கட்டியிருந்த கட்டுகளை அறுத்து விட்டதைத் தெரிந்துகொண்டான்.

மணிமேகலை இடும்பன்காரியிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்த சிறிய விளக்கு, வேட்டை மண்டபத்தின் ஒரு மூலையில் 'முணுக்கு' 'முணுக்கு' என்று எரிந்துகொண்டிருந்தது. அதன் வெளிச்சம் மணிமேகலையின் மீது படவே இல்லை. மேலும் சதிகாரர்கள் வந்தியத்தேவனையே கவனித்துக் கொண்டிருந்தபடியால், கடம்பூர் இளவரசி மணிமேகலையைக் கவனிக்கவும் இல்லை.

மணிமேகலை கட்டை அவிழ்த்து விடுதலை அடைந்துவிட்டதை வந்தியத்தேவன் கவனித்துக்கொண்டான்.

உடனே வாயைக் குவித்துக்கொண்டு ஆந்தை கத்துவது போல் கத்தினான்.

முதலில் சதிகாரர்கள் மூவரும் சிறிது பிரமித்து நின்றார்கள். திறந்த துவாரத்தின் வழியாக உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த ரவிதாஸனும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"ஆகா! உன் வேலையா?" என்று சொல்லிக்கொண்ட வந்தியத்தேவனை நோக்கி விரைந்து வந்தான்.

அவன் யானைத் தந்தங்களிலிருந்து கையை எடுத்ததும், சுவரிலிருந்து துவாரம் மறைந்தது. மறுபடியும் வேட்டை மண்டபத்தில் இருள் சூழ்ந்தது.

சதிகாரர்கள் மூவரும் கையில் வேல்களுடன் வந்தியத்தேவனை நோக்கி விரைந்து ஓடி வந்தார்கள்.

அவர்களில் ஒருவனை முறுக்கிய நீண்ட கொம்புகளை உடைய மான் தாக்கியது. இன்னொருவன் மீது பிரம்மாண்டமான கரடி ஒன்று விழுந்து அவனைக் கீழே தள்ளியது. மற்றொருவன் மீது திறந்த வாயையும் பயங்கரமான பற்களையும் உடைய முதலை பாய்ந்தது. ரவிதாஸன் தலை மீது ஒரு பெரிய ராட்சத வௌவால் தடாலென்று விழுந்தது.

இவ்விதம் திடீரென்று ஏற்பட்ட தாக்குதல்களினால் அவர்கள் ஒரு நிமிடம் செயலற்று நின்றபோது, மணிமேகலை வந்தியத்தேவனை அணுகி அவனுடைய கட்டுக்களை அறுத்துவிட்டாள்.

வந்தியத்தேவன் இதுகாறும் தன்னைப் பிடித்துக் கொண்டிருந்த வாலில்லாக் குரங்கைத் தூக்கி அந்தச் சதிகாரர்கள் மேல் வீசி எறிந்தான்.

நால்வரும் தங்கள் மீது விழுந்த செத்த விலங்குகளின் உடல்களைத் தள்ளிவிட்டு மெதுவாகச் சமாளித்து எழுந்தார்கள். இதற்குள் வந்தியத்தேவன் கையில் வேல் ஒன்றை எடுத்துக் கொண்டிருந்தான். தாக்க வருகிறவர்களைத் திருப்பித் தாக்குவதற்குத் தயாராயிருந்தான்.

அச்சமயம் நந்தினி தேவியின் படுக்கை அறைக்கதவு நன்றாகத் திறந்தது.

வேட்டை மண்டபத்துக்குள் வெளிச்சம் புகுந்து பிரகாசப்படுத்தியது.

மறுகணம் நந்தினி தேவியும் வேட்டை மண்டபத்துக்குள்ளே பிரவேசித்தாள்.

"மந்திரவாதி! இது என்ன மூடத்தனம்? இங்கே என்ன தடபுடல் செய்கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே மேலே வந்தாள்.

(தொடரும்)



உயிரைக் குடிக்கும் முத்தம்...

நுண்ணுயிர்களிலிருந்து ஜீவராசிகள்... ஜீவராசிகளிலிருந்து விலங்குகள்... விலங்குகளில் குரங்குகள்... குரங்கிலிருந்து மனிதன்.... மனிதர்களிலிருந்து....? இதற்கு விடையாக வருகிறவர்கள்தான் 'எக்ஸ்-மென்'. பரிணாம வளர்ச்சிப்படி, ஒவ்வொரு ஸ்டேஜிலும் அறிவும் ஆற்றலும் அதிகமாகிக் கொண்டுதான் வந்திருக்கிறது. அப்படியானால் மனிதனுக்கு அடுத்த வளர்ச்சியும் அதேபோல் சூப்பர் சக்தியாகத்தான் இருக்க வேண்டும். 'எக்ஸ்-மென்' பிரிவினருக்கு அப்படி அசாத்திய சக்திகள் இருக்கிறது. பார்ப்பதற்கு சாதாரண மனிதர்களைப் போலத் தோற்றமளிக்கும் இவர்களை அடையாளம் கண்டுபிடிப்பது சற்று சிரமம்தான். கண்களில் லேசர் சக்தி, கை, கால்களில் எலும்புகளோடு மெட்டல் உபகரணங்கள், மலையைப் பெயர்க்கும் பலம்... இப்படி இவர்களுக்குள் அமிழ்ந்து கிடக்கும் சக்திகள் ஏராளம். இவர்களில் ஒரு பிரிவினர், தங்களுக்குள் ஒரு கூடம் அமைத்துக் கொண்டு, சாதாரண மனிதர்களைக் கொத்தடிமைகளாக்கி அடக்கியாளத் திட்டம் போடுகின்றனர். அவர்களை 'ஒரு தட்டுத் தட்டி' மனிதர்களுடன் இணக்கமாகப் போகும்படி வலியுறுத்துகிறது X-மென் பிரிவின் மற்றொரு பிரிவு. இதுதான் சமீபத்தில் வெளியாகியிருக்கும் X-மென் படத்தின் பின்னணி.

கதையை விடுங்கள்... அதை சாக்காக வைத்து கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் ஜாலங்களை படம் முழுவதும் அள்ளித் தெளித்திருக்கும் வித்தைதான் பிரமிக்க வைக்கிறது. கொஞ்சமே கொஞ்சம் 'மேட்ரிக்ஸ்' திரைப்படத்தை நினைவுபடுத்தினாலும், படம் முழுவதும் இயல்பை விட்டு விலகி இயந்திரத் தனமாய் விரைந்தாலும், காட்சி முடிந்து வெளியே வரும்போது ஒரு பிரமிப்பு கலந்த பெருமூச்சை 'X-மென்' ஏற்படுத்துவதென்னவோ சர்வ நிஜம்!

அமெரிக்காவின், புகழ் பெற்ற மார்வெல் காமிக்ஸ் 1963ம் வருடம் முதன் முதலில் அறிமுகப்படுத்திய X-மென் வகைக் கதைகள் அதன் பின்னர் சிலமுறை சின்னத்திரையில் ஒளிபரப்பப்பட்டது. ஆனால் இம்முறை திரைப்படமாக்குவதற்காக டைரக்டர் ப்ரையன் சிங்கர் மெனக்கெட்டிருப்பது மாதிரி இதற்கு முன் யாரும் இவ்வளவு சிரத்தை எடுக்கவில்லை.

வழக்கமாக இந்த மாதிரி 'கம்ப்யூட்டர்-வீடியோ கேம்ஸ்' திரைப்படங்களை சகட்டு மேனிக்குத் திட்டித் தீர்க்கும் ஹாலிவுட் விமர்சகர்கள் இந்தப் படத்தை 'அட... நல்லாயிருக்குப்பா' என்ற ரீதியில் பாராட்டியிருப்பதே ஆச்சர்யமான விஷயம்தான். 'ஸ்டார் ட்ரெக்' புகழ் 'பேட்ரிக் ஸ்டுவர்ட்'டின் தலைமையில் இயங்கி வரும் 'நல்ல X-மென்' குழுவினர் வில்லன்களோடு மோதும், அந்த க்ளைமேக்ஸ் காட்சியின் பின்புலமாக நியூயார்க் நகரின் சுதந்திர தேவி சிலையைத் தேர்ந்தெடுத்திருப்பது நல்ல டேஸ்ட். எப்படி பர்மிஷன் வாங்கினார்கள்?- என்று விசாரித்தபோதுதான் தெரிந்தது அது செட்+கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் இணைந்த உத்தி என்பது. அப்படிப் போடு!

பெண் கேரக்டர்களை சம அந்தஸ்தோடு உலாவவிட்டிருந்தாலும், படத்தில் ஆபாசம் என்பது அறவே கிடையாது. முதல் காட்சியில், ரூஜ் என்ற அந்த விடலைப் பெண் தனது டீன் ஏஜ் காதலனுக்குக் கொடுக்கும் முத்தம், பையனின் சக்தி முழுவதையும் அவளுக்குள் செலுத்தி விடுகிறது! பையன் 'கோமா' நிலைக்குத் தள்ளப்படுவதும், அதன் மூலம் தான் தனக்கு அப்படி ஒரு சக்தி இருப்பது அவளுக்குத் தெரிய வருவதாகச் சொல்லியிருப்பதும் 'நச்' சென்ற கேரக்டர் அறிமுகம்.

— ஜீவன்

X-MEN

நினைச்சா வேலை;



• லீமா, பார்வதி, நிர்மலா கேசவன். கில்ட் ஆஃப் சர்வீஸ் சமூக சேவகர்கள்.

குடிசைப் பகுதி தான் என்றாலும் நூறு சதவிகிதம் தூய்மையாக இருக்கிறது அந்த இல்லம். காலை பதினோரு மணிக்கு அங்கு சென்றபோது, இரண்டு பாட்டிகள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். இன்னும் இரண்டு பாட்டிகள் எதையோ பேசி சிரித்துக்கொண்டிருந்தனர். அகன்ற ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் கொட்டப்பட்டிருந்த சோப்புத் தூளை, சின்னத் தகடு கொண்டு கிளறிக் கொண்டிருந்தார் ஒரு தாத்தா. தாளகதியோடு முறத்தில் அரிசி புடைத்துக் கொண்டிருந்தார் மற்றொரு பாட்டி. இன்னொருவரோ எடை வைத்த சத்து மாவை பாலிதின் பாக்கெட்டுகளில் லாவகமாய் அடைத்து, ஒரு சின்ன மின் கருவியில் சீல் வைத்துக் கொண்டிருக்க, சமையலறைக்குள்ளிருந்து வந்த வாசனை நம்மை இழுக்க, எட்டிப் பார்த்தோம். சந்தேகமே வேண்டாம் தீவிரமான சமையல் பணியில் ஈடுபட்டிருந்தவரும் ஒரு பாட்டிதான். எல்லோரது முகத்திலும் கொஞ்சமும் இறுக்கமில்லாத இயல்பு. அவரவர் வீடுகளில் இருப்பது போன்ற அன்யோன்யம்.

இங்கே என்ன 'முதியோர் மேளா' நடக்கிறதா என்றால் இல்லை. இது பகல் நேர முதியோர் காப்பகம். சென்னை எழும்பூர் சாமி ரெட்டிபாளையத்தில் - ஹெல்ப் ஏஜ் இந்தியாவின் உதவியோடு, கில்ட் ஆஃப் சர்வீஸ் உருவாக்கியிருக்கும் பகல் நேர முதியோர் வீடு என்றுதான் சொல்ல வேண்டும். மொசைக் போடப்பட்ட வழுவழுப்பான தளம். ஆங்காங்கே மின் விசிறி. செராமிக் ஓடுகள் பதிக்கப்பட்ட கழிப்பறை என்று ஏழை முதியோர் அனுபவித்திராத வசதிகள்.

"அலுவலகத்திற்குப் போகும் பெற்றோர்கள், இரண்டு வயதுக் குழந்தைகளைக் காப்பகங்களில் விட்டு விட்டு சென்று விடுவார்கள். அலுவலகம் முடிந்து வரும்போது திரும்ப அழைத்து வந்து விடுவார்கள். குழந்தைகளுக்கு



• முருகேஷ் தாத்தா



• தாயாருடன் நாராயணி

மட்டுமல்ல. குழந்தைகளாக மாறி விடுகிற முதியோர்களுக்கும் இதை ஏன் பரீட்சித்துப் பார்த்து விடக் கூடாது என்று எண்ணினோம். எங்கள் பரிசோதனைக்குப் பெரிய வெற்றி" என்கிறார்கள், கில்ட் ஆஃப் சர்வீசின் சோஷி யல் ஒர்க்கர்களான லீமா, பார்வதி, நிர்மலா கேசவன் ஆகியோர்.

"பொருளாதார வசதியுள்ள முதியோர்களே புறக்கணிக்கப்படும்போது ஏழை முதியவர்கள் பெரிய சுமையாகவே கருதப்படுகிறார்கள். அதி லும் குடிசைப் பகுதியில் வாழும் முதியவர் களை அவர்களது பிள்ளைகள் "செத்து தொலையேன்" என்றே தினமும் திட்டு கிறார்கள். கணவன் ஆட்டோ ஓட்டுபவராகவோ, கூலி வேலை செய்பவ ராகவோ இருந்தால், அவன் வேலைக்குச் சென்றவுடன் வீட்டிலிருக்கும் மருமகள், வயதான மாமியாரை ஒரு சுமையாக நினைத்து, எங்காவது போய்விட்டு மாலை யான பிறகு வாங்க' என்று துரத்தி விடு கிறார்கள். வயதானவர்களை வைத்துக் கொண்டு, பல வேலைகளைச் சுதந்தரமாகச் செய்ய முடியாததும், ஒரே அறை கொண்ட வீட்டில் வசிப்பதும்கூட இதற்குக் காரணம். பகல் நேரத்தில் போக்கிடம் இன்றி அலையும் பல முதியவர்களை, குடிசைப் பகுதியில் பார்த்த பிறகே இந்தத் திட்டம் வெற்றி பெறும் என்று நம்பினோம்" என்கிறார்கள் இவர்கள்.

"இது போன்ற முதியோர்களுக்கு உணவு, உடை, மருத்துவம் போன்ற வசதிகளை அளிப் பதற்காக 'மீல்ஸ் ஆன் வீல்ஸ்' திட்டத்தின் மூலம், குடிசைப் பகுதிகளுக்கே சென்று அவற்றை அளித்து வந்தோம். அதன் பிறகே பகல் நேர முதியோர் பராமரிப்பை, ஒரு இல் லத்தின் நிழலில் செய்வதன் மூலம், முதி யோரின் மனநிலையில் மேம்பாட்டை கொண்டு வரலாம் என்ற முடிவுக்கு வந்தோம். நல்ல பலன் கிடைத்திருக்கிறது'' என் கிறார்கள்.

காலை பத்து மணிக்கு இங்கே வரும் ஒவ்வொரு முதியோரும் மாலை ஐந்து மணிக்கு வீட்டுக்குச் சென்று விடலாம். வீட்டிற்குச் செல்லும்போது ஒவ்வொருவருக்கும் ஆறு ரூபாய் பாக்கெட் மணியாகக் கொடுத்து அனுப் புகிறார்கள். இப்படி கொடுத்து அனுப்பும் பணத்தில் பேரக் குழந்தைகளுக்குத் தின் பண்டங்கள் வாங்கிச் செல்வதால் முதிய வர்களுக்கு வீட்டில் பெரிய மரியாதை.

பகல்நேரப் பராமரிப்பு இல்லத்திற்கு வரும் குடிசைப் பகுதி முதியோர், இடைப் பட்ட நேரத்தில் தூங்கலாம். போர் அடித்தது என்றால் சோப்புத்தூள் கிளறுதல், சத்து மாவு தயாரித்தல், அப்பளம், வடகம் செய்தல் என்று தூய்மையான சூழலில் செய்யலாம். "யாரையும் கட்டாயப்படுத்த மாட்டோம். வேலை செய்து பழக்கப்பட்ட பெரி யவர்களுக்கு ஒரு மாற்றம் வேண் டுமே என்று தான் இது போன்ற சின்னச் சின்ன வேலைகளைக் கொடுக்கிறோம். அவர் களும் கொஞ்ச நேரம் ஆர்வமாக செய்து விட்டு ஓய்வெடுத்துக் கொள்வார்கள். காலை யில் சிற்றுண்டி, மதியம் சாப்பாடு, மாலை தேநீர் மற்றும் சிற்றுண்டி என்று அவர்களைக் கவனித்துக் கொள்கிறோம்" என்கிறார்கள் இங் கிருக்கும் சகோதரிகள்.

இல்லேன்னா தூக்கம்!

— பெரிசுங்க ஹோம்!

வீட்டிலிருக்கும் உணர்வு அவர்களுக்கு வர வேண்டும் என்பதுதான் இவர்களின் நோக்கம். அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

லாரி ஓட்டுனராக இருந்த முருகேஷ் தாத் தாவுக்குப் பகல் நேரத்தில் இங்கே வந்து தங்கி விட்டுப் போவது நிறைய பிடித்திருக்கிறது. வீட்டில் மருமகளும் சுதந்தரமாக எல்லா வேலையும் செய்து விட முடிகிறது என்கிறார்.

அறுபது வயது நாராயணி என்பது வய தான தனது தாயாருடன் இங்கே வருகிறார். தனலட்சுமி பாட்டி இங்கே வருவது அவரது மகனுக்குப் பிடிக்கவில்லை என்றாலும், வீட் டில் நிலவும் வறுமை கருதி இங்கே வந்து தங்கு கிறார். வீட்டில் தனியாக இருக்க முடியாத அஞ்சலைப் பாட்டி இங்கே வந்து எல்லோ ருடனும் அரட்டை அடிக்கிறார். சதா பேசிக் கொண்டே இருக்க நிறைய தோழர்கள் கிடைத் திருப்பதுதான் அவருக்குப் பெரிய சந்தோ ஷத்தைக் கொடுக்கிறது என்கிறார்.

இங்கு முதியோர் செய்யும் பொருட்களை, பல சமூகசேவை நிறுவனங்கள் கை மேல் காசு கொடுத்து வாங்கிக் கொள்கிறார்களாம். சென்னை போன்ற மாநகரங்களில் பகல் நேர முதியோர் வீடுகள் பெருகிவிட்டால், அவர் களை இனி தெருக்களில் பார்த்துப் பரிதாபப் பட வேண்டியிருக்காது.

— ஜெயன்

படங்கள்: **வெங்கடேஷ்**

அமெரிக்க நாட்டில் மொத்தம் ஐம்பத்தியொரு மாகாணங்கள். அனைத்தின் பெயரையும் பட்டியலிடச் சொன்னால், அமெரிக்க மக்களே கஷ்டப்படுவார்கள். ஆனால் ஒரு இந்தியச் சிறுமி, அத்தனை மாகாணங்களின் பெயர்களையும் அகர வரிசைப்படி பட்டியல் போட்டுச் சொன்ன போது, அந்த அரங்கமே ஆச்சரியப்பட்டது. அந்தச் சிறுமி கம்பராமாயண இளம் மேதையான ஆதிரை!

சென்னை செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் ஆதிரை, அண்மையில், அமெரிக்காவுக்கு சென்று இரண்டரை மாதம் தங்கி, சொற்பொழிவுகள் நடத்திவிட்டு வந்திருக்கிறார். அவரது அமெரிக்க அனுபவங்கள்.

● அமெரிக்காவில் செயல்பட்டு வரும் அனைத்துத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு ஆண்டுக்கு ஒருமுறை விழா நடத்துகிறது. அதில் கலந்து கொள்ளுவதற்காகத்தான் என்னை அழைத்தார்கள். அந்த விழாவில் என் சொற்பொழிவைக் கேட்டபின், பல்வேறு தமிழ்ச் சங்கங்களும் தங்கள் ஊர்களுக்கு வர என்னை அழைத்தார்கள்.

● தமிழ்ச் சங்கங்கள் தவிர, பல்வேறு கோவில்களிலும் எனக்குச் சொற்பொழிவாற்ற வாய்ப்பு கிடைத்தது. அவற்றில் வாஷிங்டன் முருகன் கோவில், ஹூஸ்டன் மீனாட்சி கோவில், கலிபோர்னியா சிவன் கோவில், சிகாகோ பாலாஜி கோவில் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

● கம்பராமாயணத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், சங்க கால இலக்கியம் முதல் சமகால இலக்கியம் வரை என்ற தலைப்பில் பல ஊர்களிலும் பேசினேன். அதில் சங்க இலக்கியங்கள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் தொடங்கி, கவிஞர் வாலியின் ராமாயணம், மகாபாரதம் மற்றும் இன்றைய புதுக் கவிதைகள் வரை பல விதமான சுவையான விஷயங்கள் இடம் பெற்றன.

● நான் கடந்த ஏழெட்டு வருடங்களாக கர்நாடக இசை கற்றுக் கொண்டு வருகிறேன். எனவே, வெறும் சொற்பொழிவுடன் மட்டுமில்லாமல் இடையே பாடல்கள் பாடுவேன். இதற்கு நல்ல வரவேற்பு. வாஷிங்டன் முருகன் கோவிலில், முருகனும் தமிழும் என்ற தலைப்பில் நான் பாடி, சொற்பொழிவு செய்தபோது, மக்கள் மிகவும் ரசித்துப் பாராட்டினார்கள்.

● தமிழ்ச் சங்கங்கள், கோவில்கள் தவிர, பலரும் தங்கள் வீடுகளுக்கும் என்னை அழைத்திருந்தார்கள். தங்கள் நண்பர்களை குடும்பத்துடன் வரவழைத்து, கெட்-டு-கெதர்கள் ஏற்பாடு செய்து, அந்த சமயங்களிலும் என்னைப் பேசச் சொன்னார்கள்.

● குடும்ப நிகழ்ச்சிகளில், சினிமாப் பாடல்களில் ராகங்கள், கண்ணதாசன் கவிதைகள் போன்ற ஜனரஞ்சகமான விஷயங்கள் குறித்துப் பேசினேன்.

● ஏவி.எம். படங்களின் துவக்கத்திலும், இறுதியிலும் ஏவி.எம். எழுத்துக்களைக் காட்டுகிறபோது, ஒலிக்கிற டியூன் மோகன ராகம். பழந்தமிழ் 'தூது' இலக்கியத்தில் இடம் பெறும் நாராய் நாராய் செங்கால் நாராய்! பாடல் கூட இதே ராகம்தான்!

• ஜார்ஜ் ஹார்டுடன்...



அமெரிக்கத் தமிழர்களை

அசத்திய ஆதிரை!

• ஆதிரை



'அடுத்தாத்து அம்புஜத்தைப் பார்த்தேளா?' 'போறாளே பொன்னுத்தாயி' போன்ற சினிமாப் பாடல்கள் கூட மோகன ராகம்தான் என்று பாடிக் காட்டியதை அவர்கள் மிகவும் ரசித்தனர்.

● முதல் நிகழ்ச்சியின் துவக்கத்தில், ஐம்பத்தியோரு அமெரிக்க மாகாணங்களைப் பட்டியலிட்டபோது, 'எங்கள் நாட்டு மாகாணங்களின் பெயர் பட்டியல் சரி! இந்திய மாநிலங்களைத் தெரியுமா? என்று ஒரு மாணவி கேட்டாள்! அஸ்ஸாம், ஆந்திரப் பிரதேசம், என்று அகர வரிசைப் படி, பட்டியலிட்டுச் சொன்னேன்.

● அதேபோல குறிஞ்சிப்பாட்டில் வரும் தொண்ணூற்று ஆறு பூக்களின் பெயர்களைப் பட்டியலிட்டபோது, பெரியவர்கள் கண்களை அகல விரித்து என்னை அதிசயத்துடன் பார்த்தார்கள்; அவ்வளவு தமிழ்ப் பரிச்சயமில்லாத சிறுவர், சிறுமியர் ஒன்றும் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

● இன்னொரு வீட்டில், ஒரு பெண்மணி, என்னை அப்படியே தத்ரூபமாய் சில நிமிடங்களிலேயே வரைந்துவிட்டார்.

● பல பெற்றோர்கள், வீட்டில் தங்கள் குழந்தைகள் தமிழில்தான் பேசவேண்டும் என்று கட்டாயத்தைக் கடைபிடிப்பதால், இளைய தலைமுறை உடைத்து, உடைத்துத் தமிழ் பேசுகிறார்கள்.

● 'ழ'கரம் இருபத்தி இரண்டு இடங்களில் இடம் பெறும் தேவாரப் பாடல் ஒன்றை நான் பாடிக்காட்டிய ஒவ்வொரு இடத்திலும், அனைவரும் எழுந்து நின்று பல நிமிடங்கள் தொடர்ந்து கைதட்டி, எனக்குப் பாராட்டு தெரிவித்தார்கள்.

● ஒக்லஹாமா மாநிலத்தில் வசிப்பவர் ஷண்முகமணி. அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தபோது, அவர்களுக்கு என்னை ரொம்பவும் பிடித்துப்போய்விட்டது. "நீ இந்தியாவுக்குத் திரும்பிப் போகவே வேண்டாம். எங்கள் குடும்பத்திலேயே தங்கிவிடு. உன்னை எங்கள் பெண்ணாகவே ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னார்.

● ஜார்ஜ் ஹார்ட் என்ற அமெரிக்கரைச் சந்தித்தேன். அவரது மிகச் சுத்தமான தமிழ் உச்சரிப்பு என்னை வியப்பில் ஆழ்த்தியது. அவரது மனைவி கௌசல்யா, மிக அன்போடு பழகினார். ஜார்ஜ் ஹார்ட், கலிபோர்னியாவில் பெர்க்லி பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் புரொபசர்.

தொகுப்பு:
பாரதி மௌலி

சாஸ்திரி!

சரஸ்வதி பூஜையன்று, சென்னை கல்லூரிச் சாலையில் உள்ள சங்கர நேத்ராலயா தலைமை சிகிச்சைக்கூடத்தில் பெரிய நோக்கத்தோடு நடைபெற்றது ஒரு சிறிய விழா! நாற்பது பேர் மட்டுமே அமரக்கூடிய அந்தச் சிறிய ஹாலுக்கு திருமதி மனோரமா அகேலா ஹால் என்று புதிதாகப் பெயர் சூட்டப்பட்டிருந்தது. ஏவி.எம். சரவணன் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் ஹாலில் அமர்ந்திருந்தனர். சரஸ்வதி பூஜை முடிந்ததும் அந்த விழா தொடங்கியது. விழாவிற்கு வந்திருந்த வெளிநாட்டு வாழ் இந்தியரான ஏ.கே. சாஸ்த்ரியை அறிமுகப்படுத்தியதும், எல்லோர் முகத்திலும் ஆச்சர்யத்தில் ஆயிரம் வாட் வெளிச்சம். காரணம் தோற்றத்திலும் உடையிலும் அத்தனை எளிமை.

ஏ.கே. சாஸ்த்ரி அறுபதுகளில் சென்னைவாசி. அவருக்கு வாழ்வின் மிகப் பெரிய திருப்பமாக வந்து சேர்ந்தவர் அவரது மனைவி மனோரமா அகேலா. தமது பிள்ளைகள் கம்ப்யூட்டர் துறையில் உயர்கல்வி கற்றதையடுத்து எழுபதுகளில் அமெரிக்காவுக்குக் குடி பெயர்ந்திருக்கிறது சாஸ்த்திரியின் குடும்பம். அங்கேதான் வெற்றிகரமான வாழ்க்கை தொடங்கியிருக்கிறது. கம்ப்யூட்டர் தொழிலில் நேரடியாக ஈடுபடும் தொழிலதிபர்களாகவும், கம்ப்யூட்டர் நிறுவனங்களில் உயர் பதவி வகிப்பவர்களாகவும் நான்கு மகன்களும் உயர்ந்திருக்கிறார்கள். செல்வச் செழிப்பின் உச்சியில் வாழ்ந்த போதும் ஒட்டு மொத்த குடும்பமும் எளிய வாழ்க்கை முறையை கைவிடவில்லை. இந்த நேரத்தில் சங்கர நேத்ராலயாவின் தலைவர் டாக்டர் பத்ரிநாத்தின் உறவினர் சக்கரவர்த்தி பார்த்தசாரதி (இவரும் ஒரு வெளிநாடு வாழ் இந்தியர்) கலிபோர்னியாவில் லீவர்மோர் என்ற இடத்தில் உள்ள சிவா விஷ்ணு ஆலயத்தில் சாஸ்த்திரியைச் சந்தித்திருக்கிறார். அமெரிக்காவில் இத்தனை எளிய இந்தியரா? என வியந்துபோன சக்ரவர்த்தியைப் பற்றி சாஸ்த்ரி விசாரித்திருக்கிறார். அவர் சங்கர நேத்ராலயா குறித்தும், அதன் தலைவர் டாக்டர் பத்ரிநாத் தமது உறவினர்தான் என்றும் எடுத்துச் சொல்ல, சங்கரநேத்ராலயா குறித்து ஏற்கனவே நன்கு கேள்விப்பட்டிருந்த சாஸ்த்ரி, அந்த நிறுவனத்திற்குத் தாம் உதவ விரும்புவதாக கோவிலிலேயே சொல்லியிருக்கிறார்.

அதன் பிறகு இந்தியா வந்தபோது சங்கர நேத்ராலயா சென்று உதவித் தொகைக்கான காசோலையைக் கொடுத்தபோது எல்லோருக்கும் இன்ப அதிர்ச்சி! ஆம்... சாஸ்த்ரி நன்கொடை அளித்த தொகை இரண்டு லட்சத்து



ஐம்பதாயிரம் அமெரிக்க டாலர்கள்! இந்திய பணத்தில் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகம். "உதவ எண்ணிக் கொண்டிருந்தபோது, கோவிலில் அந்த நிறுவனத்தை அடையாளம் காட்டிய கடவுளுக்கு நன்றி" என்கிறார் சாஸ்த்ரி மிக அடக்கமாக.

அவர் விடைபெற்று புறப்பட்டபோது வெளியிலே மழை. நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை என்பது இதுதானோ?

— சக்கரத்தாழ்வார்

படம்: வெங்கடேஷ்

அலை உறங்கும் கடல்

ஊஞ்சல் பலகை ஙிக் ஙிக் என்று சப்தமிட்டபடி மென்ன அசைந்து கொண்டிருந்தது. காலியான அரிசிக் கோணியை விசிறிப் போட்டாற்போல நீலுப்பாட்டி அதில் படுத்திருந்தாள். அபூர்வமாகப் பகலில் அவள் உறங்குவதைப் பார்க்க, உமாவுக்கு வியப்பாயிருந்தது. கூடவே இவள் உறங்க வேறு சமயமே கிட்டவில்லையா என்றும் சலிப்பெழுந்தது. அவளை உசுப்பி உட்கார வைத்து, அருள்தாஸ் மீண்டு வந்த கதையை மீண்டும் மீண்டும் பரவசமுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் போலிருந்தது. மனத்தின் சந்தோஷக் கிளர்ச்சியில் திளைத்திருந்தாள் அவள். புதிய தெம்பும் உற்சாகமும் மிகுந்திருந்தது. இந்தக்கணம் அப்பா உட்பட யாரையும் எதையும் தன்னால் சமாளித்து விட முடியுமென்று தோன்றியது.

அருள்தாஸ் சொன்னான்: "மீண்டு வந்து உன்னைப் பார்ப்பனான்னு ஆவேசப்பட்டேன் உமா. இப்பப் பார்த்துட்டதே கல்யாணங் கட்டிக்கிட்ட மாதிரி இருக்கு."

"அப்ப இதுவே போதுமாக்கும்?"

"தப்பா நினைச்சிக்காத உமா. நெசம்மாவே அப்படித்தான் இருக்கு. வேத்தூருக்கு சோலியாப் போன புருசன் திரும்பி வந்து சேராட்டாப்பல. பாரு, உங்கையைப் பிடிச்சிக்கறப்ப எப்படி சிலுத்துக்குது பாரு."

அவளைப் பார்க்கக் காலை புறப்படும் போது நீலுப்பாட்டியிடம் உமா விஷயத்தைச் சொன்னாள். எப்போதும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தியே வெளிக் காட்டும் அவள் விழிகளில் அந்தக் கணம் பீறிட்ட கனிவு உமாவைப் பூரணமாக நனைத்தது.

"எனக்கு ஒண்ணும் சொல்லத் தோணலேடி குட்டி. நீ நன்னா இருக்கணும். அவ்ளோதான். உங்கப்பனை நினைச்சாத்தான் கவலையா இருக்கு."

உமாவுக்கும் அந்தக் கவலை இல்லாமலில்லை. ஆனால் மனத்தின் மாய அடுக்குகளில் அது தாற்காலிகமாகச் சற்றே பின்னுக்குச் சென்று விட்டாற் போலிருந்தது. ஒரு சிறகடிப்பு, அதன் ரீங்காரம் நின்று சுழன்று தேகமெங்கும் பரவிச் சிலிர்த்துப் படர்வதான உணர்வு விநாடிக்கொரு தரம் உண்டானது. அகிலாவைப் போலல்லாமல் அப்பாவைச் சம்மதிக்க வைத்தே தன் திருமணத்தை நிகழ்த்திக் கொள்ள முடியுமென்று தோன்றியது அவளுக்கு. இது காறும் பயத்தின் கோரப் பிடியில் அகப்பட்டுக் கசங்கிக் கிடந்த தன் மனம் எப்படி இத்தனை வீறு கொள்ளக் கூடுமென்று வியந்தாள்.

நீலுப்பாட்டி சொன்னாள்: "நான் அவனைப் பார்க்கணும். என் பேத்திக்கு அப்படியென்ன சொக்குப் பொடி போட்டான்னு நானுந்தான் தெரிஞ்சுக்கறேன்."

மாலை ஐந்து மணிக்கு அவனை கந்தமாதன பருவதத்துக்கு வரச் சொல்லியிருந்தாள் உமா.

"மேரியையும் கூட்டிட்டு வா அருளு. பாட்டி பார்க்கணும்னு பிரியப்படறா."

குதிரை வண்டிக்காரனிடம் "நிறுத்திக்கோ" என்றாள் நீலுப்பாட்டி.

குதிரை நிற்க, இருவரும் இறங்கிக் கொண்டார்கள்.

"இங்கியே நிக்கணும். அரை மணி சாவகாசத்துல திரும்பி வந்துடுவேன்" என்று குதிரைக்காரனிடம் சொல்லிவிட்டு, உமாவிடம் திரும்பி, "வந்துடுவானோல்லியோ கரெக்டா?" என்று கேட்டாள்.

"வந்துட்டான்" என்று உமா சொன்னாள். பாட்டி உடனே தன் புடைவையைத் திருத்தமாக இழுத்து விட்டுக்கொண்டாள்.

எதற்கு இவள் விபூதிச் சம்புடத்தைக் கையில் எடுத்து வருகிறாள் என்று வரும்போதே உமா யோசித்தாள். காரணம் இப்போது விளங்கியது.

அருள்தாஸ் சைக்கிளை ஸ்டாண்டு போட்டுவிட்டு வந்து பாட்டியின் கால் தொட்டு வணங்கியபோது கை நிறைய எடுத்து நெற்றியில் பூசிவிட்டாள், சற்றும் எதிர்பாராத விதமாக.

"கொழுப்பு!" என்று பல்லைக் கடித்தாள்

பா. ராகவன்

உமா.

"நீ கம்மாருடி. பாழும் நெத்தியா இருக்கக் கூடாது" என்று மிரட்டினாள்.

அவன் சிரித்துக்கொண்டே சங்கு மாலைகளின் இடையே தெரிந்த கண்ணாடிகளில் ஒன்றின் முன் சென்று நின்று அழகு பார்த்துவிட்டு, "இதுங்கூட நல்லாத்தானிருக்கு" என்று பாட்டியைப் பார்த்துச் சிரித்தான்.

"உமா, உன் பாட்டி லேசுப் பட்டதில்லே. லங்கிணி" என்று காதைக் கடித்தான் அற்புத மேரி. தனக்கும் அவள் இருநீறு பூசவந்தபோது மறுக்காமல் இட்டுக்கொண்டு, பின்புறமாகச் சென்று அழித்துவிட்டதை உமா கவனித்தாள்.

"இங்க உட்கார இடமே இல்லியே?" என்று அருள்தாஸ் சொன்னான்.

"மேல இருக்கு. பிராகாரத்துல உட்கார்ந்தா காத்து கொட்டிண்டு போகும்" என்றாள் நீலுப்பாட்டி.

"ஆனா நீங்க ஏறணுமே பாட்டி?" என்று நிஜமான அக்கறையுடன் கேட்டான் அருள்தாஸ்.

நீலுப்பாட்டி அவனை அரைக்கணம் முறைத்தாள்.

"கிழவின்னு தானே பார்க்கறே? எட்டுருக்குப் படி யேறுவேன். இந்த கந்த மாதன பருவதத்தைப் பதினாறு ஜென்மமா இல்லே ஏறிண்டிருக்கேன்?" என்றவள், விறுவிறுவெனப் படியேற ஆரம்பிக்கவும் அசந்துபோனான் அருள்.

"பயங்கர ஸ்டாமினா உமா" என்று சிரித்துக்கொண்டே கூறியவன், நான்கு படிகளைத் தாவியேறி, பாட்டியை அடைந்தான்.

"பாட்டி, நா ஒண்ணு கேக்கலாமா?"

"கேளேன்" என்றாள் நீலுப்பாட்டி.

"நானெல்லாம் இந்தக் கோயிலுக்கு வரலாமா?"

"ஏன், வந்தா என்ன? விபீஷணன் வந்திருக்கான். அவன் ராட்சஸ ஜாதி. நீ மனுஷ ஜாதிதானே?" என்று வெடுக்கென்று கேட்டாள் நீலுப்பாட்டி.

"அப்ப சரி" என்றவன், மேலும் சீண்டும் விதமாக, "மீன் திங்கறவன். அதான்..." என்று இழுத்தான்.

"குகன் கொடுத்ததை வாங்கி, ராமனே சாப்பிட்டிருக்கான். உயிர்வதை கூடாதுங்கறது உலகத்துக்கே பொதுவான போதனை. கேக்கறவா கேக்கறா. கொன்னா பாவம், தின்னா போச்சுன்னு நினைக்கறவாளும் இருக்கத்தானே இருக்கா? அதெல்லாம் பரவால்லே" என்றாள்.

சட்டென்று ஒரு பவ்யம்



வந்து அவள் கரங்களைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக்கொண்டான் அருள்தாஸ்.

"நீங்க இப்படி இருப்பீங்கன்னு நெசமாவே எதிர்பார்க்கல்ல ஆத்தா" என்றான் தழுதழுத்தபடி.

''எல்லாத்துலேயும் இப்படி இருக்க மாட்டேன்!" என்று விழிகளை உருட்டிப் போலியாக மிரட்டியவள், "மூச்சு வாங்கறது'' என்று முழங்காலைப் பிடித்துக்கொண்டு சற்று நேரம் நின்றாள்.

மீண்டும் படியேறி மேன்மாடத்தை அடைந்ததும், "இஷ்டமிருந்தா கும்பிட்டுக்கோ. கட்டாயமில்லே'' என்று அருள்தாஸிடம் சொன்னாள்.

அவன் பின்புறம் திரும்பி, உமாவைப் பார்த்தான், ஒரு புன்னகையுடன்.

சந்நிதியில் சில நிமிடங்கள் கழிந்ததும் நால்வரும் தெற்குப் புற வெளிப் பிராகாரத்தில் அமர்ந்தார்கள். காற்றில் குளுமை, சூழலைக் கனியச் செய்திருந்தது. அங்கிருந்து பார்க்க, விளக்கொளியில் தீவே ஒரு தெப்பம் போலத் தென்பட்டது.

"என்ன படிச்சிருக்கே?'' என்று நீலுப் பாட்டி கேட்டாள்.

"ஏழாங்கிளாஸ் ஆத்தா" என்றான் அருள்தாஸ்.

''ஆத்தாங்காதே. பாட்டின்னு சொல்லு. அதான் கேக்க நன்னாருக்கு."

"சரி பாட்டி" என்று சிரித்தான்.

''இவளைக் கல்யாணம் பண்ணிக்கறதா முடிவு பண்ணிட்டியா?"

அவன் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"பாரு, நான் பொருத்தம் பார்க்க வரல்லே. இனி அதெல்லாம் பிரயோஜனப்படாதுன்னு நன்னாவே தெரியும். என் பேத்தி கஷ்டப்படக் கூடாது. அதான் எனக்கு முக்யம். பத்துநாள் நீ காணாமப் போயிட்டே. அவ தவிச்ச தவிப்பு எனக்குத்தான் தெரியும். முன்னபின்ன தெரியாதவன்னாலும் நீ திரும்பி வந்தா ராமநாதனுக்கு சங்காபிஷேகம் பண்றேன்னு நான் வேண்டிண்டேன், கேட்டியா?"

"சரி, பாட்டி."

"என்ன சரி? கேட்டுக்கோ. மீன் பிடிக்கறது உன் குல வழக்கமாயிருக்கலாம். நான் ஒண்ணும் சொல்றதுக்கில்லே. ஆனா ஒரு பிசினஸ் அது இதுன்னு சட்டை போட்டுண்டு உட்கார்ந்தேன்னா எனக்கொரு ஆத்ம திருப்தி. உமாவுக்கும் சங்கடமில்லாமல் போகும்..."

பாட்டியின் யோசிப்பு எல்லைகள் குறித்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தாள் உமா. விட்டால் அவனை மதம் மாறச் சொல்லக் கூடத் தயங்க மாட்டாள் என்று தோன்றியது.

அவள் மனத்தைப் படித்தவள் போல நீலுப்பாட்டியே விரைவில் அந்தத் தலைப்பைத் தொட்டு விட்டாள்.

"நீ யேசுவைக் கும்பிட்டுக்கோ. வேண்டாங்கலை. இவ கோயிலுக்குப் போறதைத் தடுக்கக் கூடாது. கேட்டியோ? கோகுலாஷ்டமின்னா சீடை பண்ணித்தான் ஆகணும். தீபாவளின்னா புதுசு உடுத்திண்டு தான் ஆகணும். கிருஸ்துமஸுக்கும் இன்னொரு புதுசு வாங்கிக் கொடுத்துக் கூட்டிண்டு போ. ஜாம்ஜாம்னு வருவா."

சிரித்துக்கொண்டே தலையாட்டினான்.

சட்டென்று உணர்ச்சி வசப்பட்டவளாக ''மனசு கேக்க மாட்டேங்கறதுடா! இந்தப்

''கலெக்டர் சொன்னதைக் கேட்டதால் உன்னை போலீஸ் பிடிச்சாங்களா, எப்படி?''

''கலெக்டர்தானே போன வாரம் 'தண்ணிய' காய்ச்சிக் குடிக்கச் சொன்னார்...''

– சித்தோடு க. பூங்கொடி

பொண்ணு இப்படிப் பண்ணிடுத்தேன்னு பொங்கிப் பொங்கி வரத்தான் செய்யறது. சம்பிரதாயத்துல ஊறின கட்டை. அத்தனை சீக்கிரம் காயவும் மாட்டேங்கறது. இருந்தாலும் அவ நன்னாருக்கணுமே. அப்பன் வேற முசுடு..."

வழக்கம் போல் தொடர்பற்ற சொற்றொடர்களின் விளிம்பில் நின்று அவள் பேச ஆரம்பித்து விட்டதை உமா உணர்ந்தாள். ஒரு கட்டுப்படுத்தும் முன்னிலையாகத் தன்னைத் தானே நியமித்துக்கொண்டு, "என்ன பேசறே பாட்டி? இவன் நல்லவன். எனக்கு அது போதும். நான் ஒண்ணும் நாசமா போக மாட்டேன்" என்றாள் சற்றே சினம் பூண்டவளாக.

"அதை நீ சொல்ல வேண்டாம். இவன் முகமே சொல்றது. வேர்க்கொட்டுக்காரன்னாலும் தப்பு தண்டாவுக்கு அஞ்சி நடக்கறவன் தான். கண்ணு சொல்லிடுத்து எனக்கு. நீ சும்மாரு" என்றவள் அருள்தாஸிடம் திரும்பி, ''இந்த மீன், கறியையெல்லாம் மட்டும் விட்டுடேன்!" என்றாள் பரிதவிப்பாக.

''சரி ஆத்தா'' என்றான் சிரித்துக்

கொண்டே.

"சொன்னா போறாது. எனக்கு சத்தியம் பண்ணிக் குடுக்கணும்!"

"பாட்டி..." என்றாள் உமா.

"நீ சும்மாருடி!" என்று மிரட்டியவள், "எனக்குத் தோணறதையெல்லாம் சொல்லிட றேன். கேக்கறதும் கேக்காததும் அவாவா இஷ்டம்!" என்று பொதுவாகச் சொன்னாள்.

"இருட்டிடுச்சி" என்றாள் அற்புதமேரி.

"கிளம்பிடலாம். கடைசியா ஒண்ணு சொல்லிடறேன். உமா ஒண்ணுந்தெரியாத குழந்தை. அம்மா இல்லாதவ. கண் கலங்கிண்டு அவ திரும்பி வரப்படாது; ஆமாம்."

பாட்டி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

வீடு திரும்பும்போது, "என்னமோ



நாளைக்கே கல்யாணம்ங்கற மாதிரி பேசறியே பாட்டி?" என்று உமா கேட்டாள்.

நீலுப்பாட்டி பதிலேதும் சொல்லவில்லை. அவள் பார்வை வானத்தில் நிலைத்திருந்தது. குதிரை வண்டியின் ஆட்டத்துக்கு ஈடு கொடுத்து முன்னும் பின்னுமாக அவள் உடல் அசைந்தாலும் பார்வை நகரவில்லை.

பிறகு உமா பேசக் கொடுக்கவில்லை. இனிமேலாவது பாடங்களைப் பற்றிக் கொஞ்சம் யோசிக்கலாம் என்று நினைத்தாள். அருள்தாஸைக்கூட எஸ்.எஸ்.எல்.சி எழுத வைத்தால் என்னவென்று தோன்றியது. கேட்கக் கூடியவன்தான். தவிரவும் கல்வியின் போதாமை குறித்து ஏக்கமுள்ளவன். சிக்கலுற்ற நூல் கண்டைப் பிரித்துச் சீராக்குவதைப் போல் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டியிருக்குமென்று அவளுக்குத் தோன்றியது. நீண்டதொரு பெருமூச்சில் கஷ்டங்கள் கரைந்து விடாதா என்றிருந்தது.

சீக்கிரமே சாப்பிட்டுவிட்டு உறங்கி விட்டார்கள். நள்ளிரவு யாரோ தன்னை எழுப்புவது போல் உணர்ந்து உமா கண் விழித்தாள். நீலுப்பாட்டிதான் இருளில் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன பாட்டி?" என்று உமா கேட்டாள்.

ஒருகணம் தயங்கியவள் "ஒண்ணுமில்லே. நான் சொன்னா ஒரு விஷயம் கேட்பியா?" என்றாள்.

"என்னது பாட்டி?" என்று மீண்டும் கவலையுடன் கேட்டாள் உமா.

உதடுகளை மீறி உதிர மறுக்கும் சொற்களை இழுத்து இறக்கிவிடத் தவிப்பவளாகத் தெரிந்தவள், "எனக்கு இப்ப ஒரு கனா வந்தது" என்றாள்.

"என்ன கனா?"

"அது உனக்கு வேண்டாம். பயந்துடுவே. ஆனா, நான் ஒண்ணு சொன்னா கேட்பியா?"

"சொல்லு" என்றாள் உமா.

"நீ கேட்பேன்னு சொல்லு" என்று விடாப்பிடியாக அவள் நிற்கவும் குழப்பமாக ஏறிட்டாள்.

"கேளு. கேட்டுத்தான் ஆகணும். வேற வழியில்லே."

"கஷ்டம். நடு ராத்திரி ஏன் பாட்டி இப்படிப் பிராணனை வாங்கறே? என்ன கேக்கணும்னு சொல்லேன்."

சட்டென்று உடைந்து கேவ ஆரம்பித்தாள் நீலுப்பாட்டி.

"என் கண்ணோல்லியோ? பாட்டி உனக்கு நல்லதுதானே நினைப்பேன்? வேணாம்டி. நடந்ததையெல்லாம் மறந்துடு. அந்தப் பையன் வேண்டாம். அவனை நீ கல்யாணம் பண்ணிக்க முடியாது..."

"ஏன் பாட்டி?" - முற்றிலும் உறக்கம் கலைந்து அதிர்ந்து எழுந்தாள் உமா.

"காரணம் மட்டும் கேக்காதே. நானே பண்ணி வெக்கறேன்னு சொன்னேனில்லியா? இப்ப நானே சொல்றேன். அவன் வேண்டாம். மறந்துடு."

"அதான் ஏன்னு கேக்கறேன்?"

"என்னத்தைச் சொல்லுவேன்! என் கனா உனக்குப் புரியாது குட்டி. வேண்டாமே? சொல்றதைக் கேளேன்..."

பரிதவித்து அமர்ந்து அவள் தோள்களைப் பிடித்துக்கொண்டு, "என்னை நம்பு. அவனை மறந்துடு. வேண்டாம் அவன்... வேண்டாம்" என்று பைத்தியம் போல மீண்டும் மீண்டும் சொன்னாள்.

உமா பேசாமலே இருந்தாள். சில விநாடிகள் கழித்து, "என்ன, திரும்பவும் அவனுக்குக் கண்டமா?" என்று கேட்டாள்.

"ஆமா. ஆனா இந்த வாட்டி மீள மாட்டான்!" என்றாள் நீலுப்பாட்டி.

(தொடரும்)

கலிங்க தரிசனம்



காற்றும் நீரும்
கரை கடந்த
கொந்தளிப்பில்
நிலம் குலைய,
செத்ததின்
சிதைகளைச் சுவைக்கும்
தீவிரத்தில் தீ.

அஞ்சு பூதங்களில்
ஆடாமல் மிஞ்சியது
ஆகாசம்—
அண்ணாந்து நோக்கும்
அகதிகளுக்கு ஆதரவாய்,
விடியாத வரை
அது மட்டுமே
இடியாதக் கூரையாக.

என்று எண்ணி
இறுமாந்திருக்க,
இந்திய விமானம்
கடத்தப்பட்டதும்
படபடத்த
நம்மை விடத்
தள்ளி நின்றே
வேடிக்கைப் பார்த்த
ஆகாசம் அன்றே
அயலாகிப் போனது.

இயலாத வானத்தின்
புரியாத மௌனம்
புரிய வைத்தது
புயலாய் வந்த பூதங்களின்
தெரிந்த சீற்றம்.

சண்டையெல்லாம் நமக்கு
அண்டை வீட்டுக்காரனோடு
மட்டுமே.

விண் என்பதெல்லாம்
மண்ணில்
குறுக்கிடாத மாயங்களுக்கு.

— வீ. விஜயராகவன்

பத்திரிகையில் வராத பதில்கள்!

ஒரே கேள்விக்கு தராசு, அரசு, மதன், பாக்யா எப்படி பதில் சொல்வார்கள்...? இதோ—கேள்விகள் நிஜம்; பதில்கள் கற்பனை!



1) எம்பிக்களை விலைக்கு வாங்கியதால் குற்றவாளி என ராவும் பூட்டாவும் தண்டனை பெற்றதை மற்ற தலைவர்கள் பாடமாக எடுத்துக் கொள்வார்களா?

– ரேவதிசங்கர், சென்னை.

தராசு:

தலையணை சைஸுக்கு இரண்டு கயசரிதைகள் வந்து பல்கலைக்கழகத்தில் பாடமாய் வைக்கப்படலாம். மற்றபடி, மனசாட்சியின் கதவுகள் திறக்கப்படும் வரை மாற்றங்கள் மதில்மேல் பூனைதான்.

அரசு:

பாடமாகவா(!!) மணிரத்னம் மாதிரி யாராவது படமாக எடுத்தால் உண்டு.

ஹாய் மதன்:

அப்படிப்பார்த்தால் உலகின் முதல் தண்டனைக் கைதியில்லா ஒலியர்லி அர்ஸெடோபெர்க்கிற்குப் (தலைசுற்றினால் மெட்டாசின் எடுத்துக் கொண்டு மேலே படிக்கவும்) பிறகு குற்றவாளிகளே இருந்திருக்க மாட்டார்களே. சரி அதை விடுங்கள். யார் தொந்தரவும் இல்லாத சிறையிலாவது ராவ் சிரிப்பு ரிலீஸ் ஆகுமென எதிர்பார்ப்போம்.

பாக்யராஜ்:

ஒருகதை சொல்றேன் கேளுங்க. ராஜா ஒருத்தரு தன்னோட வேலைக்காரனைக் கூப்பிட்டு கொக்குக் கறி சமைச்சித்தரச் சொன்னாரு. சமைச்சி முடிச்சிட்டுப் பாத்தா நம்மாளுக்கு நாக்குல எச்சி ஊறிடுச்சி. சரி ராஜாட்ட சமாளிச்சிக்கலாம்னு கொக்கோட ஒருகால எடுத்துத் தின்னுட்டான். ராஜா சாப்பிடும் போது கவனிச்சிட்டு "என்னடா ஒரு காலு தான் இருக்கு இன்னொரு காலு எங்கே?"ன்னாரு. நம்மாளு சளைக்காமல் "என்ன ராஜா இப்படிக் கேக்கறீங்க. கொக்குக்கு ஒரு காலுதான் இருக்கும்"ன்னான். உடனே ராஜா, "எங்க காட்டு.."ன்னாரு

இப்ப ராஜாவ அழைச்சிக்கிட்டு ஏரிக்கரைக்குப் போனான். அங்க ஒரு கொக்கு ஒத்தக்கால்ல நின்னுக்கிட்டிருந்திச்சி. அதக் காட்டி "ராஜா அங்கப் பாருங்க கொக்கு ஒருகால்ல நிக்கறத"ன்னு காட்டினான். இப்போ ராஜா சுதாரிச்சிக்கிட்டு, கையத் தட்டுனாரு உடனே கொக்கு மேல பறக்க இரண்டு காலும் தெரிஞ்சிருச்சி. அதப் பார்த்த ராஜா வேலைக்காரன்ட்ட "இப்ப என்ன சொல்றே?"ன்னுக் கேட்க, நம்மாளு படு அலட்சியமா "நான் சமைக்கும்போதே நீங்கக் கையத் தட்டிருக்கணும்னான்." நாமெல்லாம் முட்டாள் ராஜா. அரசியல்வாதிகள் புத்திசாலி வேலைக்காரன்.



துக்ளக்:
இருந்தறதுக்கும் வாய்ப்பு இருக்கு. இல்லன்னா மாட்டிக்காம தப்பு செய்யறது எப்படின்னு நல்லா தெரிஞ்சுக்கிட்டு ஊழல் அதிகரிக்கவும் வாய்ப்பு இருக்கு. இதப்பத்தி எனக்குத் தெரியாது.

2) நடிகை ரோஜாவுக்கு 8 படங்களின் சம்பளத் தொகையைக் கொடுக்க வேண்டாம் என்று கூறியிருப்பது அநியாயமாக இல்லை?
– புளியரை கணேசன்

தராசு:
அந்த சம்பளத் தொகையை ரோஜாவுக்கே கொடுத்துவிட்டால் உங்கள் சம்பளத்தில் எதாவது இங்க்ரிமெண்ட் போடுவார்களா? விடுங்க சார்.

அரசு:
மகா அநியாயம்ப்பா. நம் கனவு ராணிக்கே (செல்வமணி மன்னிப்பாராக) 'செக்' வைத்த அந்த போத்ராவுக்கு அரசின் கோர்ட்டில் அதிகபட்ச தண்டனையாக எதாவது ஒரு மெகா சீரியலை முழுதாகப் பார்த்துவிட்டு கதை சொல்ல வேண்டுமாய்த் தீர்ப்பளிக்கிறேன்.

ஹாய் மதன்:
ரோஜாவின் பாட்டனிப் பெயர் 'ரோஸா மரியானோ ஃபிலிமர்கூர்! ரோஜாவுக்கு 10லிருந்து 15 இதழ்கள் இருப்பதாக இந்தியாவிலும் அதற்கும் அதிகமாக உள்ளதாக தெற்காசிய நாடுகளிலும் கருத்து உள்ளது. மேலும் இதன் பெயரில் ஒருபடம் வந்து தேசிய விருது வாங்கியிருப்பது கூடுதல் தகவல். (நீதிமன்றக் கருத்தை அவமதிக்க வைத்து மதனை உள்ளே தள்ளும் உங்கள் திட்டத்திலிருந்து எப்படி என் 'எஸ்கேப்')

பாக்யராஜ்:
எனக்கு அனுப்பியதற்கு பதில் இந்தக் கேள்வியை விஜயகாந்துக்கு அனுப்பியிருந்தால் எதாவது பயனிருக்கும். (அப்பாடா கதை சொல்லாம ஒரு பதில் சொல்லிட்டேங்க!)

துக்ளக்:
சட்டம் இது விஷயமாகத் தெளிவாயில்லை. நான்கு படங்களின் சம்பளத்தைத் தராமலிருந்ததற்கான முன்னுதாரணம் ஒரு வழக்கில் இருக்கிறது. ஆனால் எட்டு படங்கள் என்பதால் இது தனியான ஆராய்ச்சிக்கு உரியது.

3) ரஜினி பற்றிய செய்திகளையே காணோமே...?
– கே.ஆர்.வேலுசாமி,
கோவை.

தராசு:
முன்பெல்லாம் ரஜினி காணாமல் போனால் இமயமலையிலோ, மோகன்பாபு வீட்டிலோ தேடலாம். இப்போது கொஞ்சம் சத்தியமங்கலம் பக்கமாகத் தேடிப்பாருங்கள்..

அரசு:
கொஞ்ச நாள் பொறுங்கள் தி.மு.கவும் த.மா.காவும் கண்டுபிடித்துத் தருவார்கள்.

ஹாய் மதன்:
கடத்தல், விலையேற்றம், மூட்டு வலிக்கு இடையிலும் தலைவரைத் தேடும் உங்களுக்கு 'ரசிகனோ கிரிதரமோனியா' வந்திருக்குமென கவலைப்படுகிறேன்.

பாக்யராஜ்:
இப்ப மகாபாரதத்துல ஹீரோ கிருஷ்ணன்தான். ஆனாப்பாருங்க எல்லா சீன்லயும் அனாவசியமா மூக்க நுழைக்க மாட்டாரு. நம்ம ரஜினி கிருஷ்ணன் மாதிரிங்க.

துக்ளக்:

அவர் எங்கப் போறேன்னு என்ட்ட சொல்லிட்டுப் போகல. இப்பன்னு இல்ல எப்பவுமே சொல்லிட்டுப் போனதில்ல. முதலமைச்சர் ஆவறதுக்கு எல்லாத் தகுதியும் ரஜினிகிட்ட இருக்கு. ஆனா ஏன் என்ட்ட சொல்லாம எங்கயாவது போயிடறாருன்னு தான் தெரியல.

4) விடுதலைச் சிறுத்தைகள் என்பது வன்முறைக்கும்பல் அவர்கள் செய்யும் வன்முறைகளுக்கு தமிழக அரசு நடவடிக்கை எடுப்பதில்லை என்கிறாரே பா.ம.க. தலைவர் ராமதாஸ்?

– வி. சிவா, மதுரை.

தராசு:

விவேக், வடிவேலுவெல்லாம் ராமதாஸைக் கண்டு பயப்படப் போகிறார்கள். சில நேரங்களில் மிகக் காமெடியாகப் பேசுகிறார்.

அரசு:

சீக்கிரமே ஆட்சியில் பங்கென்று ராமதாஸும், கூட்டணி ஆட்சில்லாம் கதைக்கு ஆவதுன்னு கலைஞரும் அறிக்கைவிட்டு அல்லோலப்படப்போகிறது என் அப்பாவி வாக்காளனே.

ஹாய் மதன்:

தாவுத் கவுஸா முகம்மது என்ற முகலாய மன்னரின் வாரிசு ராமதாஸ். (தா.க.மு. ஒரு பிளாக்மெயில்பிரியர்) மேலும் ராமதாஸுக்கு சமீபகாலமாக செலக்டிவ் அபிஷேகபாக்னாயம்– ச்சிய்– செலக்டிவ் அம்னீசியா பிடித்திருப்பதாகத் தகவல்.

பாக்யராஜ்:

இப்ப நான் உங்கள்ட்ட 2 கோடியே ஆறாவது முறையா பாட்டி வடைசுட்டக் கதைய சொன்னேன்னா என்ன பண்ணுவீங்க. புத்தகத்த மூடிவச்சிட்டுத் தூங்கிடமாட்டீங்க. அப்படித்தான் இதெல்லாம். கண்டுக்காம போயிடுங்க.

துக்ளக்:

டாக்டர் ராமதாஸோட க்ளினிக்குக்குப் போய் நடந்தத மறக்கறதுக்கு நாமல்லாம் ட்ரீட்மெண்ட் எடுத்துக்கலாம். இந்த அறிக்கையால என்ன நடக்கும்னு நடந்த பிறகு சொல்றேன்.

"வீட்ல காஸ் வச்சிருந்தது தப்பா போச்சு."

"ஏன்?"

"அவ்வளவு பணம் எப்படி வந்ததுனு கேட்டு வருமானவரி அதிகாரிகள் வந்துட்டாங்க."

– பா. ஜெயக்குமார்



5) பரிசுக்குரியக் கேள்வியை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்.

– ரேவதிசங்கர், சென்னை.

தராசு:

கோபால், வீரப்பன் இருக்கற இடத்தப் பற்றிய ரகசியத்தைச் சொல்லட்டும். அப்புறம் இந்தக் கேள்விக்கு பதில் சொல்கிறேன். (இதெல்லாம் பத்திரிகை தர்மம் சார்.)

அரசு:

இன்னா வாதியாரே நம்ம கைலேயே டபாய்க்கிறியே. இருந்தாலும் கேட்டுக்கினுங்கறதுக்காக சொல்றேன். காதக் கொண்டா. 'எனக்கே தெரியாதுப்பா.'

ஹாய் மதன்:

சோழர் காலத்துப் பனைவோலை முறை தான். (இந்த மேட்டர் ஆசிரியர் காதுக்குப் போகாம பார்த்துக்கங்க. இல்லன்னா அய்யா அம்பேல்.)

பாக்யராஜ்:

நம்ம டேஸ்ட்டுக்கு 'அந்த மாதிரி' பதில் சொல்லக் கூடியதா வர்ற கேள்விக்குத் தாங்க முன்னுரிமை.

துக்ளக்:

அதெல்லாம் உங்கள்ட்ட சொல்ல எனக்கு நேரமில்ல. அவசியமுமில்ல. அது என்னோட வேலையும் இல்ல. நான் திரும்பவும் போடற நாடகத்தத் தொடர்ந்து பார்க்கிறீங்கன்னா உங்க கேள்விக்கே பரிசுக் கொடுத்துடலாம்.

கற்பனை: **அபிலை முருகன்**

கங்காதரன்

இலேசாக தலை வலிப்பது போல உணர்ந்தேன். எழுதிக் கொண்டிருந்த ப்ரோகிராம் மீதிருந்த ஆர்வம் குறைந்து விட்டிருந்தது. நீலநிற பின்னணியில் கறுப்பு எழுத்துக்கள் மின்னிக் கொண்டிருந்த கம்ப்யூட்டர் திரையை வெறித்துப் பார்த்த பார்வையில் கூட இயந்திரத்தனம் இருந்ததாய்த் தோன்றியது.

பக்கத்து நாற்காலியின் சக்கர ஓசை கேட்டது.

சுரேஷ். மணி ஒன்றரை என்பது ஊர்ஜிதமாகிவிட்டது. அவனைப் பார்க்கையில் வெறுப்பும் பொறாமையும் மேலிடுகிறது. எப்படி வாழ முடிகிறது இந்த மனிதர்களால் – கொஞ்சம்கூட மனித குணம் இல்லாமல்? காலையில் பத்து மணி மதியம் ஒன்றரை. மாலை மூன்று மணி இடைவேளை இல்லையெனில் இந்த கம்பெனியில் அசையும் பொருள் எதுவும், யாரும் இருக்க வாய்ப்பில்லை.



ஆனால் நிர்வாகத்தின் தேவையெல்லாம் கம்ப்யூட்டரை செயல்பட வைக்குமளவு சிந்திக்கத் தெரிந்த சில மனிதர்கள். இத்தகைய நடத்தைதான் அவர்களை குளிர்விக்கும். இன்க்ரிமென்ட், ப்ரொமோஷன் வாங்கித் தரும்.

எழுதிக் கொண்டிருந்தத் திரையை கீழிறக்கி விட்டேன். ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாலும், கைகள் இன்டர்நெட்டைப் பிடித்து முகவரி தந்து, ரகசிய பெயர் அறிவித்துப் போக வேண்டிய இணைப்பைத் தெரிவித்துக் கொண்டிருந்தது.

இயந்திரத்தனம்!

அந்த இணைப்பு வர கொஞ்சம் தாமதமாகியது. அது என்னவோ தெரியவில்லை, தினமும் ஒரு தடவையாவது அந்தப் பக்கத்துக்குப் போய் வந்து விடுகிறேன். அதுவும் இது போன்ற வெறுமை தட்டுகிற நேரங்களில்.

யாரோ ஒருவரின் அல்லது ஒருத்தியின் தனிப்பட்டப் பக்கம் அது. மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட ஒரு வீட்டின் வரவேற்பறை போல அந்த பக்கத்தில் இனம் புரியாத உயிர்ப்பு இருந்தது.

டைரிக் குறிப்புகள், படித்த புத்தகங்கள்

போட்டிக்கதை - 9

குறித்த மதிப்பீடுகள், சில அரசியல் ஆய்வுகள் என பல விஷயங்கள் தினப்படி நிலவரங்களைப் பேசிக் கொண்டிருந்தன. எல்லாவற்றிலும் உளவியல் ரீதியான உணர்வுபூர்வமான அணுகுமுறை.

'சிந்தனைகள்' என்ற தலைப்பில் தினம் தினம் ஒரு பொன்மொழி அன்றைய தேதியோடு நம்மை வரவேற்கும். கிட்டத்தட்ட ஆறு மாத சொந்தம்.

எப்போதோ ஒருமுறை நான் தேடிய இணைப்புக்கு முகவரி தருகையில், ஒரு புள்ளி அதிகமாக விழுந்துவிட இந்தப் பக்கம் விரிந்தது. ரொம்பத் தற்செயலான விஷயம். இவ்வளவு தூரம் ஈர்த்திருக்கிறது.



நாற்காலியின் நுனிக்கு வந்து பார்த்தேன்.

அன்றைய தேதிக்குச் சிந்தனைகள் எதுவும் இல்லை. கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. வேறெதுவும் அலசப்பிடிக்காத நிலையில் கம்ப்யூட்டரை ஓய்வெடுக்க கட்டளையிட்டுக் கொண்டேயிருக்கும் போது–

திடீரென ஒரு மின்னல்!

கடந்த நாலைந்து நாளாகவே சிந்தனைகள் எதுவும் பார்த்த ஞாபகம் இல்லையே என்ற சந்தேகம் வலுத்தது. அவசர அவசரமாக மீண்டும் இணைத்தேன். நாலைந்து நாட்கள் அல்ல – எட்டு நாளாக எந்த சிந்தனையும் எழுதப்படவில்லை என்ற உண்மை உறைத்தது.

எட்டு நாளாகவா எருமை மாட்டுத் தோலோடு இருந்திருக்கிறோம்.

மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து அந்தப் பக்கத்தின் வேறு சில விஷயங்களை ஆராய்ந்தபோது அரை மாதமாக அந்தப் பக்கத்தில் எதுவும் செய்யப்பட்டதாக தெரியவில்லை. ஏனென்று சிந்திக்கத் தெரியவில்லை.

ஒருவேளை சம்பந்தப்பட்ட நபர் வீட்டில் இல்லாமல் இருக்கலாம் என்ற போதிலும் பதினைந்து நாட்களுக்குள் எந்த இன்டர்நெட் சென்டரிலாவது போய் இதைத் தொடர்ந்திருக்கலாம் என்று தோன்றியது.

ஆனால் என்ன விதமான பிரச்னையோ!

சில விஷயங்கள் எதனால் நம்மைக் கவருகின்றன என்று காரணம் சொல்ல முடிவதில்லை. அற்ப விஷயமாக இருந்தாலும்கூட அவற்றின் இழப்பு ரொம்பவே பாதித்து விடுகிறது.

அதைப் போலத்தான் ஆகிவிட்டது அந்த இணையதளமும்.

பத்து நாள் முடிந்தது. பதினைந்து நாள் ஆயிற்று. எப்போது இணைத்துப் பார்த்

இணையதளம்

தாலும் பூட்டிய வீட்டைத் திறப்பது மாதிரி அப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் இருந்தது. அந்த ஏமாற்றத்தை எதனாலோ தாங்க முடியவில்லை. எதிர்பார்ப்பினை குறைத்துக் கொள்ளவும் முடியவில்லை.

ஆனால் இப்போது மூன்று நாட்களாக அந்தப் பக்கத்தை பற்றிய எதிர்பார்ப்பு போய் சிந்தனை அதிகமாயிற்று.

ஒருவேளை அவருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு விட்டதோ என்ற அச்சம் எழுந்தது. இரவில் நெடு நேரம் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தபோது திடுப்பென ஒரு சிந்தனை.



"மனைவிக்கு லெட்டர் எழுதறீங்களா?"
"எப்படி தெரிந்தது?"
"கை நடுங்குதே!"

— அம்பை தேவா

ஒருகால் அவர் இறந்து போயிருந்தால்...

நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது. இலேசாக நெற்றியில் வியர்க்க ஆரம்பித்தது. ஜன்னலின் விளிம்பு வரை நீண்டிருந்த இருளும், மெதுவாக உரசிச் செல்கிற காற்றும் திகிலைக் கிளப்பின.

போர்வையையிழுத்துப் போர்த்திக் கண் மூடிக்கொண்டேன். 'சேச்சே அப்படியெல்லாம் நடந்திருக்க வாய்ப்பில்லை' என எனக்குள்ளேயே சமாதானம் ஓடியது.

இருந்தபோதும் அதன் பிறகு மனது கனத்தது போலவே இருந்தது தூங்கும்வரை. மிக அநாவசியமாய், அந்தப் பக்கத்தில் படித்த சில நல்ல வரிகள், நெற்றியிலறைந்த கவிதைகள் எல்லாம் நினைவில் ஓடின.

கனவில்கூட நீல நிற திரையும், என்னைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருந்த இணைய முகவரி எழுத்துக்களுமாய், மனசை அலைக்கழித்தது.

காலையில் எழுகின்ற அவசரத்திற்கும் உடைகள் புகுந்து வண்டியை விரட்டும் பரபரப்பிற்கும் இடையில், குளிக்கும்போது சிந்திக்கக் கொஞ்ச நேரம் கிடைத்தது. எனக்கே மிகவும் ஆச்சர்யமாய் இருந்தது, கடந்த இரவின் சிந்தனைகள்.

எதனால் எனக்கு இத்தனை மனப் போராட்டம்? அப்படியே அந்த நபர் இறந்திருந்தாலும், முகம் தெரியாத, பெயர் தெரியாத யாரோ ஒருவரின் மரணம் ஏன் என்னைக் கலக்கத்திற்குள்ளாக்க வேண்டும்?

இதனால் எனக்கும் அவருக்கும் ஒரு உறவு ஏற்பட்டுவிட்டதாக முழுமையாக ஒப்புக்கொள்ள மனம் வரவில்லை. ஆனால் இரவின் சிந்தனைகளை உணர்வுபூர்வமாக அணுகினால் அதை மறுக்கவும் முடியவில்லை.

அன்று ஒரு தீர்மானத்தோடுதான் அந்தப் பக்கத்தினுள் நுழைந்தேன். வழக்கம் போல் மாற்றமின்றி கிடந்தது. இனமும் யாரோ இசைத்துக் கேட்ட வீணையை, மூடி போட்டுப் பார்ப்பது போல இருந்தது.

அந்த இணைப்பின் பல பகுதிகளில் நுழைந்து வெளியேறி கடைசியாக ஈமெயிலில் முகவரியை மட்டும் வெட்டி எடுத்து வந்து என் கோப்பில் ஒட்டிக் கொண்டேன்.

அன்று சாயங்காலம் வரை கடிதம் எழுதலாமா வேண்டாமா என்கிற குழப்பம் இருந்ததால் நாலரை மணிக்கு எந்த யோசனையும் இல்லாமல் வெளியேறி விட்டேன்.

என்னதான் இருந்தாலும் திடுப்பென ஒரு கடிதம் எழுத சற்று யோசனையாகவும், சங்கோஜமாகவும் இருந்தது. உன் பக்கம் நல்லாயிருக்கிறது என பாராட்டலாம். நான் அதை ரசிப்பதற்காக நீ தொடர்ந்து எழுது என கட்டளை பிறப்பிக்க ஏனோ மனம் ஒப்பவில்லை.

மேலும் ஒரு மனிதன் தனக்கு அத்தகைய கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதை விரும்பவே மாட்டான். இது ஒரு புறம் இருக்க, ஏதேனும் வருந்தத்தக்க நிகழ்ச்சி நடந்திருந்தால் என் எழுத்துக்கள் அவரைப் புண்படுத்தி விடக் கூடாதே என்ற எண்ணமும் இருந்

தது.

எனவே என்ன எழுதுவது எப்படி எழுதுவது என ஒன்றுமே புரியவில்லை. 'ஏன் எழுத வேண்டும்? நமக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்' என எங்கேயோ என்னுள் ஒரு குரல் முளைத்தபோது வேறேதோ ஒன்று அதனை அடியோடு நசுக்கி விட்டது.

கடைசியில் எழுதிவிட்டேன்.

'உங்கள் பக்கம் மிகவும் ரசனைக்குரியதாக இருக்கிறது. நல்ல விஷயங்களை தினமும் படிக்கிற சந்தோஷமே அலாதியானது. அதனைக் கடந்த பதினெட்டு தினங்களாக இழந்து வருகிறேன். உங்களின் உயிர்ப்புள்ள அந்தப் பணி மீண்டும் தொடருமா?' என்கிற ரீதியில் எழுதி மெயில் பண்ணினேன்.

ஒருவேளை அந்த 'அவர்' பெண்ணாயிருக்குமோ என்கிற எண்ணம் வெட்கத்தைக் கிழித்து வெளிவர எனது பெயருடன், கம்பெனி முகவரியையும், 'சாப்ட்வேர் என்ஜினியர்' என்கிற என் பதவியையும் குறித்து என் ஈமெயில் முகவரியுடன் அனுப்பினேன்.

நான்கு நாட்களாகப் பதிலும் இல்லை. அந்தப் பக்கத்தில் மாறுதலும் இல்லை.

ஐந்தாம் நாள் எனக்குக் கடிதம் வந்திருப்பதாகக் கம்ப்யூட்டர் அறிவித்தது. ஆர்வமுடன் பிரித்தேன். 'தங்கள் கடிதம் கிடைத்தது. நன்றி. அவ்வளவுதான் மனத்துள் ஏதோ ஒன்று கோலமிட அவசர அவசரமாக இணைய வலைக்குள் தாவி அந்தப் பக்கத்துக்கு முகவரி தந்து தவிப்புடன் காத்திருந்தேன்.

மெதுமெதுவாய் திரையில் என் இனிய தளம் விரிந்தது. அன்றைய சிந்தனை ஒளிர்ந்தது. என் கடிதத்திற்கு இத்தனை மதிப்பா என்று வியந்து கொண்டிருந்தேன்.

பக்கம் மெல்ல கரையக் கரைய அடியில் சிவப்பு எழுத்துக்கள் ஆக்கிரமித்திருந்தன.

"ஒரு விளக்கம்" என்று அடிக்கோடிட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து;

"இணைக்கப்பட்ட பல்வேறு தொடர்புகளிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதும் மோடம் என் ரோபோ மூளையில் சேதமடைந்திருந்ததால், இருபத்தி இரண்டு நாட்கள் இடைவெளியைப் பொறுக்கவும். நன்றி" என்றிருந்தது.

அதன் பிறகு நான் அந்தப் பக்கத்தைப் பார்ப்பதையே நிறுத்தி விட்டேன்!



'தி வோர்ல்டு ஈஸ் நாட் எனஃப்' என்று ஒரு ஜேம்ஸ்பாண்டு படம் வந்தது அல்லவா? அதில் ஜேம்ஸ்பாண்டாக நடித்தவர் பியர்ஸ் பிராஸ்னன். அவருக்கு ஒரே மாதிரியான ரோலில் நடிப்பது பிடிக்கவில்லையாம். எனவே அடுத்து வரும் படத்துடன் 007 ரோலுக்குக் குட்பை சொல்லி விட்டு, பலவிதமான ரோல்களிலும் நடிக்கப் போகிறார். சீன் கானரிக்குப் பின், ஜேம்ஸ்பாண்டு ரோலில் மிகச் சிறப்பாக நடிப்பவர் என்ற பெருமை. நாற்பத்தெட்டு வயது பிராஸ்னனுக்கு உண்டு.



ஃபாஷன் என்றால் பாரிஸ்தான்! தினம் தினம் அங்கே ஒரு புது ஐட்டம் அறிமுகமாகிக் கொண்டிருக்கிறது. அண்மையில் அங்கு நடந்த ஒரு 'ஃபேஷன்' ஷோவில் அறிமுகமான இலை வடிவ தொப்பி இது!

— எம்

தீபாவளி ரிலீஸ்!



• பிரியாத வரம் வேண்டும்

• வானவில்

தீபாவளி ரிலீசுக்கு ஒரு டஜன் படங்கள் ரெடியாயிருந்தாலும் ஒரு சில பிரச்னைகள்(?!) காரணமாக சில படங்கள் மட்டுமே தியேட்டருக்கு வர இருக்கின்றன. அந்தப் படங்கள் பற்றிய ட்ரெய்லர்:

தெனாலி

ஒவ்வொரு படத்திலும் ரிஸ்க் எடுக்கிறேன் பேர்வழி என்று சொல்லும் கமல் இந்தப் படத்தில், மனநிலை பாதிக்கப்பட்ட ஈழத் தமிழராக, மனநல மருத்துவர்



ஜெயராமிடம் சிகிச்சை பெற தமிழ் நாடு வருகிறாராம். வந்த இடத்தில் ஜெயராமின் தங்கை ஜோதிகாவை காதல் செய்ய, ஜெயராம் தடுக்க, ஜெயராம் மன நோயாளியாக மாறிவிடும் நிலை ஏற்பட, படம் முழுக்க ஒரே ஜாலி என்கிறார்கள். பாட்டுக்குப் பாட்டு அப்துல் ஹமீது தயவில் கமல் இலங்கைத் தமிழ் பேசி நடிக்கும் இந்தப் படத்தை ரஹ்மான் இசையில் கே.எஸ். ரவிகுமாரே தயாரித்திருக்கிறார்.



• ப்ரியமானவளே

சினேகிதியே

நீண்ட இடைவேளைக்குப் பிறகு ப்ரியதர்ஷன் தமிழில் இயக்கி இருக்கும் இந்தப் படத்தில், ஒரே ஒரு ஆண் பிணம், மற்ற படி பெண்கள் தான் படம் முழுக்க. ஜோதிகா அவரது தோழி ஷப்ராணி முகர்ஜி இருக்கும் கல்லூரி வளாகத்தில் ஒரு கொலையைச் செய்து விட்டு அதை மறைக்க படாத பாடு படுகிறார்களாம். வித்யாசாகரின் இசை பிரமாண்டமாய் இருப்பதால், தமிழில் ஒரு ரவுண்ட் வருவார் என்கிறார்கள். படத்தில் ஜோதிகாவும், ஷப்ராணியும் அதிர்ச்சி அடைவதைப் பார்த்தால், கொலை செய்யப்பட்ட ஆள் எழுந்து வருவது மாதிரியல்லவா தெரிகிறது.



• சினேகிதியே

ப்ரியமானவளே

'நினைத்தேன் வந்தாய்' ரீமேக்



• கண்ணுக்குக் கண்ணாக



படத்தைத் தமிழில் எடுத்திருக்கிறார் மலையாள இயக்குனர் கமல். ஷாலினியைக் காதலிக்கும் நண்பனுக்காக லவ் புரோக்கர் மாதிரி தூது போகிறார் ஷாலினியின் பக்கத்து பிளாட்டில் வசிக்கும் அவரது காலேஜ் மேட் பிரசாந்த். உண்மையில் ஷாலினி, பிரசாந்த் இருவருக்குமே உள்ளுக்குள் லவ். ஆனால் வெளியே சொல்லிவிட



• தெனாலி

படம் மூலம் வெற்றிக்கொடி நாட்டிய இயக்குனர் செல்வ பாரதி, நேரடி ஹலோ தமிழ் படத்தை இயக்க, அந்தபடம் ப்ளாப். நமக்கு ரீமேகதான் ராசியோ என்று ஹிந்தி, தெலுங்கு, கன்னட மொழிகளில் தூள்கிளப்பிய கதையை 'ப்ரியமானவளே' என்று படமாக எடுத்திருக்கிறார்கள். வெளி நாட்டு வாழ் இந்தியரான விஜய், தமிழ்ப் பண்பாட்டை காதலிக்கும் சிம்ரனை திருமணம் செய்து கொள்ள, சிம்ரனோ திடீரென்று வெளி நாட்டு கலாசாரத்தை விரும்ப, படம் முழுக்க ஊடல் கூடல்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு எஸ்.பி. பாலசுப்ரமண்யம் விஜய்யின் அப்பாவாக பெரிய பாத்திரம் ஏற்றிருக்கிறார். படத்தில் புடைவை, குங்குமப்பொட்டுதான் பிடிக்கும் என்கிறார் விஜய்.

பிரியாத வரம் வேண்டும்

மலையாளத்தில் தூள் கிளப்பிய 'நிறம்' பயம். இந்த நிலையில் ஷாலினிக்குத் திருமணம் நிச்சயமாகிவிட, க்ளைமாக்ஸ் என்ன என்பதுதான் கதை என்கிறார்கள். இதில் பெரிய கூத்து, ஷாலினி கொடுத்த கால்ஷீட் தீர்ந்து விட, இயக்குனரால் க்ளைமாக்ஸ் எடுக்க முடியவில்லை. தயாரிப்பாளர் கெஞ்சோ கெஞ்சென்று கெஞ்சியும் அஜித் கண்டிப்பாக மறுத்துவிட்டார். படத்தை ரிலீஸ் செய்தே தீருவேன் என்று சபதம் செய்த தயாரிப்பாளர், மலையாள ஒரிஜினல் படமான 'நிறத்'திலிருந்து க்ளைமாக்ஸ் காட்சியை வெட்டி ஒட்டி முடித்து விட்டார். அதிலும் நாயகி திருமதி ஷாலினி அஜித்தான். கால்ஷீட் இல்லாட்டி என்ன,

படம் தீபாவளிக்கு ரிலீஸ் பார்த்தியா என்கிறார் பிரசாந்த்.

சீனு

வல்லரசு படத்தில் வில்லனாக நடித்து கலக்கிய இயக்குனர் வாசு, சீனுபடத்தை இயக்கி அதில் சங்கித வித்வானாகவும் நடிக்கிறார். இவரது தம்பியாக கார்த்திக். அடாவடி தம்பி கார்த்திக் மீது வாசுவுக்குப் பாசம். ஆனால் திடீரென்று கார்த்திக்கும் வித்வானாகிவிட, விளைவு வாசு வில்லனாகி விடுகிறார். ஆஹா, வாசு பிராண்ட் கதையே கதை. நிச்சயமாக அடிதடி, பாட்டு, செண்டிமெண்ட் எல்லாம் உண்டு. வித்வான் குடும்பத்தில் பிறந்துவிட்டு வீணையைப் புறங்கையால் வாசிக்கலாமா என்று கார்த்திக்கிடம் கேட்கிறார் போலும் மாளவிகா.



• சீனு

வண்ணத் தமிழ்பாட்டு

இதுவும் வாசுவின் படைப்பு. பரம்பரை எதிரிகளான ஆனந்த்ராஜ், ராதாரவி இருவருக்கும் காதல்தான் எதிரி. இப்பேர்பட்ட இருவரது தங்கைகளும் காதலிக்கிறார்கள். காதலிக்கப்படுகிறவர் பிரபு. படத்தைப் பார்த்தால் பிரபு இரண்டு பேருக்குமே வாழ்க்கை கொடுப்பேன் என்று சொல்வதைப் போல இருக்கிறதே?

வானவில்

ஒரு வினோத கலாசார கிராமத்திற்கு ஆராய்ச்சி செய்யப் போகிறார்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான அர்ஜுன், பிரகாஷ்ராஜ், அபிராமி ஆகிய மூன்று பேரும். போன இடத்தில் ஊர் பெண்ணைத் தீ விபத்திலிருந்து அர்ஜுன் காப்பாற்ற, வழக்கப்படி அந்தப் பெண்ணையே திருமணம் செய்ய வேண்டும் என்று ஊர் சொல்ல, நாயகி அபிராமி வேறு காதலிக்க, ஒரு முக்கோண காதல், உதயம். முடிவில் ஊரைத் திருத்த அர்ஜுன் தனது புஜபலத்தைப் பயன்படுத்துவதாகக் கேள்வி. மலையாள நாயகி அபிராமியின் காதில் ரகசியம் சொல்வதைப் பார்த்தால், ஊர் பெண்ணுக்குப் பிரகாஷ் ராஜைக் கட்டி வைத்துவிட்டது போலல்லவா தெரிகிறது.

கண்ணுக்குக் கண்ணாக

இதுவும் ஒரு கலாசார கதை. தொப்புள் கொடியை மாலை மாதிரி கழுத்தில் சுற்றிக் கொண்டு பிறக்கும் குழந்தையால் தாய் மாமனுக்கு ஆபத்து என்ற காலாவதியான ஐதிகத்தைக் கண்டுபிடித்து உயிர் கொடுக்கிறார்களாம். மாமனாக முரளி. தங்கையாக நடிக்காதீர்கள் உங்கள் இமேஜ் போய் விடும் என்று எல்லோரும் தடுத்தும் தைரியமாக நடித்து தமிழ்சினிமாவிற்குத் தேவயானி சேவை செய்திருக்கிறார் என்கிறார்கள். படத்தின் தயாரிப்பாளர் ஹென்றி. அப்போ வெற்றிப்படம்தான் என்கிறீர்களா? மாலைசுத்தி பிறந்தாலும் உன் கழுத்தில் நான்தான் மாலையிடுவேன் என்று முரளி சொன்னதும், தேவயானி எப்படி அசடு வழிகிறார் பாருங்கள்.

இவைதவிர, சத்யராஜின் குங்குமப் பொட்டுக் கவுண்டர், கருவேலம்பூக்கள், பாளையத்து அம்மன் ஆகிய படங்களும் உண்டு.

தொகுப்பு: **விஷுவல்தாசன்**

அழுகை உண்டு; கண்ணீர் இல்லை!

டான்ஸி வழக்குத் தீர்ப்பு குறித்து உண்மையைச் சொன்ன ஒரே அரசியல்வாதி ஈ.வி.கே.எஸ். இளங்கோவனாகத்தான் இருக்க முடியும்.

"இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து உருவாகி



• கோர்ட்டிலிருந்து...

யிருக்கும் சூழல் கொஞ்சம் கவலை தரத்தக்கதுதான்'' என்றார் நம்மிடம்.

"நீதிமன்றத் தீர்ப்புகளைக் காட்டி மக்கள் மன்றத்தில் நமக்கிருக்கும் செல்வாக்கை அழிக்க நினைக்கும் எதிரிகள் தோல்வியடைவது உறுதி!'' என்று ஜெயலலிதா ஆவேச அறிக்கை விட்ட நிலையிலும் இளங்கோவன் இவ்வாறு பேசினார் என்பதுதான் குறிப்பிடத்தக்கது.

தலைவியின் தன்னம்பிக்கையை மிஞ்சும் வகையில் அமைந்தது ஒரு முன்னாள் அ.தி.மு.க. அமைச்சரின் கருத்து:

"அரசியலில் நீதி நேர்மையென்றதெல்லாம் சரிதான்... ஆனால் யார் யாரைத் தண்டிப்பது? எங்களைத் தண்டிக்கிறாயே... உன் கதை என்ன? எங்கள் தலைவியைத் தேர்தலில் நிற்க விடாமல் முடக்க நினைக்கிறார் கருணாநிதி... நிச்சயமாக அது நடக்காது. சுப்ரீம் கோர்ட் அனுமதி பெற்று தேர்தலில் அவர் நிற்பார். கருணாநிதியின் கனவுக்கோட்டை தூள் தூளாகும். தனி நீதிமன்றத் தீர்ப்பு, சட்டம், தர்மம், நியாயம் இதெல்லாம் தாம்பரத்தைத் தாண்டினால் மதிப்பிழந்து விடும். தமிழ்நாட்டு அரசியலே அனுதாபத்தை




• அ.தி.மு.க. அலுவலகம் இருக்கும் லாயிட்ஸ் ரோட்டில்...

மையமாகக் கொண்டதுதான். அதனால் நாங்கள் கவலைப்பட வேண்டாம். உண்மையில், அம்மாவுக்கு ஜெயில் தண்டனை கொடுத்



• கருணாநிதி கொடும்பாவி...



இருந்தால் தேர்தலில் வெற்றி வாய்ப்பு இன்னும் பிரகாசமாகியிருக்கும். 'பாரீர் பாரீர் பழி வாங்கலைப் பாரீர்'னு அம்மா ஜெயில்ல இருப்பது போன்ற போஸ்டர் அடித்து ஊரெல்லாம் ஒட்டியிருக்க மாட்டோமா?" என்றார் அந்த முன்னாள் அமைச்சர்!

இந்த அ.தி.மு.க பிராண்ட் அரசியல் பண்பாட்டை நிரூபிக்கும் விதமாகத்தான் தீர்ப்பு தினத்தில் தொண்டர்களும் நடந்து கொண்டார்கள். தனிநீதிமன்ற வாசலில் நின்ற ஜெ. ஆதரவு கூட்டம் நிச்சயமாக சாதகமான தீர்ப்புதான் என்ற முடிவுடனேயே வந்திருக்க, அதற்கு மாறான செய்தி வெளியானதுமே அரசுக்கு எதிரான கோஷத்தை ஆரம்பித்துவிட்டனர்.

'வெற்றி'யைக் கொண்டாட பட்டாசுகள் வாங்கி வந்திருந்த தொண்டர் ஒருவர் அதைச் சாக்கடையில் வீசி எறிந்தார்.



• இளங்கோவன்

ஜெ. ஜாமீன் கொடுத்துவிட்டு வெளியே வந்தபோது 'அம்மா! அம்மா!' என்று கூட்டம் கதறியழுதது; ஆனால் ஒருத்தர் கண்ணிலாவது கண்ணீர் வர வேண்டுமே! மருந்துக்கும் இல்லை!

முதல்வர் வீட்டருகே அவரது கொடும்பாவி எரிக்க முயன்றும் சாலை மறியல் செய்தும் திருப்திப்பட்டுக் கொண்டனர் தொண்டர்கள்.



• நல்லகண்ணு



• ஜெயலலிதா

ஆனால் காவல் துறை முன்னெச்சரிக்கையுடன் இருந்ததால் அசம்பாவிதங்கள் ஏதுமில்லை.



அ.தி.மு.க அலுவலகத்தினருகே கொத்துக் கொத்தாகத் தொண்டர்கள். பக்கத்து எஸ்.டி.டி பூத்தில் கூட்டமான கூட்டம். ''நான் கைதாகப் போறேன். இரண்டு நாட்களுக்குத் தேடாதே!'' என்று ஊருக்குத் தகவல் சொல்லிக் கொண்டிருந்தனர் அவரவரும்.

''தலைவியை இரண்டு மணி நேரம் 'உள்ளே' வைச்சுப் பார்க்கட்டும். தமிழ்நாடே எரியும்!'' என்று ஒரு தொண்டர் கொதிக்க, ''ஏற்கெனவேதான் பதினைந்து - இருபது நாள் வைச்சுட்டாங்களே பிரதர்'' என்று இன்னொருவர் பதில் சொல்ல, விழுந்ததே அந்த உண்மை விளம்பிக்குத் தர்ம அடி!

இந்த 'தொண்டர் பலத்தை' ஜெ நம்பும் அளவுக்கு அவருடைய ஆதரவு கட்சிகள் நம்புவதற்கில்லை. அவர்கள் நம்பிக்கை முழுதும் இரட்டை இலை சின்னத்தின் பேரில்தான். 'எம்.ஜி.ஆர்' என்ற மந்திரச் சொல்லுடன் தொடர்புடைய இச்சின்னத்தின் தயவில் சட்டமன்றத்துள் நுழையத் தயாராயிருக்கும் பிரிந்து போன அ.தி.மு.க.வினருக்கு ஜெயலலிதா வலை போடுகிறார். தமக்கு இறுக்கமான ஒரு சூழல் ஏற்படும்போது அவர் வழக்கமாகச் செய்கிற காரியம்தான் இது.

டான்ஸி தீர்ப்பை வழங்கியது கோபாலபுரம்தான்; நீதிமன்றமல்ல என்பது போன்ற தோற்றத்தை உருவாக்கவே அ.தி.மு.க.வில் ஒரு தலைவர் பிரிவு இயங்குகிறது. ''இந்தக் கருணத்தில் யாரும் அம்மாவை விட்டுப் பிரிந்து போக மாட்டார்கள். வாழ்வோ, தாழ்வோ, அம்மாவோடுதான்'' என்கிறார்கள் அந்தப் பிரமுகர்கள்.

போயஸ்தோட்டத்திலோ பட்டத்து இளவரசன் தினகரன் அரியணை ஏறத் தயார்ப்படுத்தப்படுகிறார். கட்சிப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசி முடிவெடிக்கும் பொறுப்பு அவரிடம் விடப்பட்டுள்ளது. அவர்களும் தினகரனைத் தலைவராக, தயங்காமல் ஏற்றுக் கொண்டு விட்டனர்.

குப்புற விழுந்தாலும் மீசையைத் தட்டி விடத் தயாராயில்லை த.மா.காவினர். ''இது இறுதித் தீர்ப்பு அல்ல'' என்பதற்கு மேலாக எதுவும் த.மா.கா தரப்பிலிருந்து அதிகார பூர்வமாகக் கூறப்படவில்லை. ஆனால், 'அன் அஃபிஷியல்' ஆக நம்மிடம் பேசிய ஒரு த.மா.கா மேல்மட்டத் தலைவர், ''ஜெயலலிதாவுக்கு அரசியலில் அடித்துப் பேசும் சக்தி இப்போது இல்லை... இனி எங்களை அனுசரித்துப் போக வேண்டிய கட்டாயம் அவருக்கு'' என்று சொன்னார்.

கூட்டணி ஆட்சியாவது மண்ணாவது என்கிற ரீதியில் மூப்பனாரை வைத்துக் கொண்டே மூக்குடைத்து ஜெ. பேசியதையும் தங்கள் தலைவர் பொறுத்துக் கொண்டது இப்படியொரு சூழலை எதிர்பார்த்துதான் என்றும் எம்.ஜி.ஆர் வோட்டு வங்கியால் த.மா.கா ஆதாயம் பெறும் என்றும்கூட தெரிவித்தார் அந்த 'அன் அஃபிஷியல்' பேச்சாளர். ஜெயலலிதா இல்லாத நிலையில், அணியின் கம்பீரமான தலைவராக இருக்கக் கூடியவர் மூப்பனார்தான். ''காலம் கனிகிற போது அவர் கைக்குப் பொறுப்புகள் தாமே வந்து விடும்'' என்று நம்பிக்கை தெரிவித்தார்.

''மூன்றாவது அணிக்கு மாறுங்கள் என்று சொல்வோர் எங்களைச் செல்லாக் காசாக்குவதற்கு ஆசைப்படுபவர்கள்தான்''

என்பது கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் நல்லகண்ணுவின் வாதம். மதச் சார்பற்ற கூட்டணியை விட மாட்டார்களாம். "அ.தி.மு.க கூட்டணியில் தொடர்ந்து நீடிப்போம். ஜெயலலிதா யாரை வேண்டுமானாலும் முன்னிலைப்படுத்தட்டும். அது பற்றி எங்களுக்குக் கவலையில்லை'' என்கிறார்கள் மார்க்ஸிஸ்டுகள்.

ஆனால் ஒரு சில மார்க்சிஸ்ட் தலைவர்கள் 'கருணாநிதி பொய் வழக்கு போட்டுள்ளார்' என்ற 'ஜெ'வின் வாதத்தை ஒப்புக் கொள்வதில்லை. "அரசியல் சுத்தமாக்கப் படத்தான் வேண்டும்'' என்று தனிப்பட்ட முறையில் நம்முடன் பேசும்போது கூறுகிறார்கள்.

"ஏதாவது அதிசயம் நடந்து பா.ஜ.க.வுடனான உறவை தி.மு.க முறித்துக் கொண்டால் மீண்டும் தி.மு.க.வுடன் நாங்கள் இணைவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்'' என்று நப்பாசைப்பட்டார் ஒரு த.மா.கா பிரமுகர்.

"இந்தத் தீர்ப்புக்கு அப்புறம் ஜெ.யின் வோட்டு வங்கி வேண்டுமானாலும் பாதிக்கப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் அ.தி.மு.க.வுடன் தொடர்ந்து இணைந்து நின்றால் நடுநிலையாளர்களிடம் எங்களுக்குள்ள செல்வாக்கு சரியுமே'' என்றார் அவர். த.மா.கா – காங்கிரஸ் – திருநாவுக்கரசு கட்சி, எஸ்.டி.எஸ்., ஏ.சி. சண்முகம், கண்ணப்பன் தலைமையில் உள்ள இயக்கங்கள், விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லிம் லீக் பிரிவுகள் ஆகியவற்றைக் கொண்ட மூன்றாவது அணி அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து த.மா.காவாலும் காங்கிரஸாலும் பரப்பப்பட்டு வருகிறது. திருநாவுக்கரசு, எஸ்.டி.எஸ், கண்ணப்பன், ஏ.சி. சண்முகம் ஆகியவர்களை இணைத்துக் கொண்டால் எம்.ஜி.ஆர் வோட்டு வங்கியை ஓரளவுக்காவது கவர முடியும் என்று கருதுகிறது த.மா.கா.

"மூன்றாவது அணியின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் சோனியாகாந்தியிடம் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. மூப்பனார் முயற்சி செய்தால் மூன்றாவது அணி சாத்தியம்... ஜெ. ஓரங்கட்டப் படுவார்'' என்றார் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர்.

'இதற்கிடையில் நீதிமன்றத் தீர்ப்பினால் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தி மெத்தனமாகிவிட வேண்டாம்' என்று தி.மு.க தலைமை எச்சரிக்கை செய்துள்ளது தனது தொண்டர்களுக்கு.

அ.தி.மு.க, பா.ம.க.வுக்கு மிகத் தீவிரமாக வலை வீசக் கூடும் என்பதும் அதனால் தங்கள் அணி பலவீனப்பட்டுப் போக வாய்ப்பிருக்கிறது என்பதும்தான் இப்போது தி.மு.க வின் கவலை.

— ப்ரியன், ஜெயந்தன்

படங்கள்: ராஜன், சாய்வர்ஷா

வாழ்ந்தாலும்; வீழ்ந்தாலும்...!

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலக வளாகத்தைச் சமீபத்தில் திறந்து வைத்தார் முதல்வர். அன்று திருவள்ளூரில் நல்ல மழை. மக்கள் உட்காரும் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கூரை பேருக்கு அமைந்திருந்தபடியால் மழை நேராக உள்ளே இறங்கியது. மக்களும், அதிகாரிகளும், பத்திரிகையாளர்களும் பி.வி.சி நாற்காலியை தூக்கி தலை மேல் வைத்துக் கொள்ள வேண்டியதாகி விட்டது. "நான் இந்த வளாகத்துக்கு அடிக்கல் நாட்ட வந்த போதும் மழை பெய்தது; திறக்கும் இந்த சமயத்திலும் மழை பெய்கிறது. எந்தப் பகுதியாவது மழை தேவையென்றால் என்னைக் கூப்பிடுங்கள்' என்று சொல்லி கலகலப்பூட்டினார் முதல்வர். தொடர்ந்து பேசும்போது "நான் பேருரை நிகழ்த்துவேன் என்று கூறினார்கள். எனக்கு உடல்நலம் சரியில்லாததால் பேருக்கு தான் உரை நிகழ்த்தப் போகிறேன்'' என்றார்.



இந்த விழாவில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் வேணு மைக்கில் சட, சட வென்று வந்து, "வாழ்ந்தாலும் கலைஞரோடு வாழ்வோம்; வீழ்ந்தாலும் கலைஞரோடு வீழ்வோம்'' என்று சொல்லிவிட்டு ஓடியது கொஞ்சம் தமாஷாகவே இருந்தது. விழா முடிந்து மேடையில் இருந்து இறங்கும்போது ஆற்காட்டார் கிட்டத்தட்ட முதல்வரை தூக்கிக் கொண்டு வருவது போலவே அவரை இறக்கி விட்டார். அன்று முதல்வர் மிகவும் சோர்ந்து போய்த்தான் இருந்தார். ஏனோ?

— கௌசி

படம்: சாம்சன்

யுவராஜா!

அது ஜூனியர் உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி. இந்திய அணி அரையிறுதி ஆட்டத்தில் நுழைய வேண்டுமானால் வலிமையான ஆஸ்திரேலிய அணியை வென்றாக வேண்டிய கட்டாயம். முதலில் ஆடிய இந்திய அணியை இருநூற்றி அறுபத்தைந்து ரன்களுக்குள் சுருட்டி விட நினைத்தது ஆஸி அணி. அப்போதுதான் ஆறாவது பேட்ஸ்மேனாக அந்த வாலிபர் மட்டையுடன் களமிறங்கினார். "இவன் தானே" என்கிற மிதப்பில் ஆஸி. பந்து வீச்சாளர்கள் பந்து வீச, பவுண்டரிகளும் சிக்ஸர்களுமாகக் காற்றைக் கிழித்துப் பறந்தன





இருபது பந்துகளில் ஐம்பது ரன்!

கடந்த ஜனவரி மாதம் இலங்கையில் நடந்த இந்தப் போட்டியில் ஆஸியை 'பேக்' பண்ணி அனுப்பியதால்தான் ஜூனியர் உலகக் கோப்பை இந்தியக் கரங்களில் தவழ முடிந்தது. இந்தப் போட்டியில் பலரின் புருவங்களை உயர வைத்த அந்த வாலிபர் யுவராஜ் சிங்!

நைரோபியில் நடக்கும் நாக்அவுட் போட்டியில் ஆஸியைக் கலங்கடித்த யுவராஜுக்கு இது ஒன்றும் புதிதில்லை. அது ஜூனியர். இது சீனியர். இருந்தாலும் பந்து வீச்சுப் புலிகளான மாக்ராத், பிரெட்லீயின் பந்துகளைப் பதற்றமில்லாமல் பதம் பார்த்தது எப்படி?

"ஆஸி. அணியை எதிர்த்து ஆடும் வாய்ப்பு கிடைத்ததில் கொஞ்சமல்ல நிறையவே மகிழ்ச்சிதான். முதல் இரண்டு பந்துகளில் கொஞ்சம் பதற்றமாகத்தான் இருந்தது. பிறகு தான் தைரியம் வந்தது" என்கிறார் இந்தப் பதினைந்து வயது பஞ்சாப் பாய்!

இவரின் அப்பா யோக்ராஜ் சிங் இந்திய அணிக்காக 1981ல் நியூஸிலாந்துக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் மட்டும் ஆடியிருக்கிறார்.

"ஆரம்பத்தில் எனக்குக் கிரிக்கெட் மீது விருப்பமில்லை. அப்பாதான் கிரிக்கெட் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பார். ஒருமுறை ஒரு கிரிக்கெட் வீரர், 'இவன் என்னத்த கிரிக்கெட் ஆடப் போறான்?' என்று சொன்னதுதான் என் மனத்தை இறுக்கிய முதல் வார்த்தை. பிறகு முழு கவனமும் கிரிக்கெட் மீதுதான். ஜூனியர் உலகக் கோப்பைக்குத் தேர்வு செய்யப்பட்டதை ஒரு சவாலாக நினைத்துக்கொண்டேன். என் திறமையையும் காண்பித்தேன்! அதுதான் எனக்கு 'மேன் ஆப் தி சீரிஸ்' வாங்கித் தந்தது" என்று சொல்லும் யுவராஜ் சிறந்த ஃபீல்டரும்கூட.

"பேட்டிங், பீல்டிங் மட்டும்தான் எனது குறிக்கோள். 'இவன் சுத்த சோம்பேறி. பீல்டிங்கில ஒட்டை... இவனையெல்லாம் வைத்து என்ன செய்ய' என்று ஒரு சீனியர் ஆட்டக்காரர் சொன்னது மனவேதனையைத் தந்தது. பிறகுதான் பீல்டிங்கிலும் கவனம் செலுத்தினேன். சில அடிகளும், அதனால் ஏற்பட்ட காயங்களும்தான் நான் வளர காரணமாக இருந்ததாக நினைக்கிறேன். இன்னும் நிறைய காலம் இருக்கிறதே!"

ஆமாம். அவர் சொல்வதும் நியாயம்தான். இந்திய அணிக்கு ஜடேஜா, அஸாருக்குப் பிறகு நல்ல ஆட்டக்காரர்கள் கிடைப்பார்களா? என்று முணுமுணுத்த வாய்களுக்கு இப்போது பூட்டு! அதனால்தான் ஆஸி. கேப்டன் ஸ்டீவ் வாஹ் சொன்னார்: "இந்தியாவில் நல்ல இளைய ஆட்டக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களின் திறமையை வளர்க்க வேண்டுமென்று!"

இந்தியக் கிரிக்கெட் அணியிலுள்ள பாலிடிக்ஸை கொஞ்சம் ஓரங்கட்டிவிட்டு திறமையானவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் இன்னும் பல யுவராஜாக்கள் வரலாம்!

— செ. ஏக்நாத்

''மதுரையில் அழகிரி தாண்டவம் நடந்து முடிந்த நேரத்தில் அவருக்கு எதிராக ஒரு சூடான அறிக்கை வெளியிட்டு மறுநாளே சைலண்டாக்கப்பட்டவர் திருச்சி சிவா!'' என்றனர் சில உடன்பிறப்புகள். அந்த அறிக்கை பற்றிக் கேட்கலாமென்று அவரைச் சந்தித்தால் அந்த அறிக்கைக்கும் தமக்கும் சம்பந்தமேயில்லை என்று சத்தியம் பண்ணாத குறையாகச் சொன்னார் சிவா!

கே: அரசியலில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி ஆற்றுவதற்கும், நியமனம் செய்யப்பட்டு பணி புரிவதற்கும் வேறுபாடுகள்...

ப: உண்டு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர் எந்த அளவுக்குத் தன்னுடைய தொகுதிக்குப் பணியாற்ற கடமைப்பட்டிருக்கிறாரோ அதேபோல நான் பிரதிநிதியாக இருக்கிற மாநிலத்துக்கு முழுமையாகப் பணி புரிய வேண்டும் என்கிற உணர்வு எனக்குள் இருக்கின்றது.



''சாதிக் கட்சிகளால் கலவரம்தான்!''

– திருச்சி சிவா பேட்டி

கே: வெளியில் இருந்தபோது, பதவியில் இருந்தவர்களைக் கடுமையான விமர்சனமும், நையாண்டியும் செய்து வந்துள்ள பத்திரிகையாசிரியர் 'சோ'வின் மாநிலங்களவை பேச்சுகள், செயல்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளன...?

ப: பொதுவாக, எங்களைப் போல் அவர் தொடர்ச்சியாக எல்லா நாட்களிலும் அவை நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை. ஓரிரு நாட்கள் வருகிறபோதும் முழுமையாக அவையில் இருப்பது இல்லை. கலந்துகொண்ட விவாதங்களிலும் மனதில் பதிகிற வகையில் கருத்துகள் இடம் பெறவில்லை. இதற்கு அவர் தன் வகையில் ஏதாவது சமாதானம் சொல்லலாம். அவை நிகழ்ச்சிகளின் முறைகளை அவர் குறை கூறலாம். அதனால் அதில் நாட்டமில்லை என்றுகூட பேசியிருக்கிறார். எழுதியிருக்கிறார். சிக்கல்கள் அல்லது குறைகளுக்கு மத்தியிலும் இயங்கி ஒரு தனித்தன்மையையும் திறமையையும் நிலை நாட்ட முடியும்.

கே: தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக திருச்சி பாராளுமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடந்துவிடும் போலிருக்கிறது. அதற்கடுத்து நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலுக்கு இது ஒரு ஒத்திகையாக அமையுமா...

ப: இடைத்தேர்தல்களை ஆளுங்கட்சியைக் குறித்து மக்கள் கொண்டிருக்கிற கருத்துகளின் அளவுகோலாக சொல்வதுண்டு. ஆனால், எல்லா நேரங்களிலும் அது அப்படி அமைந்து விடுவது இல்லை.

கே: ஐந்தாண்டு கால ஆட்சியை தி.மு.க நிறைவு செய்யப் போகும் தருணம் இது.



"நீ என்னை தெய்வமா மதிக்கிறது உண்மையா இருக்கலாம்: அதுக்காக வீட்டில செய்யற ஸ்வீட்டையெல்லாம் என் முன்னால காட்டிட்டு நீயே சாப்பிட்டுடணுமா என்ன?"

— வடுவூர் சிவ. முரளி

தி.மு.க அரசின் பலம்? பலவீனம்...?

ப: பலம் கலைஞர். முதல்வர் கலைஞரின் திறமை, அயரா உழைப்பு. இந்தியாவின் முன்னோடி மாநிலமாக முடி இருத்தும் தொழிலாளர் முதல் கட்டடத் தொழிலாளர் வரை உள்ள 54 பிரிவினரை உள்ளடக்கி அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கென வாரியங்கள் அமைத்தது. கரும்பலகைகள் கூட இல்லாத பள்ளிகள் என்ற நிலையை மாற்றி கணினி இல்லாத பள்ளிகளே இல்லை என்கிற நிலையைத் தந்து இன்றைய மாணவர்களை நாளைய உலகிற்குத் தீர்க்கதரிசனத்தோடு தொலைநோக்குப் பார்வையோடு தயார் செய்கின்ற ஒரு பொறுப்புமிக்க அரசாகத் திகழ்கின்றது. அரசின் பல நலத் திட்டங்களின் பயன்களையும் மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல எங்களில் யார் தவறினாலும் அது மட்டுமே பலவீனம்!

கே: அ.தி.மு.க தலைவி குறித்து தீர்ப்பு வெளியானதும் தர்மபுரியில் பஸ் எரிப்பு; பா.ம.க தலைவர் தாக்கப்பட்டதாகத் தகவல் பரவியதும் கடையடைப்பு, பஸ் எரிப்பு. முதல்வர் மகனை கட்சியில் யாரும் தொடர்பு கொள்ளக் கூடாது என அறிக்கை வெளி வந்ததும் மதுரையில் கலவரம், பஸ் எரிப்பு போன்றவற்றால் பொதுச்சொத்துக்கள் சேதமடைவதையும் பொதுமக்கள் அசௌகர்யப்படுவதையும் அந்தந்த அரசியல் கட்சிகள் ஒரு சதவீதம்கூட உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லையே...

ப: பிற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உணர்ந்து கொண்டார்களோ இல்லையோ தெரியாது. ஆனால் மதுரை சம்பவத்தையடுத்து முரசொலியில் கலைஞர் கடிதம் வாயிலாக அழுத்தமாகக் கூறியுள்ளார். கலைஞரோ, கழகமோ என்றைக்கும் வன்முறையை, எந்த வடிவத்திலும் அனுமதித்ததில்லை.

கே: புற்றீசலெனக் கிளம்பி வரும் சாதிச் சங்கங்கள் தமிழகத்தில் அரசியல் கட்சிகளாக உருமாற்றம் பெற்று வருகின்றன. ஆரோக்கியமான அரசியலுக்கு நல்லதா இவை எல்லாம்...

ப: வேதனைக்கு உரியவை. களையப்பட வேண்டியவை.

கே: சாதிக் கட்சிகளால், அரசியல் கட்சிகளுக்கு எந்த வகையிலேனும் பாதிப்பு...

ப: பாதிப்பு எதுவும் நேர்ந்து விடாது. இந்த சாதிக்கட்சிகள் அந்தந்த சாதியினரிடையே உணர்வுகளைத் தூண்டிவிட்டு சாதிக் கலவரங்களில் கொண்டு போய் விட்டு விடும். எனக்கு ஏற்பட்ட அனுபவமே இதற்கு சான்று. ஒருமுறை கோவில்பட்டி, ராஜபாளையம் பகுதிகளில் சுற்றுப்பயணம். பயணத்தின்போது புகை வண்டி ஓரிடத்தில் நின்று விடுகிறது. கலவரச் சூழலால் அங்கேயே தங்க நேர்ந்து விடுகிறது. நானும், என்னுடன் அடுத்த பொறுப்பில் இருக்கும் இளைஞர் ஒருவரும் அதேப் பெட்டியில் ஒரே இலையில் சாப்பிட்டு, அன்புடன் பேசி நேரத்தைக் கடத்தினோம். அந்தப் பகுதியில் என்ன கலவரம் என்று விசாரித்தேன். முக்குலத்தோர்க்கும் தலித் பிரிவினர்க்கும் இடையே சண்டையாம். என்ன விநோதம் அது! அந்த இரண்டு பிரிவுகளைச் சேர்ந்த நாங்கள் இருவரும் ஒரே இலையில் இங்கே உணவருந்திக் கொண்டிருக்கிறோம். எங்களை அன்புடன், பாசத்துடன் இணைத்து வைத்தது எங்கள் இயக்கம்தானே என எண்ணிக் கொண்டேன் அப்போது.

கே: புதிய நீதிக் கட்சியால் தி.மு.க.வுக்கு இதுவரை கிடைத்து வந்த வாக்குகள் தற்போது குறைந்து போகும் என்றொரு கருத்து நிலவுகிறதே...

ப: நிச்சயமாக இல்லை. சாதி உணர்வுகளோ, வேறுபாடுகளோ எங்களிடம் கிடையாது. தி.மு.கவிற்கு வாக்களித்த எவரையும் சாதியின் பெயரால் எந்தவொரு சாதிக்கட்சிக்கும் இழுத்துக் கொண்டு போய் விட முடியாது. அன்றுமுதல் இன்றுவரை என்றில்லை. என்றைக்கும் தி.மு.கவில் எல்லோரும் அண்ணன் தம்பிகளாக சகோதர பாசத்துடன் இருந்து வருகிறார்கள். இதில் சாதிக்கட்சிகள் நுழைந்து வாக்குகளைத் தட்டிச் செல்ல வழியேதுமில்லை.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

பில்ராத்

மருத்துவமனை

வயிறு சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும்
ஓர் முழுமையான தீர்வு.

அல்ட்ராசானிக் முறையுடன் லேப்ராஸ் கோப்பி சிகிச்சை



மூல நோய்க்கு அறுவை இல்லா

Rx

சிறப்பு சிகிச்சைகள்:

- அல்சர்
- அபண்டிஸைடிஸ்
- கர்ப்பப்பை நோய்
- பித்தப்பை கற்கள்
- குடல் இறக்கம் (Hernia)
- ஓவரியில் கட்டி எடுத்தல்
- குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை

☆ லேசர் சிகிச்சை,

☆ கிரையோ சிகிச்சை

மற்றும் கதிர்வீச்சு சிகிச்சை

சிறப்பு அம்சங்கள்

- ரத்த இழப்பு இல்லை
- தழும்பு ஏற்படாது
- உடனே பழைய நிலைக்குத் திரும்பலாம்

BILLROTH HOSPITAL

24 HOURS SERVICE

43, லட்சுமி திரையரங்க சாலை, செனாய் நகர், சென்னை-600030. போன் : 6440020 / 6441777.

ஸ்ரீராம பக்த ஹனுமான்

எப்பேர்ப்பட்ட சக்தி படைத்தவனுக்கும் சோதனை வரத்தான் செய்யும்.

கடலைக் கடந்து பறக்க ஆரம்பித்த ஸ்ரீராம பக்த ஹனுமானுக்கும் வந்தது.

வான வீதியில் சென்று கொண்டிருந்தபோது, திடீரென்று மலை ஒன்று சமுத்திரத்திலிருந்து வெளிக் கிளம்பியது. ஹனுமானைத் தடுத்து நிறுத்திப் பேசியது "என் மீது தங்கி சற்று இளைப்பாறி விட்டுப் போயேன்..." என்றது.

மானிட உருவமே கொண்ட மைநாகம் என்ற மலை அது! ஹனுமானைப் பார்த்துப் பேசியது: "ஹே வானரோத்தமா! யாரும் செய்ய இயலாத ஒரு காரியத்தைச் செய்துள்ளாய் நீ! வல்லமை படைத்தவன்தான் நீ. ஆனாலும் என் சிகரத்தின் மீது சற்று நேரம் தங்கி இளைப்பாறி விட்டுப் போவாயாக.

"இந்த சமுத்திர ராஜன் இருக்கிறானே, அவன் ஸ்ரீ ராமனுடைய முன்னோர்களால் சீராட்டப் பெற்றவன் - அவன் சொல்லியிருக்கிறான். உனக்கு நான் உதவியாய் இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறான்.

"அது மட்டுமல்ல... மலைகளுக்கெல்லாம் சிறகுகள் இருந்த காலம் ஒன்று உண்டு. அந்த சமயத்தில் இந்திரன் தனது வஜ்ராயுதத்தைக் கொண்டு மலைகளின் சிறகுகளை வெட்ட ஆரம்பித்தான். அச் சமயம் எனது சிறகுகள் வெட்டப்படாமல் என்னைக் காத்து இந்தச் சமுத்திரத்தில் கொண்டு சேர்த்துவிட்டார் உன் தந்தை. நான் பாதுகாப்புடன் இங்கே இருந்து வருகிறேன்.

'அந்த நன்றிக்கடனைச் செலுத்த இப்போது உன்னை அழைக்கிறேன்... வந்து இளைப்பாறிச் செல்..." என்றது மைநாகம்.

கொண்ட காரியமே கருத்தாயிருந்த ஹனுமான், மைநாகத்தின் வேண்டுகோளைப் பணிவாக மறுத்தான். சீதையைத் தேடும் காரியத்தில் தனக்கிருந்த அவசரத்தை விளக்கிவிட்டு மேலே தொடர்ந்தான் -

பறந்தவாறு இருக்கையில் ஆகாசம் நிரம்ப குறுக்கிட்டாள் ஓர் அரக்கி! சுரஸை என்பது அவள் பெயர்! தன் வாயில் ஹனுமான் நுழைய வேண்டும் என்று வற்புறுத்தி வழி மறித்தாள்.

"இப்போது என்னைப் போக விடு; சீதையைக் கண்டு இவ்வழியே நான் திரும்புவேன். திரும்பிச் செல்லுகையில் நிச்சயமாக உன் சொல்படி செய்கிறேன்" என்றான் ஹனுமான்.

சுரஸை அவனை விடுவதாக இல்லை. வற்புறுத்தியவாறு இருந்தாள்.

வந்ததே ஹனுமானுக்குக் கோபம்! தனது சரீரத்தை

பெங்களூர் நகரில் சில ஹனுமார் ஆலயங்கள்

காரஞ்சி ஹனுமான் மிகவும் பிரசித்தமானவர். பசவங் குடியில், காந்தி பஜார் அருகே கோயில் கொண்டிருக்கிறார். பழமையான கோயில். அஜானுபாகுவாக சஞ்சீவி பர்வதத்தைத் தாங்கி நிற்கும் ஹனுமானின் அழகை வர்ணிக்க முடியாது.

- பனஸ்வாடி ஹனுமான் ரொம்பவும் சக்தி வாய்ந்தவர்.
- ராகிகுட்டா என்ற இடத்தில் வெண்ணெய், சந்தனக் காப்பு சாற்றுதல், பழங்களால் அலங்காரம் என்று பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வழிபடுவர் ஆஞ்சநேயரை.
- மஹாலக்ஷ்மி லே அவுட் என்ற இடத்தில் இருபது ஆண்டுகளுக்கு முன் மிகப் பெரிய உருவுடன் கோயில் கொண்டார் ஹனுமான். வெகு தூரத்திலிருந்தே கூட இவரைக் கண்டு சேவித்து விடலாம்!

அப்படியே விஸ்தரித்து, பத்து யோஜனை நீளமும், பத்து யோஜனை அகலமுமாகச் செய்துகொண்டான். சுரஸை ஒன்றும் சளைத்தவளல்ல... அவள் வாயை மேலும் பெரிதாக்கிக் கொண்டாள்! – இருபது யோஜனை அளவுக்கு அகன்றது அந்த வாய். ஹனுமான் பார்த்தான்; தன்னை முப்பது யோஜனை அளவுக்குப் பெரிதாக்கிக் கொண்டான். சுரஸை நாற்பது யோஜனை அளவுக்கு வாயை அகட்ட, இவன் ஐம்பது யோஜனைக்கு வளர,

இப்படியே தொடர்ந்தது போட்டி! இறுதியில் சுரஸை தனது வாயை நூறு யோஜனை அகலம் திறந்தாள். உடனே சமயோசிதத்துடன் ஹனுமான் ஒரு காரியம் செய்தான். சட்டென்று தன் உடலை கட்டை விரலளவுக்குச் சுருக்கிக் கொண்டு, அவளது குகை போன்ற வாயில் நுழைந்து சடாரென்று வெளிப்பட்டு விட்டான்!

ஏமாற்றப்பட்டாலும் சுரஸைக்குக் கோபம் வரவில்லை; மாறாக ஹனுமானின் சமயோஜிதத்தைக் கண்டு மகிழ்ச்சி! ஹனுமானை வாழ்த்தி, "சென்று, வென்று திரும்பு" என்று கூறி அனுப்பி வைத்தாள்.



சுரஸையாவது ஹனுமானை நேருக்கு நேர் நிறுத்தி சவால் விடுத்தாள். அடுத்து வந்த ஸிம்ஹிகை என்ற அரக்கி அவன் நிழலைப் பிடித்துத் தடுத்தாள். வானில் பறந்தவனது நிழல் கீழே நீரில் தெரிய, அதைப் பிடித்து வைத்து, அவன் மேலே செல்லாதவாறு தடுத்தாள். ஹனுமான் எந்த வித சிறப்பு முயற்சியும் இன்றியே அனாயாசமாக ஸிம்ஹிகையைக் கொன்று வீழ்த்தினான். இவ்வாறு இடையூறுகளை வென்ற மகிழ்ச்சியில் 'லம்பம்' என்ற மலையின் உச்சியில் போய் இறங்கினான். அங்கிருந்து பார்த்தபோது இலங்கா நகரம் தெரிந்தது!

சுந்தர காண்டத்தின் முதல் சர்க்கமானது இந்தக் கட்டத்தில் முடிகிறது. இந்த இடத்திலே வால்மீகி மிக அழகானதொரு செய்தியைக் கூறுகிறார் பாருங்கள்:

இலங்கைக்குள் ஹனுமான்

எப்படிப் புகுந்தானாம்?

இடது காலை எடுத்து வைத்துப் புகுந்தானாம்!

பிரயாணம் தொடங்கும்போதும் சரி, விவாஹம் கிருஹப் பிரவேசம் போன்றவற்றிலும் சரி, வலது காலை முதலில் வைத்துத்தானே உள்ளே நுழைய வேண்டும். ஆனால் விரோதிகள் வீட்டில் அதற்கு நேர்மாறாக இடது காலை வைத்து நுழைய வேண்டும்!

இந்த சாஸ்திர விதியை நன்கு உணர்ந்துதான் ஹனுமான் இலங்கை நகரத்துக்குள் இடது காலை எடுத்து வைத்துப் பிரவேசித்ததாகச் சொல்கிறார் வால்மீகி.

மற்றொரு சுவையான விஷயத்தையும் இங்கே கவனியுங்கள்: இலங்கைக்குள் செல்லுகையில் ஹனுமான் நேர் வழியாகப் போகவில்லையாம். 'அத்வாரேண' - நேர் வழி அல்லாத வழியில் நுழைகிறான். இது வால்மீகியின் கூற்று.

கம்பர் என்ன சொல்கிறார்...? ஹனுமான் வாயில் வழியே நுழையவில்லை; மதிலைக் கடந்து சென்றான் என்கிறார்.

இதுவும் சாஸ்திர விதியின்படி ஹனுமான் செய்த காரியம். விரோதியின் வீட்டுக்கு நேர்வழி அல்லாத வழியிலும் தர்மம் அறிந்த பெரியோர்களின் வீட்டுக்கு நேர் வழியிலும் செல்ல வேண்டும்!

அத்வாரேண ரிபோர்கேஹம்
த்வாரேண ஸுஹ்ருத் க்ருஹான்
ப்ரவிசந்தி நரா வீரா
த்வாராண்யேதாநி தர்மத:

- இதுதான் அந்த வடமொழி சுலோகம்.

மஹாபாரத நிகழ்ச்சி ஒன்று, இந்த சாஸ்திரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது:

கிருஷ்ண பரமாத்மா பீமசேனன், அர்ஜுனன் ஆகிய இருவருடன் அந்தண வேடத்தில் மகத மன்னன் ஜராஸந்தனைப் பார்க்கப் போகும்போது இவ்வாறு நேர்வழி அல்லாது வேறு வழியில்தான் நுழைந்து சென்றானாம் - வியாஸரே சொல்கிறார் இதை.

சரி, ஹனுமானிடம் திரும்பி வருவோம். இடது காலை எடுத்து வைத்து இலங்கைக்குள் நுழைந்தானே... நுழைந்தவனுக்கு இன்னொரு இடையூறு காத்திருந்தது!

தனது பெரிய உடலைச் சிறிய அளவாகச் சுருக்கிக் கொண்டு இலங்கைக்குள் நுழைந்தான் ஹனுமான். அங்கே இலங்காதேவி என்பவள் காவல் புரிந்து கொண்டிருந்தாள்.

தடுத்து நிறுத்தினாள் ஹனுமானை.

''யார் நீ?'' என்றாள்.

ஹனுமான் மிகுந்த பணிவோடு, ''இந்த இலங்கையைச் சுற்றிப் பார்க்க வந்தேன் நான்'' என்றான்.

''உன்னை உள்ளே விட மாட்டேன்!''

''நான் நொடியில் சுற்றிப் பார்த்துவிட்டுப் போய் விடுகிறேன்...''

- இப்படி ஹனுமான் சொல்லிக் கொண்டிருந்தபோதே அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்தாள் அந்த அரக்கி!

ஹனுமான் சற்றும் எதிர்பாராதது மட்டுமல்ல; அவன் முன் பின் அனுபவித்தறியாதது இத்தகைய தாக்குதல்!

ஒருகணம்தான் அந்த அதிர்ச்சி நீடித்தது. மறுகணம் ஹனுமான் தன் இடது கை விரல்களை மடக்கி இலங்கா தேவியை ஒரு

அருள்வாக்கு

சுபாவத்தில் நம்மில் யாருக்கும் பிறரை ஹிம்சித்துப் பார்க்க வேண்டும் என்று ஆசையில்லை. ஆனாலும் பிறர் ஏதாவது குற்றம் செய்வதாக நமக்குத் தோன்றினாலும் அல்லது நமக்கு அவர்கள் கெடுதல் செய்வதாகத் தோன்றினால் அவர்களுக்குப் பல விதத்தில் ஹிம்சை தர எண்ணுகிறோம். நம்முடைய சின்னஞ்சிறு குழந்தை தெரியாத்தனத்தால் நம் வீட்டில் நெருப்பு வைத்து விட்டால் குழந்தையை ஹிம்சிக்கிறோமா? அப்படிச் செய்ய மாட்டோம். நெருப்பை அணைக்கவே முற்படுவோம். மறுநாள் முதல் அந்தக் குழந்தை நெருப்பண்டை போகாமல் ரக்ஷிப்போம். நமக்குத் துன்பம் தருவதாகத் தோன்றுகிற எவரையும் அந்தக் குழந்தையாகவே பாவிக்க வேண்டும். மறுபடியும் தவறு செய்யாமல் அவரை அன்புடன் தடுத்து ரக்ஷிக்க வேண்டும். அவர் மீது த்வேஷம் பாராட்டி, பதிலுக்கு ஹிம்சை

தரக் கூடாது. இதுதான் உண்மையான அஹிம்சை.

இது நம் மனத்தை வசப் படுத்திக் கொள்ளும் யோகத் துக்கு மிகவும் பிரயோஜன மாகிறது. மனம் பூதம் போன் றது. ஆனால் பூதத்தை - வேதாளத்தை - விக்கிரமாதித் தன் வசப்படுத்திய பின் அது அவனுக்காக எவ்வளவு காரியம் செய்தது! அப் படியே வசப்பட்ட மனம் எவ்வளவோ நல்லதைச் செய்யும்.



யானை கட்டுப்படாவிட்டால் உல குக்கு உபத்திரவம்தான். ஆனால் கட்டுப் பட்டு விட்டால் எத்தனை நல்ல காரியங் களை அதன் மூலம் சாதிக்க முடிகிறது! யானை பலம் கொண்ட மனசைக் கட்டுப்படுத்தினாலும் எத்தனையோ நல்லதைச் செய்யலாம். ஆஞ்சநேய ஸ்வாமி மனோஜயம் செய்ததால்தான் அவ்வளவு சக்தி பெற்றிருந்து அத்தனை சத் காரியங்களைச் செய்தார். மனத்தின் சக்தி அபரிமித மானது இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் பராசக்தியின் ஒரு மனம்தான் சிருஷ்டித் திருக்கிறது. இந்தச் சிருஷ் டியில் இருக்கிற ஒரு சிறிய எறும்பின் சின்ன மனமோ இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் பாய்ந்தோடுகிறது!

'அஹிம்சையை அநுசரித் தேன், மனம் வசப்பட்டது' என்று எத் தனையோ மகான்களும், யோகிகளும் சொல்லியிருக்கிறார்கள். அஹிம்சை யினால் கோபம் போய், மனசானது அன்பில் தெளிந்து விடுவதால், அப்புறம் அதை வசப்படுத்துவது சுலபமாகி விடு கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

குத்து விட்டான். அவ்வளவுதான்! அவன் தலை சுற்றி மூர்ச்சையாகிவிட்டான்!

இந்த இடத்தில் வால்மீகி ஹனு மானைப் பற்றிக் குறிப்பிடும்போது அந்த வீர தீரத்தினிடையேயும் மிக சௌக்யமான ஒரு குணாம்சத்தைக் காட்டுகிறார்.

பெருங்குரல் ஒன்றை எழுப்பி அடித் தானாம் ஹனுமான். அந்தக் குரல் அவ் வளவு இனிமையாக இருந்ததாம் - **"நநாத ஸு மஹாநாதம்"** என்கிறார். வெறும் சாமான்யமான நாதம் அல்ல. ஸுநாதம் - அதாவது மிக ரம்மியமான ஒலி - அதுவும் ஸுமஹாநாதம் - உயரிய ரம்மியமான ஒலி.

மஹாநாதம் என்பது பெருங்குரல். பெருங்குரலானது எவ்வாறு ஸுநாதமாக இருக்க முடியும்? என்று கேட்கலாம்.

ஹனுமானுக்கு அது சாத்தியம் என் பதால்தான் வால்மீகி அவ்வாறு குறிப் பிட்டார். வாயுபுத்திரனான ஹனுமான் அபாரமான சங்கீத தேர்ச்சிப் பெற்றவன்.

அவனது சங்கீத ஞானத்தை ஸத்குரு தியாகராஜர் இயன்றவிடத்திலெல்லாம் தொட்டுக்காட்டியிருக்கிறார்.

'ஸங்கீத ஞானமு பக்திவினா...' என்கிற தன்யாஸி ராக கிருதியில் அனுபல்லவியில் ப்ருங்கி என்ற முனிவர், நடராஜப் பெரு மான், **ஹனுமான்**, அகஸ்தியர், மதங்கர், நாரதர் ஆகியோர் உபாஸனை செய்த ஸங்கீத ஞானம்' என்று குறிப்பிடுகிறார்.


'விதுலகு' என்ற மாயாமாளவ கௌளை ராக க்ருதியில் - 'சங்கீத உபாஸனை செய் தவர்களை வணங்குகிறேன்' என்று சொல் லும் அந்தப் பாடலில் ஹனுமான் பெய ரையும் இடம் பெறச் செய்திருக்கிறார். 'அமரேச, பரத, காச்யப, சண்முக, **ஆஞ்சநேய**, என்று சங்கீதத்தை உபா ஸித்தவர்களின் பெயர்களை அடுக்கு கிறார்.

ஆகவே, இப்பேர்ப்பட்ட உபாஸகரான ஆஞ்சநேயன் எழுப்பிய நாதத்தை 'ஸுமஹாநாதம்' என்று வால்மீகி குறிப் பிட்டதில் ஆச்சர்யமென்ன!

சரி, மூர்ச்சையடைந்த இலங்காதேவி என்னவாகினாள்...!

அதை நாம் அடுத்த வாரத்தில் பார்ப் போமே!

(வளரும்)



"நீங்க எப்பவாச்சும் அழுதிருக்கிறீங்களா?"

இவர் சிரித்தார்.

"நானா? எதுக்கு?" என்று மறுபடியும் சிரித்தார் பேராசிரியர் அறம்.

எந்த நிருபராவது இப்படி ஒரு கேள்வியை எப்போதாவது கேட்டிருப்பானா? இளப்பமான புன்னகை. இளங் கன்று. அனுபவம் போதாது; அதனால் தான் பேட்டி காண வந்தவன் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறான் என்ற நினைப்பு.

"தம்பியின் பெயர்?"

"காந்தி!"

"வித்தியாசமான பெயர். அதனாலே தான் கேள்வியும் ஒரு மாதிரியா...?"

"நான் தப்பா கேட்டுட்டேனா?" என்றான்.

"இல்ல. உங்க வாழ்க்கையிலே மறக்க முடியாத நிகழ்ச்சி எதுன்னுதான் வழக்கமா கேப்பாங்க..."

அதைத்தான் வேறு பாணியில் கேட்கிறேன் என்று சொல்ல நினைத்தான் இளைஞன் காந்தி. சொல்லவில்லை.

"தம்பி தொழிலுக்குப் புதுசா?"

"கொஞ்ச நாள் தான் ஆகிறது" என்றான்.

"சரி, என்ன எதிர்பார்க்கிறீங்க என்னிடம்...?"

ஓய்வு பெற்ற கல்வியாளர் பேராசிரியர் அறம் வாழ்க்கை அனுபவங்களை எழுதியிருக்கிறார். அறம் வெல்லும் என்ற அவருடைய நூலை முதலமைச்சர் வெளியிட பிரமுகர்கள் பாராட்டு வழங்கப் போகிறார்கள்.

சில நாட்களாகப் பத்திரிகைகளில் செய்தி வந்து கொண்டிருக்கிறது. அந்தச் செய்தியின் பின்னணியில் அவரைப் பேட்டி கண்டு கட்டுரை எழுதும் பொறுப்பை காந்தியிடம் ஒப்படைத்திருந்தார் ஆசிரியர்.

"என்ன கேக்கணுமோ கேளுங்க காந்தி!"

"கொஞ்ச முன்னாடி கேட்டேனே அந்தக் கேள்வியைத் தான்..." என்று மறுபடியும் ஆரம்பித்தான்.

அறம் யோசித்தார்.

"தம்பிக்கு வயது என்ன?"

"இருபத்தி நாலு..."

"நினைச்சேன். சரியாத்தான் இருக்கு."

இவருக்கு அறுபத்து நான்குக்கு மேல். பெரிய வித்தியாசம்.

அறம்

கட்டிவிட்ட உணர்வுடன் கடிதங்களைப் பிரிக்க ஆரம்பித்தார் அறம்.

"நான் கேட்ட கேள்விக்கு...?" சில நிமிட இடைவெளிக்குப் பிறகு தான் உட்கார்ந்திருப்பதை நினைவுபடுத்தினான் அவன்.

"பரவாயில்லை. தொழில்லே நல்லா முன்னுக்கு வரணும்னு நினைக்கிறீங்க, இல்லையா?"

"அந்த ஆசை ரொம்ப இருக்கு. இந்தத் தொழிலுக்கு என்னை அர்ப்பணிக்க முடிவு செய்திருக்கேன்."

காந்தியை ஏற



இறங்க ஒருமுறை பார்த்தார் அறம். பெயர் போடுவானா என்று சந்தேகிக்கத் தூண்டும் தோற்றம். உருப்படியாக எதையும் கேட்பான் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை.

இவருக்குத் தெரியாத மனதத்துவமா? கல்விக் கடல், இலக்கிய இமயம் என்று இவரைக் கொண்டாட ஒரு கூட்டமே இருக்கிறது. முப்பத்தைந்து வருட கல்விப் பணியில் அறத்தின் பார்வை பட்டு உயர்ந்தவர்களின் பட்டியல் கட்டுக்குள் அடங்கக் கூடியதல்ல. என்ன கேள்வி கேட்பாரோ என்று நாடி ஒடுங்கி இவர் எதிரில் உட்கார்ந்திருந்தவர்கள் எத்தனை பேர்!

காந்தியை மறுபடியும் பார்க்கத் தோன்றவில்லை. பேட்டி கண்டு பிரமாதமாக எதையும் எழுதுவான் என்ற நம்பிக்கை இருந்தால் அல்லவா பேசுவதற்கு! காந்தியை ஓரங்

"விவரம் தெரிஞ்சிக்கிற பாணியிலே கேள்வி இல்லையே!"

புரிந்து கொண்ட பாவனையில் காந்தி அவரைப் பார்த்தான்.

"நீங்க சத்திய சோதனை படிச்சிருக்கிறீங்களா?"

"அப்படி ஒரு புது நாவல் இப்ப வந்திருக்கா?"

"நாவல் இல்லீங்க. சுய சரித்திரம். காந்தி எழுதினது..."

"அதை இப்ப யாராவது நினைவிலே வச்சிருப்பாங்கன்னு நினைக்கிறீங்களா, தம்பி?"

ஜே.எம். சாலி

"ஆனா நீங்க அதை..."

"சின்ன வயசிலே படிச்சிருக்கேன்..."

"உங்களுடைய அறம் வெல்லும் அது மாதிரி இருக்குமா?"

கேள்வி புரியவில்லை என்றார்.

"இறந்த புத்தகம்னு சத்திய சோதனை பேசப்படுவது. அதைப்போல..."

சத்திய சோதனையை தம்முடன் எதற்காக இவன் முடிச்சு போடுகிறான் என்று சற்றே யோசித்தார் அறம்.

"தலைப்பு அற்புதமா இருக்கு. அதை எப்படித் தேர்ந்தெடுத்தீங்க? நாலு வார்த்தை சொன்னா நல்லா இருக்கும்..."

"ராமாயணம் படிச்சிருக்கிறியா தம்பி?"

கொஞ்ச நஞ்சம் என்றான்.

"ஆறாயிரம் பாட்டு இருந்தாலும் அறம் வெல்லும் என்பதுதான் அடிப்படைக் கருத்து."

"ஆமாங்க. அறம் வெல்லும்; பாவம் தோற்கும்னு சுந்தர காண்டத்திலே வருது. எங்க தமிழாசிரியர் சொல்லித் தந்தது நினைவுக்கு வருதுங்க. சத்யமேவ ஜயதேன்னு வடக்கேயும்..."

இந்தக் காந்தி கொஞ்சம் விஷயதாரியாக இருக்க வேண்டும் என்று இப்போது இவருக்குப் பட்டது.

"சத்தியம் ஜெயிக்கும் என்ற தத்துவத்துக்கு உங்க புத்தகம் விளக்கமாக இருக்கும்னு நினைக்கிறேன். அதைப் பத்தி?"

அது வெளிவரும்வரை பொறுத்திருப்பது நல்லது என்றார் அறம்.

ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆகியும் பேராசிரியர் அறத்திடம் போதிய தகவல்களைப் பெற முடியவில்லை என்ற குறை காந்தியை உறுத்தியது.

புத்தகப் பிரதி கிடைத்தால் சில பகுதிகளைப் பயன்படுத்த வசதியாக இருக்கும் என்று கேட்டுப் பார்த்தான். சாத்தியம் இல்லை என்று கையை விரித்து விட்டார் அறம்.

"உயர்ந்த பதவிகளை அலங்கரித்து ஓய்வு பெற்றிருக்கிறீர்கள். உங்களால் உருவாக்கப் பட்டவர்களைப் பற்றி..."

விரிவாகவே சில அத்தியாயங்களில் எழுதியிருப்பதாகச் சொன்னார். விடை கிடைக்கவில்லை.

"முன்னைய அமைச்சர்கள், வாரியத் தலைவர் இன்னும் பலர் உங்கள் வழிகாட்டுதலின் பேரில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் என்று படித்திருக்கிறோம்...."

இசைவாகத் தலை அசைத்தார் அறம்.

''அரசியல்வாதிய கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பா போச்சுடி!''

''ஏண்டி?''

''தலை தீபாவளிக்கு எங்க வீட்டுக்கு வரணும்னா கட் அவுட்டு, அலங்கார வளைவெல்லாம் வெச்சாதான் வருவேன்னு அடம்பிடிக்கிறார்டி!''

– ரெவி

ஆராய்ச்சியை முடிக்காமல் பாதியில் போனவர்கள் உண்டு அல்லவா என்று அடுத்தக் கேள்வியை காந்தி தொடுத்த போது அறம் நிமிர்ந்தார்.

இந்தக் கேள்வி அவசியந்தானா என்று கேட்பது போல் ஆழமான பார்வை.

அவன் எழுந்து போகலாம் எனும் பாவனையில் மறுபடியும் சுடிதங்களில் பார்வையை ஓட்டினார் அறம்.

காந்தி பொறுமை இழக்கவில்லை. இன்னும் சிலவற்றைக் கேட்க வேண்டியிருக்கிறது. அறம் இடம் தர மாட்டார் என்பது உறுதியாகிவிட்டது.

இரண்டு நிமிட மௌன ஒத்திகைக்குப் பிறகு அரங்கேற்றம்.

தனக்காக இவ்வளவு நேரம் ஒதுக்கியதற்கு நன்றி சொன்னான்.

குறிப்புப் புத்தகத்தைக் கைப் பையில் திணிக்க முயன்றபோது சில புகைப்படங்கள் நழுவி விழுந்தன. ஒத்திகையா?

காந்தி குனிந்து எடுத்த சமயம் அறத்தின் பார்வையும் படங்களில் குவிந்தது.

"போபால் மணியை பேட்டி எடுத்தேன். அப்ப எடுத்த படங்கள். ஒரு நல்ல பேட்டி கிடைச்சது..."

காந்தியையும் கையில் அவன் வைத்திருந்த படங்களையும் மாறிமாறி கவனித்தார் அறம்.

"போபால் மணியின் கதை சுவாரசியமா இருக்கு. அவர் ரொம்ப வித்தியாசமானவர்."

"யார் அவர்?" எதிர்பாராமல் வாய்விட்டுக் கேட்டுவிட்டார் அறம்.

"நம்ம ஊர்க்காரர்தான். அங்கே வியாபாரி..."

அறம் சற்று யோசிப்பது போல் தெரிந்தது. பிறகு தொடரும்படி பச்சை விளக்கு காட்டினார்.

"மணி யுனிவர்சிட்டியிலே படிச்சவர். ராங்க் எடுத்து பாஸ் பண்ணி ரிசர்ச் கூட செய்திருக்கிறார். அவர் சொன்ன விஷயங்



கள் சுவாரசியமான கதை மாதிரி..."

"அப்படி என்ன சொன்னார்?"- கடிதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு காந்தியைக் கேட்கத் தொடங்கினார் அறம்.

மணி ஆராய்ச்சி மாணவனாகப் பதிவு செய்து கொண்டு மறுபடியும் நகரத்துக்கு வந்தபோது இளம் மனைவி பத்மினியும் சேர்ந்து கொண்டாள். 'எத்தனை பட்டம் வேண்டுமானாலும் வாங்கு. அதுக்கு முன்னாடி எங்களுக்கு மாமியார், மாமனார் பட்டம் வேண்டும்' என்ற நிபந்தனையுடன் பத்மினியை அவனிடம் பிடித்துக் கொடுத்து விட்டார்கள்.

தனிக் குடித்தனம்.

"உன்னைப் பத்தி ஆராய்ச்சி பண்ணலாம் போல இருக்கு, பத்மினி..."

"என்ன இருக்கு எங்கிட்ட, அப்படி?"

"நீ என்ன ஜாதின்னு யோசிக்கிறேன்..."

"ஜாதியில உங்களுக்கு ரொம்ப நம்பிக்கையா?"

மணிக்குச் சிரிப்பு.

"நான் சொல்ல வந்தது பெண் சாதி."

"பெண் ஜாதி, ஆண் ஜாதி, இதுல என்ன இருக்கு ஆராய்ச்சிக்கு?"

"அத்தினி, சங்கினி, சித்தினி,பத்மினி..."

"இவ்வளவு பெண்கள் உங்களுக்குப் பரிச்சயமா?"

மறுபடியும் மணிக்குச் சிரிப்பு.

"பெண்கள்லே நாலுவகை. லட்சணத்தை வச்சி அவங்களை இப்படிப் பிரிச்சிருக்காங்க. உனக்குப் பத்மினின்னு எப்படிப் பேர் வச்சாங்கன்னு ஆச்சரியமா இருக்கு..."

"இப்பத்தான் உங்களைப் பத்தி புரியுது..."

"நான் எப்பவோ புரிஞ்சுக்கிட்டேன். அதனாலே தான் ஆராய்ச்சி, அழகைப் பத்தி... அங்க லட்சணத்தைப் பத்தி..."

பத்மினி அப்படித்தான் இருந்தாள்.

"நீ முதல் வகுப்பு பத்மினி..."

"முதல்ல நீங்க படிப்பை முடிக்கிறதைப் பாருங்க..."

"டாக்டர் பட்டம், பேராசிரியர் பதவி... எல்லாம் நடக்கத் தானே போகுது..."

மணியின் கதையை காந்தி கொஞ்சம் நிறுத்தியதும் அறம் அவனைத் தூண்டினார்.

மணி பாதிக்கு மேல் ஆராய்ச்சியை முடித்திருந்தான். அப்போதுதான் ஒரு கண்டம்.

அவனுடைய மேற்பார்வையாளர் தனியே அழைத்தார்.

"நீ பெரிய அதிர்ஷ்டசாலிப்பா..."

"ஏன் அப்படிச் சொல்றீங்க புரொபசர்?"

"ரதி மன்மதன்னு படிச்சிருக்கிறோம். கற்பனை பண்ணுறோம். ஆனா, அவங்களை நேர்ல பாக்கணும்னா..."

மணிக்கு விளங்கவில்லை.

"போன வாரம் நம்ம டிபார்ட்மெண்ட் நிகழ்ச்சிக்கு அழைச்சிட்டு வந்தியே. உன் மனைவி பத்மினியைத்தான் சொல்றேன்."

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது தெரியாமல் குழம்பினான்.

"பெயர் ரொம்ப பொருத்தம். ரதி மாதிரி அழகு.. அப்படித்தான் சொல்லத் தோணுது. நீ குடுத்து வச்ச மன்மதன்..."

மணிக்கு மேலும் குழப்பம்.

"ரிசர்ச் செய்றே... விவரம் புரியாத ஆளா இருக்கிறியே... எனக்கு எப்ப விருந்து தரப் போறே?"

அவர் பேச்சில் கிள்ளல் துள்ளல்.

"சொல்லி வக்கிறேன், உன் வசதி..."

கொஞ்சம் புரிந்தது. சில நாள் மௌனத்தில் முறிந்தது. தன்னுடைய வழிகாட்டியான அவரை அடையாளம் கண்டு கொண்டான். இன்னும் சில மாதம் அவரிடம் பெயர் போட்டால்தான் டாக்டர் பட்டம். அது வரை அவருக்குப் பணிந்து, கட்டுப்பட்டு, காணிக்கை செலுத்தி...

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு மறுபடியும் புரொபசரின் அழைப்பு.

"என்னப்பா பேச்சு மூச்சே இல்லை?"

பேசத் தோன்றாமல் நின்றான் மணி.

"நான் சொன்னதை மறந்திட்டியா? பத்மினியை எப்ப நான் பாக்கலாம்? அழைச்சாலும் சரி... அனுப்பினாலும் சரி..."

இடைவெளி.

மணியின் கதைக்குக் காந்தி வைத்த அரைப்புள்ளி அறத்துக்கு ஆச்சரியக் குறி போல் இருந்தது.

உச்ச கட்டத்தில் நிறுத்தினால் எப்படி என்று வினவும் பார்வை.

படையப்பா விழாவான பழரச விழா!

ஓமன் தேசிய பால் பொருட்கள் நிறுவனத்தின் ஐஸ்க்ரீம்கள், பழரசங்கள் வளைகுடா நாடுகளில் மிகவும் பிரசித்தம். இந்த நிறுவனத்தின் தயாரிப்புகளை தமிழகத்தில் விநியோகிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள் 'பாண்டியன்' அண்ணாமலைச் செட்டியார் நிறுவனத்தினர். இது தொடர்பான விற்பனை துவக்க விழாவில் ரம்யாகிருஷ்ணன், எஸ்.பி. முத்துராமன், முன்னாள் அமைச்சர் ராசாராம் கலந்து கொண்டார்கள். பழரசத்தின் பெருமைகளை விட 'படையப்பா' நீலாம்பரி பற்றியப் பேச்சே விழாவில் அதிகமாக இருந்தது.



• விழாவில்....

''ரஜினிக்கு ரொம்பவும்தான் பெருந்தன்மை. தனக்கு கொடுமைகள் இழைத்த நீலாம்பரியை ஆத்திரத்தில் கொலை செய்யும் வகையில் கதையை அமைக்காது, அவளே தற்கொலை செய்து கொள்ளுமளவுக்கு காட்சிகளை அமைத்திருந்தார். நான் இயக்குனராக இருந்திருந்தால் அவ்வாறு காட்சி அமைத்திருப்பேனா என்பது சந்தேகமே. 'பெண்ணைக் கொலை செய்வது ஆணுக்கு அழகல்ல' என்ற கருத்தின் அடிப்படையில் திரைக்கதையை அமைத்து பெண்களின் பாராட்டு மழையையும் பெற்றுவிட்டார் ரஜினி'' என்றார் எஸ்.பி. முத்துராமன்! ''ரஜினியை விட ஸ்கோர் செய்தவர் ரம்யாகிருஷ்ணன்தான்'' என்றார் ராசாராம். மொத்தத்தில் பழரச விழா 'படையப்பா' விமர்சன விழாவாக முடிந்தது.

– கௌசி

படம்: ராஜன்

''நீ ஒன்னும் சொல்ல மாட்ட போல...'' குருதட்சனை கேட்கிறார். மறுத்தால் எதிர்காலம் மண்.

''என்ன யோசிக்கிறே? நீ ரிசர்ச் ஸ்டுடண்ட். சாமானிய சைக்காலஜி கூட தெரியலேன்னா பட்டம் வாங்கி என்ன பலன் அடைய முடியும்னு நினைக்கிறே! நிஜ உலகத்துக்கு இறங்கி வாப்பா...''

யதார்த்த நிலைக்கு வர மணிக்குப் பல நிமிடம் ஆயிற்று. அவன் வட்டத்துக்குள் வந்து விட்டான் என்பதை உணர்ந்து கொண்டார் வழிகாட்டிப் பேராசிரியர். மனசில் கிளுகிளுப்பு. 'பத்மினி... பத்மினி...' வானம்பாடியாய் இன்பச் சிறகடிப்பு.

அடுத்த நிமிடம்.

மணி குனிந்தான். பிறகு நிமிர்ந்தான்.

சுவரில் ஆணி அறையும் வேகத்தில் அடி. இடி.

மணி துவைத்து எடுத்தான்.

காணிக்கை. உபயம். கையில் பிடித்த செருப்புக்கு ஓய்வில்லை.

''நில்லுடா... நிறுத்துடா... போலீஸை இப்பவே கூப்பிடுறேன்....''

போபால் மணி கதையின் உச்சகட்டம் இதுதான் என்று காந்தி நிறுத்தியதும் அறம் ஆடிப்போனது போல் தெரிந்தது.

''டாக்டர் பட்டமும் வேணாம் மண்ணாங்கட்டியும் வேணாம். நல்ல மனிதனா இருந்தா போதும்னு அன்னிக்கே படிப்புக்கு மூட்டை கட்டிட்டாராம் மணி. போபாலுக்குப் போய் தொழில் ஆரம்பிச்சி...''

அறத்திடமிருந்து எதிரொலி இல்லை.

''பேட்டி கண்டப்ப நானும் எத்தனையோ கொக்கிப் போட்டுப் பாத்தேன். அந்தப் பேராசிரியர் யாருன்னு சொல்ல மறுத்திட்டார் மணி. நேரம் வரும் போது நீயே தெரிஞ்சுக்குவேன்னு சொல்லிட்டார். கடைசியா சொன்னார் பாவம் தோற்கும்னு...''

பேட்டி காண வந்த தன்னை பேசவிட்டு விட்டு பேராசிரியர் அறம் மௌனம் காப்பது வியப்பாகத்தான் இருந்தது.

''பல வருஷங்களுக்கு முன்னாலே ஆராய்ச்சி மாணவரா இருந்த அவருடைய முழுப் பெயர் மணிவண்ணன். சொந்த ஊர் மயிலாடுதுறை. ஒரு வேளை உங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாம். இதோ இந்தப் போட்டோவைப் பாருங்க...''

படத்தை அவர் அருகில் தூக்கிப் பிடித்தான். அதைப் பார்க்க அறத்துக்கு அவசியம் இருக்கவில்லை. முகத்தில் மூட்டம். கண்ணிலிருந்து நீரோட்டம்.

''எப்பவாச்சும் நீங்க அழுதிருக்கிறீங்களா?''

அந்தக் கேள்விக்குப் பதில் கிடைத்து விட்டது.

காந்திக்குச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. ○


• என். ஜமாலுதின்


• எஸ். புஷ்பவனம்

தவிக்கும் திருச்சி!

மாதம் ஒரு மாநாடு, வாரம் மூன்று பேரணி என்று அமர்க்களப்படுகிறது தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சி மாநகரம்! அரசியல் கட்சிகள், சாதிச் சங்கங்கள், பிற அமைப்புகள் தத்தமது மாநாடுகள் மற்றும் ஊர்வலங்களை நடத்திக் கொள்ள சென்னையை அடுத்து பெரும்பாலும் திருச்சி மாநகரையே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன.

திருச்சி அவர்களது பலத்தை நிரூபிக்கும் களமாக இருக்கிறதாம்! அது சரி; இதில் தினமும் நொந்து நூலாவது பொதுமக்கள் தானே!

''மக்களுக்காகச் சேவை செய்வதே நோக்கமாகக் கூறும் அரசியல் கட்சிகள் மக்களுக்கு இடைஞ்சல் தருவதை எப்படி சேவையாகக் கருத முடியும்?. இதெல்லாம் பொதுமக்களுக்கு மிகுந்த எரிச்சலையே தருகின்றன. அரசியல் கட்சிகளும், சாதிச் சங்கங்களும் எந்த நேரத்தில் ஊர்வலம் போனால் பொதுமக்களோட கவனத்தைப் பெற முடியும், எந்த இடத்தில் கூட்டம் போட்டால் அதிகமாக மக்கள் வருவாங்கன்னு முடிவு செய்துதான் இது போன்ற மாநாடுகளையும், பேரணிகளையும் நடத்தறாங்க. இது அவங்களோட ஜனநாயக உரிமைனாலும் பொதுமக்களுக்குத் தொந்தரவு தராமல் தங்களது உரிமையைப் பயன் படுத்த வேண்டியதுதானே? பொதுக்கூட்டங்களுக்குத் தென்னூர், உழவர் சந்தைக்கு எதிரே உள்ள திடலில் மட்டுமே அனுமதி தரலாம். கண்ட இடங்களிலும் ரோட்டுல குழி தோண்டி மேடை போடறது, வரவேற்பு வளைவுகள் இதையெல்லாம் முழுமையாகத் தடை செய்யணும். பேரணிகளும், ஊர்வலங்களும் மாலை ஆறு மணிக்குத் துவங்கி இரவு ஒன்பது மணிக்கு முடியற மாதிரி அமைச்சுக்கணும்'' என்கிறார் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் செயலாளர் திருச்சி எஸ். புஷ்பவனம்.

"**இ**ந்த மாதிரி பேரணிகளால வேலை நாட்களில் அடிக்கடி போக்குவரத்தை மாற்றி விடுவதால் பொதுமக்களின் உரிமைகள் பாதிக்கப்படுவதோடு மாணவ - மாணவிகள், வெளியூர்ப் பயணிகள் அதிலும் குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்களது வீடுகளுக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குள் போக முடிவதில்லை. இவ்வளவு ஏன்? நகரின் மையப்பகுதியில் திடீரென உயிருக்குப் போராடும் ஒருவரை உடனடி சிகிச்சைக்காக உரிய நேரத்திற்குள் மருத்துவமனைக்குக் கொண்டு போக முடியாத சோகமும் நிகழ்ந்து போகிறது. இதுக்கு ஏதாவது மாற்று வழி காணறதுதான் மக்களுக்குத் தொல்லையில்லாம இருக்கும். இதை அரசும் அதிகாரிகளும்தான் கவனிக்க வேண்டும்'' என்கிறார் தமிழ்நாடு உபயோகிப்பாளர் உரிமைக்கழக மாநிலத் தலைவர் என். ஜமாலுதின்.

— திருநாவு

அக்னிசர்மா பக்கம்

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

இந்த வாரம் மஜாதான். நீங்க என்னென்ன நினைச்சிங்களோ அதெல்லாம் நடக்கும். மனசுக்கு சுகமான நிகழ்ச்சிகள் நடக்கப் போகுது. ரொம்ப சந்தோஷம் வந்து முட்டற மாதிரி ஒரு ஃபீலிங் இருக்கும். முக்கிய பொறுப்புகள் வந்து சேர வாய்ப்பிருக்கு. எதிர்பார்த்துட்டு இருங்க. பொருளாதாரப் பிரச்னை ஏதுமிருக்காது. இருந்தாலும் செலவு கட்டுக் கடங்காது. கவனமா செலவழிங்க. குடும்பத்துல சின்னச் சின்னப் பிரச்னைகள் எட்டிப் பார்க்கலாம். பொறுமையை கையாண்டாச் சமாளிக்கலாம். கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கையா இருங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குச் சொல்லிக் கொள்ற மாதிரி பலன் இல்லை. வெளிநாட்டுல இருந்து உற்சாகம் தர்ற மாதிரி நல்ல செய்தி வரும். பேச்சில நிதானம் அவசியம்.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் எதிலயும் எச்சரிக்கையா இருக்கறது நல்லது. வீண் பிரச்னைகளில் மாட்டிக்காதீங்க. பக்கத்துல சண்டை நடந்தா பத்தடி தள்ளிப் போறது நல்லது. பணப் பிரச்னை சொல்லும்படியா இல்லை. கொடுக்கல் வாங்கல்ல கவனம் அவசியம். அரசியல்வாதிகளுக்குத் திடீர் அதிர்ஷ்டம் அடிக்க வாய்ப்பிருக்கு. பேச்சில கடுமையை கைவிடறது நல்லது. எதிலயும் அவசரம், பதற்றம் வேண்டாம். புதுசா வர்றவங்ககிட்ட எச்சரிக்கையா பழகுங்க. சாப்பாட்டு விஷயத்துல கொஞ்சம் வாயைக் கட்டிக்கிறது நல்லது. வயிறு சம்மந்தமான நோய்கள் வர வாய்ப்பிருக்கு.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

உங்களோட செல்வாக்கு உயரப் போகுது. மரியாதை, புகழுக்கெல்லாம் பஞ்சமே இல்லை. எதிரிகள் விலகி ஓடுவாங்க. உங்களோட திட்டங்கள் எண்ணங்கள் எல்லாம் அப்படியே நிறைவேறும். இழுபறியா இருந்த காரியம்கூட இப்ப முடிஞ்சுடும். கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு உற்சாகம் கரைபுரண்டு ஓடும். பாராட்டு, புகழ் மாலை குவியும். பெண்கள் புதுசா ட்ரெஸ், நகைகள் வாங்க வாய்ப்பிருக்கு. அலைச்சலைத் தவிர்க்கறது நல்லது. அரசியல்வாதிகள் அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிடாதீங்க. பின்னால பிரச்னைகள் வரலாம். உடல் நலன்லயும் கொஞ்சம் கவனம் வையுங்க.

கடகம் : *புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்கத் திறமை பளிச்சிடற வாரம். உங்களோட அழகு திடீர்னு கூடும். உற்சாகமா இருப்பீங்க. அரசியல்வாதிகளுக்குப் பாராட்டுக் கூட்டங்கள் நடத்த வாய்ப்பிருக்கு. சிலர் வியாபாரத்துல இறங்கறதுக்குச் சந்தர்ப்பம் இருக்கு. கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு உற்சாகமான வாரம். புகழ் குவியும். கணவன் மனைவிக்குள்ள இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் சுமுகமா முடியும். பெண்கள் புதுசா உடைகள், நகைகள் வாங்க வாய்ப்பிருக்கு. எதிலயும் அவசரம், பதற்றம் கூடாது. ஆடம்பர செலவுகளைத் தவிர்க்கறது நல்லது.

நடக்குமென்பார்,

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்க திறமை 'ஜில்'லுனு உயரும். மத்தவங்க பொறாமை படலாம். சினிமா, கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பாராட்டு புகழ் கூடும். பொருளாதாரத்துலப் பிரச்னை இல்லை. பணம் பலவழிகள்ல இருந்து வரும். வீட்ல நல்ல காரியம் நடக்க வாய்ப்பிருக்கு. 'எப்படா வரும்னு' எதிர்பார்த்திட்டிருந்த நல்ல தகவல் இப்ப வந்து மனசை மகிழ்விக்கும். வெளி நாட்டுக்குப் போற மாதிரியான நிலைமை இருந்தகுன்னா இப்ப நிறைவேறும். எதிலயும் அவசரம், பதற்றம் வேண்டாம். பேச்சில கடுமையை குறைச்சுடுங்க. வியாபாரத்துல முதலீடு செய்யறதா இருந்த இப்ப வேண்டாம். நெருப்பு, மின்சாரம் தொடர்பான வேலை பார்க்கறவங்க எச்சரிக்கையா இருக்கறது நல்லது.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உங்களோட மதிப்பு, செல்வாக்கு உயரும். புதிய முயற்சித் திட்டம் இப்ப நிறைவேற வாய்ப்பிருக்கு. வருமானம் பல வழிகள்ல இருந்து வரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பாராட்டு, புகழுக்குப் பஞ்சமிருக்காது. புது ஒப்பந்தங்கள் தேடி வரலாம். எதிர்ப்

அக்டோபர் 18 முதல் 24 வரை

புகள் குறையும். பக்கத்துல சண்டை நடந்தா தூர ஓடிப் போறது நல்லது. உடல்நலன்ல கவனம் வையுங்க. உஷ்ண சம்மந்தமான வியாதிகள் வரலாம்.

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

இந்த வாரம் பணப் பிரச்னை இல்லை. கொடுக்கல் வாங்கல் திருப்தியா இருக்கும். அதுக்காக செலவு அதிகமா பண்ணாதீங்க. பின்னால தேவைபடும். சட்டம், இராணுவம், காவல் துறைகள்ல வேலை பார்க்கறவங்களுக்கு இந்த வாரம் நல்ல பலன் உண்டு. புதுசா வீடு, மனை வாங்கற யோகம் இருக்கு. வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமா திடீர் திருப்பம் வரலாம். கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு உற்சாகம் கரை

நடக்கும்!

புரண்டு ஓடும். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரலாம். உடல் நலன்ல கவனம் வைக்கறது நல்லது.

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்களோட திறமை, சாமர்த்தியம் வெளிப்படற நேரம் இது. எதிர்ப்புகள் இருக்காது. எந்தக் காரியத்தையும் எப்படியாவது முடிச்சிடணும்னு நினைப்பீங்க. அரசியல்வாதிகள் போட்டிருக்கிற திட்டம் இப்போ நிறைவேறும் புதுசா ஏதாவது பதவி பட்டம் தேடி வர வாய்ப்பிருக்கு. சினிமா கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டுக் கூடும். கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கையா இருங்க. புதியவங்ககிட்ட பேசும்போது கவனமா பேசுங்க. அனாவசியமா வார்த்தையை விடாதீங்க. அது பிரச்னைல முடியலாம்.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

உங்கப் புத்திக் கூர்மையை பார்த்து இந்த வாரம் பலர் பொறாமை படலாம். உங்க திறமையை எல்லாரும் பாராட்டுவாங்க. வேலை இல்லாதவங்களுக்கு வேலை வாய்ப்புத் தேடி வரும். ஆபீஸ்ல சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்பிருக்கு. அரசியல்வாதிகளுக்குப் பாராட்டுக் கூட்டம் நடக்கும். மகிழ்ச்சிக் கடல்ல திளைப்பீங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் மாலை விழும். எதிர்ப்புகள் இருக்காது. பெண்கள் புதுசா ட்ரெஸ், நகைகள் வாங்க வாய்ப்பிருக்கு. வீண் அலைச்சல் அதிகமா இருக்கும். வெளியூர் பயணத்தைத் தவிர்த்திடறது நல்லது.

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரலாம். உங்க மனசு சந்தோஷமா இருக்கற மாதிரியான சம்பவங்கள் நடக்கும். கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு உண்டு. பெண்கள் கணவரோடு வெளியூர் சுற்ற சந்தர்ப்பம் வரலாம். உடல் நலன்ல கவனம் வைக்கறது நல்லது. வீண் வாக்குவாதத்தை விட்டுடுங்க. வம்பு வழக்குகள்ல தலையிடாம இருக்கறது நல்லது. தேவையில்லாத பயம், குழப்பம் வந்து அடிக்கடி இம்சை பண்ணும். மின்சாரம், நெருப்பு தொடர்பான வேலை பார்க்கறவங்க எச்சரிக்கையா செயல்படறது நல்லது.

விருச்சிக ராசிக்காரரான டீ.வி நடிகை சௌபர்ணிகாவுக்குப் புகழ் பாராட்டுக் கூடுமாம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு இந்த வாரம் மகிழ்ச்சியா இருக்கும். புகழ் கூடும். திடீர்னு மனசு ஆன்மீகம் பக்கம் இழுக்கும். கோயில்களுக்குப் போக வாய்ப்பிருக்கு. மனசுல சின்ன சின்னப் பிரச்னைகள் வந்து இம்சை பண்ணும். கவலைப்படாதீங்க. பெண்களுக்கு உற்சாகமான நிலை ஏற்படும். கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கையா இருக்கறது நல்லது. உடல் நலத்துல கவனம் வையுங்க. உஷ்ண சம்பந்தமான வியாதிகள் வர வாய்ப்பிருக்கு.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

இதுவரை இருந்து வந்த பொருளாதார பிரச்னை இப்ப தீரும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. அதுக்காக கண்டபடி செலவழிக்காதீங்க. சட்டம், இராணுவம், காவல் துறைகள்ல வேலை பார்க்கறவங்க முன்னேற்றத்துக்கான வாய்ப்பிருக்கு. குடும்பத்துல அமைதி நிலவும். கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றி வாய்ப்பு கூடும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். மனசுல தெளிவும் தன்னம்பிக்கையும் பிறக்கும். அலைச்சல் அதிகமா இருக்கும். குறைச்சுக்குங்க. வம்பு வழக்குகள்ல தலையிடாம இருக்கறது நல்லது.



கணவனை 'மாமு' என்றும், மனைவியை 'மச்சி' என்றும் கூப்பிடும் அன்யோன்யமான தம்பதி பார்த்திபனும், திவ்யா உன்னியும். திவ்யா ஒருநாள் திடீரென்று தூக்கில் தொங்க, அவரது சாவு தற்கொலையா, கொலையா என்ற ஒரு வரித் திரில்லர் கதையை இயக்குனர் தேர்வு செய்திருக்கிறார். பார்த்திபன் வீட்டிற்குள் திருட்டுப் பார்வை பார்த்தபடி ரஞ்சித் நுழைய, உத்திரத்தில் பிணமாகத் தொங்கிக் கொண்டிருக்கும் திவ்யா உன்னியைப் பார்த்து அவர் அதிர்ந்து போகும் நேரத்தில், கண் தெரியாத பார்த்திபன் தூங்கி எழுந்து மனைவியைத் தேடிக் கொண்டு வர, படத்தின் தொடக்கமே நிமிர்ந்து உட்கார வைக்கிறது.

போஸ்ட் மார்டம் ரிப்போர்ட்டை வைத்து தற்கொலைதான் என போலீஸ் ஃபைலை மூடிவிட மனைவியின் சாவில் சந்தேகம் இருப்பதாக பார்த்திபன் அழ, போலீஸ் மறுபடியும் தோண்ட, புதைத்த இடத்தில் பிணம் மிஸ்ஸிங்!

கார் விபத்தில் கண் பார்வை இழந்த பார்த்திபனுக்குத் திரும்பவும் கண் பார்வை வந்து விடுகிறது. இருந்தும் வேண்டுமென்றே குருடனைப் போல் நடிக்கிறார் என்று வரிசையாய்ப் பல திருப்பங்கள். இறுதியில் ரஞ்சித்தான் கொலையாளி என்று அவருக்கு ஆயுள் தண்டனை கிடைக்கிறது. உண்மையில் அவர் கொலையாளி அல்ல. பிறகு எப்படி அவர் மாட்டிக் கொண்டார் என்பதை கொஞ்சம் இழுவையான திரைக்கதை மூலம் சொல்லியிருக்கிறார்கள்.

மழை பெய்து கொண்டிருக்கும் நேரத்தில் பெண் பார்க்கப் போய் பார்த்திபன் காத்திருக்க, ட்யூசன் முடிந்து வரும் திவ்யா மழை நீரில் வழுக்கி பார்த்திபனின் மடியில் விழுகிறார். உடன் ஆப்ரிக்காவில் போய் இருவரும் ஆடி விட்டு வருவது அக்மார்க் மசாலா உத்தி!


எடக்கு மடக்காகப் பேசும் பார்த்திபன்தான் இதிலும் வலம் வருகிறார் என்றாலும், பிணமாகிக் கிடக்கும் மனைவியின் கால்களைப் பிடித்துக் கொண்டு 'நான் என்னம்மா தப்பு செஞ்சேன்' என்று நிஜமாகவே கதறுகிறார். ஆனால் ரஞ்சித் ஓவர் ஆக்டிங் இல்லாமல் நடிப்பில் எல்லோரையும் ஓவர்டேக் செய்து விடுகிறார்...

பின்னணி இசையில் ஜமாய்க்கும் தேவா பாடல்களில் கோட்டை விட்டு விட்டார்.

பார்த்திபனுக்குக் கண் தெரியுமா? என்ற சந்தேகம் வந்த பிறகு அதை உறுதி செய்து கொள்ள ரஞ்சித், பார்த்திபன் ஆடும் ஆடுபுலி ஆட்டங்களை ரசித்துவிட்டு வரலாம். மற்றபடி கொட்டாவி விட்டபடிதான் சபாஷுக்கு சபாஷ் சொல்ல யோசிக்கத்தான் வேண்டியிருக்கிறது.

— விஷுவல்தாசன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)


இயற்கையின் பரிசு இணையற்ற சந்தனம்
GOKUL
SANTOL
TALC
GOKUL
SANTOL
TALC

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka